பொதுசன நூலகம்
தாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAROLI

வார மலர்



முள்ளி வாய்க்காலும் முள்ளுக் கம்பி வேலியும்

யாழ்ப்பாணத்துக்கு வரும் விருந்தாளிகள்



ஒரு வெடி குண்டும் சில தளிர்களும்



நாடாளுமன்றத் தேர்தலும் தமிழ்ப் பேசும் மக்களும்

புது முகங்களுடன் களம் இறங்குகிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு!

# புதுமுகங்களுடன் களம் இறங்குகிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

நாடாளுமன்றத் திருவிழாவும் ஆரம்பமாகி விட்டது.

தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யும் பணி தொடங்கிவிட்டது. எதிர்வரும் 26 ஆம் திகதி அந்தப் பணி முடிவடையப் போகின்றது.


சகல அரசியல் கட்சிகளும் இம் முறை தேர்தலில் புதிய முகங் களைக் களம் இறக்கப்போகின்றன.

இந்த வகையில் -

வடக்கு - கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் புதிய முகங்களைக் களம் இறக்கத் தீர்மானித்துள்ளது.

கடந்த தேர்தலில் போட்டியிட்டு எம்.பிக்களாக இருந்த பலருக்கு இம் முறை சந்தர்ப்பம் வழங்கு வதில்லை என்று கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழரசுக்



கட்சி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ரெலோ ஆகியவற்றின் தலைவர்கள் ஒன்று கூடி இந்த முடிவை எடுத்துள்ளனர்.

எம்.கே.சிவாஜிலிங்கம், என்.ஸ்ரீகாந்தா, பத்மினி சிதம்பரநாதன், செல்வராசா கஜேந்திரன், சிவநாதன் கிஷோர், கனகசபை, கனகரட்ணம், தங்கேஸ்வரி கதிரமன், சந்திரநேரு, ஜெயானந்தமூர்த்தி உட்படப் 12 பேருக்கு இம்முறை வேட்புமனு வழங்குவதில்லை என்று கூட்டமைப்பு முடிவு செய்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

புத்திஜீவிகள், இளைஞர்கள், சமூக சேவையாளர்கள், வர்த்தகர்கள் எனப் பலதரப்பட்டவர்களை உள்வாங்கிக் களம் இறங்கக் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

கடந்த வருடங்களைவிடப் பெரும் எண்ணிக்கை யானவர்கள் தேர்தலில் போட்டியிட விண்ணப் பித்துள்ளனர் எனக் கூட்டமைப்பினர் கூறுகின்றனர்.

கடந்த காலங்களில் தேர்தல்களில் போட்டி யிடப் பயம் காரணமாகப் பலர் பின்னடித்துவந் தனர். இப்போது ஏற்பட்டிருக்கும் சுமுக நிலை காரணமாகப் பலர் தேர்தலில் போட்டியிட முன் வந்துள்ளனர்.

தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய தீர்வு ஒன்றைப் பெறுவதற்குப் பேரம் பேசும் சக்தியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தெரிவு செய்ய வேண்டும் எனக் கூட்டமைப்பினர் கோருகின்றனர்.

கடந்த தேர்தலில் வடக்கு - கிழக்கில் இருந்து 22 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இம்முறை அதைவிடக் கூடு தலானவர்களைத் தெரிவு செய்ய வேண்டும் என்று கூட்டமைப்புத் தலைவர்கள் கோருகின்றனர்.

தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமையுடன் வாழக் கூடிய வகையில் தீர்வு ஒன்றைப் பெறுவதற்குப் பலம் வாய்ந்த சக்தியாகக் கூட்டமைப்பு தெரிவு செய்யப்பட வேண்டும். அப்போதுதான் ஆட்சிக்கு வரும் அரசை மட்டுமல்ல சர்வதேசத்தையும் தீர்வு ஒன்றுக்கு வற்புறுத்த முடியும்.

புலம்பெயர்ந்த மக்கள் மட்டுமல்ல ஒட்டுமொத்தத் தமிழ் மக்களும் வலியுறுத்துவது இதைத்தான். சகலரும் இணைந்து ஓரணியில் பேரம் பேசும் சக்தியாக நிற்பதன் மூலமே தீர்வு ஒன்றைப் பெறமுடியும்.

தெற்குத் தலைமைகள் நினைத்த தீர்வைத் தமிழ் மக்கள் மீது திணிப் பதைத் தவிர்க்க ஓரணியில் தமிழ் மக்கள் நிற்கிறார்கள் என்பதைத் தேர்தல் மூலம் காட்ட வேண்டும் என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூறியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு புறம்பாக வடக்கு-கிழக்கில் பல்வேறு கட்சிகள் களம் இறங்கப் போகின்றன.

ஈ.பி.டி.பி., தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ் (பத்மநாபா), ரெலோ போன்ற தமிழ்க் கட்சிகளும் களம் இறங்கத் தீர்மானித்துள்ளன.

இவற்றுக்குப் புறம்பாக, ஐ.தே.கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, ஹெல உறுமய போன்ற கட்சிகளும் வடக்கு -கிழக்கில் போட்டி யிட முனைப்புக் காட்டியுள்ளன.

தேர்தலில் போட்டியிடுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை அக்கட்சிகள் முன்னெடுப்பதை அவதானிக்க முடிகிறது. எதுவாகவிருந்தாலும் வடக்கு- கிழக்குத் தேர்தல் தமிழ்மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடிய நிலையை உருவாக்க வேண்டும் என்பதே சகலரினதும் எதிர்பார்ப்பாகும்.

அது நிற்க -

நாடாளுமன்றத் தேர்தல் முடிவடைந்த பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்,மேலகமக்கள் முன்னணி மற்றும் மலையகக் கட்சிகள் ஓரணியில் நிற்பது தொடர்பாகப் பேச்சுகள் இடம் பெற்றுவருகின்றன.

தமிழ்பேசும் மக்களின் இனப்பிரச் சினை, அத்துமீறிய குடியேற்றங்கள் மற்றும் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண ஓரணியில் தமிழ்பேசும் மக்களின் பிரதிநிதிகள் நிற்க முடிவு செய்துள்ளனர்.

தமிழ்பேசும் தமிழர், முஸ்லிம்கள், மலையகத் தமிழர் ஆகியோரின் தலை வர்கள் ஓரணியில் நின்று சிங்களத் தலைவர்களிடம் பேரம் பேசுவது நல்ல தொரு முயற்சிதான்.

தமிழ் மக்களைப் பிரித்து, தீர்வை வழங்கப் பின்னடிக்கும் சிங்களத் தலைமைகளுக்கு இந்த விடயம் கசப்பாகத்தான் இருக்கும்.

நாடு சுதந்திரம் அடைந்த காலம் முதல் தமிழ் மக்களைப் பிரித்துக் கையாண்ட போக்கை மாற்ற வேண்டிய நிலை உருவாக்கப்படுவது வரவேற்கப் படவேண்டியது என்கிறார்கள் நோக்கர்கள்.

ஒட்டுமொத்தத் தமிழர்களும், முஸ்லிம்களும், மலையகத் தமிழர்களும் ஒன்றுபட்டுக் கோரிக்கை விடும்போது சிங்களத் தலைமைகள் அடிபணியத் தான் வேண்டும் என்று நோக்கர்கள் கூறுகின்றனர்.

தேர்தல் முடிந்த பின்னர் ஏற்படப் போகும் மாற்றங்கள் நிச்சயம் தமிழர்களுக்கு விடிவைத் தரும் என எதிர்பார்ப்போம்.

# போர்குற்றச்சாட்டுக்களிலிருந்து இலங்கை தப்பிப் பிழைக்குமா?

யாழவன்

அது நிற்க -

இலங்கை அரச படையினர் வன்னியில் போர்க்குற்றங்கள் மேற்கொண்டதான குற்றச்சாட்டுக் கள் தொடர்பான விசாரணைகள் ஐ.நா.சபையில் அடுத்தமாதம் முதலாம் திகதி நடைபெறவிருப்ப தாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்ட வீடியோ மற்றும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களின் நேரடிச் சாட்சியங்கள் ஆகியவற்றின் அடிப்படை யில் இந்த விசாரணைகள் நடைபெறவிருப்பதாக ஐ.நா.சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விசாரணையில் சாட்சியமளிக்கத் தயார் என முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா இணங்கியிருந்தார். அவர் இப்போது கைது செய்யப்பட்டுள்ளதால், வேறு இராணுவ அதிகாரிகளை விசாரணைக்கு அழைக்க ஐ.நா.முனைப்புக் காட்டி வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த விசாரணைகளில் இலங்கை போர்க் குற்றங்களில் ஈடுபட்டதாக நிரூபிக்கப்பட்டால், பெரும் அழுத்தங்களை இலங்கை எதிர் நோக்க வேண்டிவரும் என சுட்டிக்காட்டப்படுகிறது.

இதற்குப் புறம்பாக-

கொழும்பில் நீண்டகாலம் பணியாற்றிய ஐ.நாவின் முன்னாள் பேச்சாளர் கோர்டன் வெய்ஸ் அவுஸ்திரேலிய ஏ.பி.சி.செய்திச் சேவைக்கு வழங்கிய பேட்டியும் இலங்கைக்கு நெருக்கடியைக் கொடுத்துள்ளது.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதலின் இறுதிக்கட்டத்தில் 40ஆயிரம் பொதுமக்கள் வரை கொல்லப்பட்டிருக் கலாம் என்று கோர்டன் வெய்ஸ் அந்தப் பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

''பொதுமக்கள் குறித்து போதிய கவனம் எடுக்கப்படவில்லை. இலங்கை அரசு தெரிவித்த பல விடயங்கள் பொய்யானவை. சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் நோக்கமுடையவையாக அவை காணப்பட்டன'' எனக் கூறும் அவர், இலங்கை சர்வதேச விசாரணைக்கு உட்படுத்தப் பட வேண்டும் என்று அந்தப் பேட்டியில் தெரிவித்துள்ளார்.

ஐ.நாவில் இருந்து வரும் போர்க் குற்றச்சாட்டுக் களைச் சமாளிப்பதற்காக இலங்கையின் மனித உரிமை கள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க ஜெனீவாவுக்குச் சென்றார். அங்கு அவர் தெரிவித்த கருத்துக்கள் பெரி தாக எடுபடவில்லை என்று கூறப்படுகின்றது.

அவரைச் சந்தித்த பின்னர் ஐநாவின் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை வெளியிட்டுள்ள கருத்து அதைப்புலப்படுத்துகின்றது.

''இலங்கையில் இழைக்கப்பட்டதாகக் கருதப்படும் போர்க் குற்றங்கள் குறித்து விசாரணைகளை நடத்து வதற்கு அந்நாட்டு அரசாங்கம் இது வரை அக்கறை காட்டவில்லை. எமது அலுவலகத்துக்குக் கிடைத்துள்ள தகவல்கள் அதனை மிகத்தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

இலங்கை அரசாங்கம் போர்க் குற்றங்கள் குறித்து மட்டுமின்றி, தேர்தலுக்குப் பிந்திய உரிமை மீறல்கள் குறித்தும் விசாரணை நடத்த வேண்டும் என்பதையும் அந்நாட்டின் மனித உரிமைகள் அமைச்சர், மஹிந்த சமரசிங்கவிடம் நேரில் வலியுறுத்தி உள்ளேன்'' இப்படி நவநீதம்பிள்ளை கூறியுள்ளார்.

போர்க்குற்ற விசாரணையில் இருந்து இலங்கை தப்பிப் பிழைக்க முடியாது என்ற நிலையே இப்போது ஏற்பட்டுள்ளது.

இலங்கை எவ்வாறு இந்த விடயத்தைக் கையாளப் போகின்றது என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

****

# இரண்டாவது கூத்து மேடை!

இது தேர்தல் வருடம்! இலங்கையில் ஒரு தேர்தலை நடத்தி முடிப்பதற்கு அரசு ஆகக்குறைந்தது 150 கோடி ரூபாவைச் செலவிட வேண்டியிருக்கிறது. அந்த வகையில் ஜனாதிபதித் தேர்தலுக்கான செலவுகள் மற்றும் கொடுப்பனவுகளே இதுவரை சரிசெய்யப்படாத நிலையில் இன்னுமொரு 150 கோடி ரூபாவுக்கான செலவு பொதுத் தேர்தல் எனும் பெயரில் நம்வாசல் கதவடிக்கு வந்திருக்கிறது. இந்தக் கோடிகளைத் தேர்தல் திணைக்களம் அவர்களின் பெயரில் செலவு செய்தாலும், சாட்சாத் - இது நமது காசு!

தேர்தல் என்பது ஜனநாயகம் வழங்கியுள்ள மிகப்பெரும் உரிமை. ஆனால், இந்த உரிமை பற்றி மகாஜனங்களாகிய நாம் - எவ்வளவு தூரம் அறிந்து வைத்திருக்கின்றோம் அல்லது அதை எவ்வாறு பயன்படுத்தி வருகின்றோம் எனப் பார்த்தால், இதில் ரொம்பவே நாம் - வீக்காக இருக்கின்றோம்.

நமது பிரதிநிதியாக நாம் யாரைத் தெரிவு செய்ய வேண்டும் என்கிற நம்முடைய உரிமையினை, காலங்காலமாக நாம் கையிழந்தே வருகின்றோம். நாம் ஆதரிக்கும் கட்சி அல்லது நபர் என்பதற்காக அவர்கள் சொல்லும் பாதைகளினூடாக வே நாம் பயணித்தும் வருகின்றோம். துரதிஷ்டவச மாக அந்தப் பாதைகளிலுள்ள குன்று, குழிகள் பற்றி நாம் கவனிப்பதேயில்லை.

மப்றூக்

மதம், அரசியல் - இவை இரண்டும் நம்மை உணர்ச்சி வசப்படுத்தும் அநேகமான வேளைகளில் நாம் - தவறாகவே நடந்து கொள்கின்றோம். அரசியலை அறிவுபூர்வமாக நெருங்கு வதை விட்டுவிட்டு, மிக நெடுங்கால மாக அதை உணர்வு பூர்வமாகவே நாம் அணுகி வருகின்றோம்.

தேர்தல் என்பது வேட்பாளருக் கானதொரு விடயம் என்றுதான் நம்மில் அதிகமானோர் நம்புகின்றார்கள். அதனால், வாக்களிப்பதில் பொடு போக்குத்தனங்களுடன் நாம் நடந்தும் கொள்கின்றோம். வாக்களிப்பு நிலையத்துக்கு நம்மை அழைத்துக் கொண்டு போக, நமது வேட்பாளன் வாகனங்களை அனுப்பி வைக்க வேண்டும் என்று நம்மில் பலர் விரும்புகின்றார்கள். அவ்வாறு வாகனம் வராது விட்டால், நாம் அநேகமாக வாக்களிக்கச் செல்வதில்லை அல்லது அந்த வேட்பாளனுக்கு வாக்களிப்பதில்லை. இப்படி நடந்து கொள்வதன் மூலம் வாகனம் அனுப்பாமல் விட்ட வேட்பாளரைத் தண்டித்து விட்டதாக நாம் பழமையாக நினைத்துத் தொலைக்கிறோம்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது, அடையாள அட்டை இல்லாமல் இறுதி நேரத்தில் கிராம சேவகர்களைத் தேடி அலைந்து கடைசியில் வாக்களிக்காது விட்ட பலரை நாம் சந்தித்திருந்தோம். அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டைகள் இல்லாது விட்டால் வாக்களிக்க முடியாது. எனவே, அடையாள அட்டைக்கு நேரகாலத்துடன் விண்ணப்பியுங்கள் என்று ஊடகங்கள், பள்ளிவாசல்கள் மற்றும் கோயில்களிலெல்லாம் ஆயிரத்தெட்டு முறை சொல்லியும் கூட, நம்மில் சிலர் அதுபற்றி அலட்டிக் கொள்ளவேயில்லை!


தேர்தலென்றாலே அது வன்முறைகள் புரிவதற்கான காலம். அல்லது நமது அரசியல் எதிராளிகளை நோவினை செய்வதற்கான நேரம் என்கிற எண்ணங்களிலிருந்து பலர் இன்னும் விடுபடவில்லை. கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது வன்முறைகளால் நான்கைந்து உயிர்களே பலியாகியிருந்தன. ஏராளமான சொத்துக்கள் நாசத்துக்குள்ளாயின. சொத்துக்களை விட்டாலும், இழந்து போன உயிர்களை எந்த நீதிமன்றத்தில் போய்ப் பெறுவது?! இவைகள் பற்றி பொது மக்களாகிய நாம்தான் சிந்திக்க வேண்டியுள்ளது.

அரசியல்வாதிகளெல்லாம், அடுத்த கூத்துக்குத் தயாராவது குறித்து யோசிக்கத் தொடங்கி விட்டார்கள்.

இந்த நிலையில், தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவது என்பது குறித்து பெரும்பாலான கட்சிகளின் முடிவுகள் - இக்கட்டுரை எழுதப்படும் வரை எடுக்கப்பட்டிருக்கவில்லை. குறிப்பாக, எதிரணிக்கட்சிகள் யாருடன் கூட்டுவைத்துக் கொள்வது என்றும், எந்தப் பொதுச் சின்னத்தில் போட்டியிடுவது என்றும் தீவிரமாகப் பேசிவருகின்றன.

இதேவேளை, அன்னச் சின்னத்தில் போட்டியிடுவதானால், பிரதம வேட்பாளராக - தானே பிரகடனப்படுத்தப்படல் வேண்டும் என ஜெனரல் சரத்பொன்சேகா அடம்பிடித்து வருகின்றாராம் என - காற்றில் வரும் கதைகள் கூறுகின்றன. அதாவது எதிரணி வெற்றிபெறும் பட்சத்தில் பிரதம மந்திரிக் கதிரையை அவர் கேட்கின்றாராம். ஆனால், இதற்கு ரணில் விக்கிரமசிங்கவோ அல்லது ஐ.தே.கட்சியோ தயாரில்லையாம் என்பதே நமக்குக் கிடைக்கும் தகவலாகும்.

இந்த நிலையில், அன்னச் சின்னத்தில் போட்டியிடுவதற்கே ஜே.வி.பி. மற்றும் எதிரணியிலுள்ள சிறுபான்மைக் கட்சிகளெல்லாம் விரும்புவதாகக் கூறப்படுகிறது. சிலவேளை, அன்னச் சின்னத் தீர்மானத்துக்கு ஐ.தே.கட்சி கூட இணங்கி வர வாய்ப்புண்டு. ஆனால், பிரதம வேட்பாளர் ரணில்தான் என்பதை விட்டுக்கொடுக்க அக்கட்சி தயாராக இல்லை என்பதே இப்போதைக்குள்ள செய்தியாகும்.



எனவே, சிறைக்குள் இருக்கும் ஜெனரல் சரத் பொன்சேகாவை இவ்விடயத்தில் விட்டுக் கொடுக்குமாறு கோரும், முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது. ஜெனரல் இதற்கு இணங்காது போனால், எதிர்க்கட்சிகளின் கூட்டு சிதறிப்போக நேரிடலாம். அப்படி நிகழுமாயின் ஆளுந்தரப்பு அதை அல்வாக் கொடுத்துக் கொண்டாடும்!

இந்த இடத்தில் ஒரு விடயத்தை சுட்டிக் காட்ட வேண்டியிருக்கிறது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தனது இடத்தை பொன்சேகாவுக்கு விட்டுக் கொடுத்ததென்பது மிகப்பெரும் விடயமாகும். சிலர் இதை வேறு கோணத்தில் பார்க்கிறார்கள். அதாவது, கடந்த ஜனாதிபதித் தேர்தலில் - தான் போட்டியிட்டால் தோற்றுப் போவது உறுதி என்பதால்தான், விட்டுக் கொடுப்பது போல் நடித்து - அந்தத் தோல்வியை பொன்சேகாவின் தலையில் ரணில் சுமத்தி விட்டார் என்கிறார்கள்.

ஆனால், இதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. நம் ஊர்களில் உள்ளூராட்சித் தேர்தல்களில் ஆயிரம் வாக்குகளைப் பெற்றெடுக்க முடியாதவர்களே அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட வேண்டுமென்று அடம்பிடித்து, கட்சித் தலைமைகளிடம் அழுது வடியும்போது, கடைசியாக 47 லட்சத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்ற ரணில் விக்கிரமசிங்க - தனது இடத்தை சரத்பொன்சேகாவுக்கு விட்டுக் கொடுத்ததென்பது மிகப்பெரும் விடயம்தான்!

ஜெனரல் சரத் பொன்சேகா இப்போதுள்ள நிலையில், இவ்வாறு எதிரணியினரிடம் அடம்பிடித்துக் கொண்டிருப்பதானது, ராஜதந்திரமாகத் தெரியவில்லை. தற்போதைய சூழலில் எதிரணிகளையெல்லாம் அரவணைத்துக் கொண்டு போவதே புத்தி சாதுரியமாகும் என்று கூறுகின்றார் பல்கலைக்கழக விரிவுரையாளரொருவர்!

இப்போதுள்ள அனுதாப அலையில், பொன்சேகாவோ அல்லது அவரின் மனைவியோ தேர்தலில் போட்டியிட்டால் - வெற்றியீட்டுவதற்கான சாதகங்கள் நிறையவே உள்ளன. அவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர்க ளானால், அந்த நிலைமையானது ஆகக்குறைந்தளவு பாதுகாப்பையேனும் அவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கும். எனவே, இந்தப் பொதுத் தேர்தலில் பொன்சேகாவும், மனைவியும் போட்டியிடுவது அவர்கள் எடுக்கும் மற்றுமொரு புத்தி சாதுரியமான நடவடிக்கையாக அமையும்!

ஆனால், ஜெனரல் சரத் அவ்வாறு வெற்றியீட்டுவதை அரச தரப்பு ஒருபோதும் விரும்பாது. எனவே, தேர்தலுக்கு முன்னதாக ஜெனரலை நீதிமன்ற விசாரணைக்குட்படுத்தி குற்றவாளியாக்குவதற்கான முனைப்புகளை ஆளுந்தரப்பினர் எடுக்கலாம். அல்லது நாம் நினைத்துப் பார்க்காத வேறொரு கோணத்திலிருந்து தடையொன்றைப் போடலாம்!

இப்போதைய நிலையில் எதுவும் நடக்கும்!

***

# உன்னைப்போல் ஒரு ரொபோர்ட்!

ஹைடெக்கின் உச்சம்... ரொபோர்ட்டுகள் தான். சென்ற நூற்றாண்டில் தொழில்நுட்பத் துறையின் அசுர வளர்ச்சியால் ரொபோட்டுகளும் எலெக்ட்ரானிக் அவதாரங்களாக வளர்ச்சி பெற்றன. ஆரம்பத்தில் மனிதர்கள் மற்றும் மற்ற உயிரினங்கள் செய்யும் விஷயங்களை மட்டுமே செய்து பார்க்க உருவாக்கப்பட்டன ரொபோர்ட்கள். போகப் போக தொழில் துறையில் அதிகம் ஈடுபடுத்தப்பட்டன. அதிக சூடு, அதிக கவனம் தேவைப்படும் பகுதிகளில் மனிதர்களைத் தள்ளிவிட்டு ரொபோர்ட்கள் எளிதாக இடம்பிடித்தன. இன்று கார், செல்போன் தொழிற்சாலைகளிலும் அதிக அளவில் ஈடுபடுவது இந்த ரொபோர்ட்டுகள்தான்.



நடப்பது, ஓடுவது, குதிப்பது எனச் சமீபமாக ரொபோர்ட்டுகளின் செயல்பாடுகள் அதிகரித்து உள்ளன. அதோடு பறக்கும் ரொபோர்ட்டுகள்கூட வந்துவிட்டன. குளோபல் ஹாக் என்ற விமானம், உண்மையில் இரண்டு மனிதர்களை உள்ளே வைத்துக்கொண்டு பறக்கும் ஒரு ரோபோர்ட்டுதான். தொட்டால் உணர்ந்து கொள்ளும் ரொபோர்ட்டுகளும், பயம், சந்தோஷம், கோபம் என்று உணர்ச்சி காட்டும் ரொபோர்ட்டுகளும் புழக்கத்தில் வந்து விட்டன. வீட்டில் பஸ்கட் கேட்காத நாய்க்குட்டி வளர்க்க ஆசையா? நாய்க்குட்டி ரொபோர்ட் இருக்கிறது. ரிசப்ஷனிஸ்ட், சமையல் உதவியாளர் எனப் பல வேலைகள் செய்வதற்கும் ரொபோர்ட்கள் உண்டு. விண்வெளியிலும் ரொபோர்ட் காலடி எடுத்துவைக்கப் போகிறது. அடுத்ததாக நாஸா அனுப்பும் ராக்கெட்டில் ரோபோர்ட்கள்தான் இடம்படிக்கப் போகின்றன. புரொகிராம் செய்யப்பட்ட வேலைகளை மட்டுமே செய்யும் ரொபோர்ட்கள் இவை. சுயமாகச் சிந்தித்து முடிவெடுக்கும் ரொபாட் இன்னும் ஆராய்ச்சிக் கூடத்தில்தான் இருக்கிறது. அந்த ஆராய்ச்சி முழுமையாக முடிந்துவிட்டால், இப்படி ஒரு கட்டுரையை ஒரு ரிப்போர்ட்டர் ரொபோர்ட் எழுதியிருக்கும். உங்கள் அலுவலக ஸீட்டில் உட்கார்ந்து இன்னொரு ரொபோர்ட் அதை ஆன்லைனில் படித்துக்கொண்டு இருக்கும்!

***


## வீடு விற்பனைக்கு

கடுகஸ்தோட்டவில் இரண்டு அறைகள், இணைந்த குளியலறை, மின்சார வசதி, முழு டைல் பதித்த 14 பேச்சர்ஸ் அமைப்புக்கொண்ட வீடு 16 இலட்சத்துக்கு விற்பனைக் குண்டு.

விஜயசிங்க
இல. 48/47, ஸ்டேசன் வீதி,
கடுகஸ்தோட்ட

தொடர்புகளுக்கு: 011-2448605, 071-8037685

## வீடு விற்பனைக்கு

HOUSE WITH ALL FACILITIES
INCLUDING PARKING FOR VEHICLES
ON 12 PERCH
LAND FOR FALE

At Grandpass, Colombo-14.
Inquire : 0775139009, 0722925595

சுடர் ஒளி

பெப். 21 - பெப். 27, 2010

85, ஜெயந்தமல் விமலரத்ன மாவத்தை, கொழும்பு-14 டெலிபோன்: 0115728005 பக்ஸ்: 0114734404
E-mail: editorial@sudaroli.com

## இன்னும் காலம் பிந்தி விடவில்லை

விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்கள் கொல்லப்பட்டபோதிலும் 'தமிழீழக்கோட்பாடு' இன்னும் அழியவில்லை என்று கூறுகிறார் இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய.

கிழக்குப் பகுதியிலுள்ள கல்லடி, தொப்பிகல, வாகரை, புனானை இராணுவ முகாம்களுக்கு கடந்தவாரம் விஜயம் செய்திருந்தபோதே அவர் மேற்கண்ட கருத்தைத் தெரிவித்திருந்தார்.

2006ஆம் ஆண்டு மாவிலாறில் ஆரம்பிக்கப்பட்ட விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு எதிரான போர் 2009ஆம் ஆண்டு மே மாதம் முள்ளிவாய்க்காலில் முடிவடைந்து சுமார் ஒன்பது மாதங்கள் கழியும் நிலையில் -

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சிகள் கிடப்பில் போடப்பட்டுள்ள நிலையில் - இப்படியான கருத்து ஒன்று தெரிவிக்கப் பட்டிருப்பது தமிழ் மக்களினதும் தமிழ் பேசும் மக்களினதும் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வு காணும் அவசியத்தை வலியுறுத்தி நிற்கிறது.

கடந்த காலங்களின் விடுதலைப் புலிகளின் ஆயுதப்பலம் ஒன்றே தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை வழங்கும் நெருக்குதலை பதவியில் இருந்த தென்னிலங்கை அரசுகளுக்கு கொடுத்து வந்தது. 2008 மே மாதம் புலிகள் இயக்கம் அழிக்கப்பட்ட பின்பு தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு அவசியமற்ற தொன்றாகவே தென்னிலங்கையில் கருதப்பட்டு வருகின்றது.

13ஆவது திருத்தம், 13+ என்றெல்லாம் கூறிவந்தவர்கள் தற்பொழுது 'கப்சிப்' என்று இருக்கிறார்கள். கிராம மட்டத் தில் அதிகாரப்பகிர்வு குறித்து ஜனாதிபதி தற்பொழுது ஆலோசித்து வருகிறார். பண்டா - செல்வா ஒப்பந்தத்தின் கீழான பிராந்திய சபைகள், ஜே.ஆர். - ராஜீவ் ஒப்பந்தத்தின் கீழான மாகாணசபைகள் என்றெல்லாம் போய் தற்பொழுது தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வு கிராம மட்டத்தில் வந்து நிற்கின்றது.

சிங்கள மக்கள் மத்தியில் இப்படியான ஓர் உணர்வு தற்பொழுது ஏற்பட்டிருப்பது, இலங்கையின் எதிர்காலம் மீண்டும் அமைதி இழக்கப்போகின்றது என்பதற்கான ஓர் அபாய அறிவிப்பு.

தமிழ் மக்களின் "தமிழீழக் கோட்பாடு" இன்னும் அழியவில்லை என்று இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய கூறியதை, கடந்த ஜனாதிபதித் தேர்தலும் நிரூபித்திருக்கின்றது.

திருகோணமலை, 'வெல்கம் வே' விடுதியில் சமீபத்தில் நடந்த ஊடகவியலாளர்களின் செயலமர்வில் ஜெகான் பெரேரா பேசுகையில், நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள மக்கள் ஒருவிதமாகவும், தமிழ் மக்கள் ஒரு விதமாகவும் வாக்களித்துள்ளனர். கடந்த யுத்தம் மூலம் அவர்களின் தலைவர்கள், யுத்த தளபாடங்கள், வாழ்விடங்கள் என்பன அழிக்கப்பட்டன. அதன் மூலம் சமாதானம் ஏற்பட்டு விட்டது என்று கூறப் பட்டது. ஆனால் நடந்து முடிந்த தேர்தல், தமிழ் பேசும் மக்களின் மனங்களில் மாற்றம் ஏற்பட வில்லை என்பதையே காட்டுகிறது என்று தெரிவித்துள்ளார்.

இதே, செயலமர்வில் சிறிபாலி பல்கலைக்கழகப் பீடாதிபதி கலாநிதி டியூடர் வீரசிங்க பேசுகையில், ''இந்த நாட்டில் யுத்தம் வெல்லப்பட்டது என்றால் அது ஐம்பது வீதமே வெல்லப்பட்டது. அது நூறு வீதமாக மாறவேண்டுமானால் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும்'' என்று தெரிவித்துள்ளார்.

ஆகவே, தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய ஓர் அரசியல் தீர்வை ஏற்படுத்தி நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு இன்னும் காலம் பிந்தி விடவில்லை.

# யாழ்ப்பாணத்துக்கு வரும் விருந்தாளிகள்

ஏ-9 பாதை திறந்தபின் யாழ்ப்பாணக் குடாநாடு எப்படி இருக்கிறது? என்று கேட்டார் புலம் பெயர்ந்த நாடொன்றிலிருக்கும் நண்பர் ஒருவர். ''மக்களின் வாழ்க்கைத்தரம் முன்னேறவில்லை. அடிப்படைப் பிரச்சினைகள் தீரவில்லை. ஆனால் போக்குவரத்து நெருக்கடி உட்பட சில கஷ்டங்கள் குறைந்திருக்கின்றன'' என்றேன்.

ஆனால் ஏ-9 பிரதான வீதி திறக்கப்பட்டிருப்பதால் அதிகம் நன்மை தமிழர்களுக்கா? சிங்களவர்களுக்கா? என்று திரும்ப ஒரு கேள்வியைத் தூக்கிப் போட்டார் நண்பர்.

எப்போதும் எல்லாவற்றிலும் தமிழரா? சிங்களவரா? என்ற பார்வை இருக்கத்தான் செய்கிறது என்று நினைத்துக் கொண்டு இதை அவதானித்தேன்.

ஏ-9 பாதை திறந்தமையின் அனுகூலங்கள் பொதுவானவை. இயல்பு வாழ்க்கையின் முதற்படி தொடர்பாடல், போக்குவரத்து போன்றவை சீராக இருப்பதாகும். எனவே இது அந்த முதல் நிலையில் இயல்பு வாழ்க்கை நோக்கிய ஆரம்பமே. ஏ-9 பாதை திறக்கப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த மாற்றங்கள் பல. அதில் ஒன்று 'பொருட்கள் எல்லாம் இந்தப் பொருட்களில் குறிப்பிடப்பட் டிருக்கும் விலையில் விற்கப்படுவது'. இதைக் கடைக்காரர்களே சொல்லி விற்பார்கள். அடித்த விலையில் தருகிறோம் என்று. ஆகையால், சாதாரண மக்களின் வாழ்க்கைக்கு ஏ-9 பாதைத்திறப்பு பெரும் உதவியை - நன்மையையே செய்தது.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிடங்களுக்குச் செல்வோரின் தொகையும் அதே மாதிரி, வெளியிடங்களிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருவோரின் தொகையும் அதிகரித்துள்ளது.

இப்படி வெளியிடங்களிலிருந்து வருவோரில் அதிகமானவர்கள் இப்போது சிங்களவர்களாக இருக்கின்றனர். இவர்களில் ஒரு தொகுதியினர் வியாபாரிகள். இன்னொரு தொகுதியினர் சுற்றுலாவுக்காக வரும் மக்கள். யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு வருகின்ற வியாபாரிகள் பொருட்களை மலிவு விலையில் விற்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் நடமாடும் வியாபாரிகளிடம் மலிவு விலையில் பொருட்களைக் கொள்வனவு செய்யலாம். ஆனால், அவற்றில் தரமோ உத்தரவாதமோ இருக்குமென்று கூறமுடியாது எனச் சொல்லப்படுவது உண்டு. அதற்காக அவர்கள் கொண்டு வருகின்ற பொருட்கள் அத்தனையும் போலியென்றோ தரமற்றவை என்றோ சொல்லிவிட முடியாது.



இதைவிட இந்தப் பொருட்களைக் கட்டாயம் வாங்கவேண்டும் என எந்த நிர்ப்பந்தமும் இல்லை. விரும்பினால் வாங்கலாம். இல்லையெனில் விடலாம்.

அடுத்த விஷயம் சுற்றுலாவுக்காக வருகின்ற சிங்கள மக்களைப் பற்றியது. யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலை பற்றி இந்திய ஊடகவியலாளர் ஒருவருடன் கதைத்துக் கொண்டிருந்த போது அவர் கேட்டார் - 'தங்களால் வெற்றி கொள்ளப்பட்ட இடங்களையா சிங்களவர்கள் வந்து பார்க்கிறார்கள்?' என்று. இந்தக் கேள்வி மிகைப்படுத்தப்பட்ட கூற்றாகவே படுகிறது என்றேன். அப்படியான மனநிலையுடன் சிங்கள மக்கள் யாழ்ப்பாணத்திற்கு வருவதாகத் தெரியவில்லை. ஆனால், யாழ்ப்பாணத்தில் தமிழர்கள் அகதிகளாகவும், சிங்களவர்கள் சுற்றுலாப் பயணிகளாகவும் இருக்கின்றார்கள் என்றேன். உண்மை நிலைமை அதுதான்.

யாழ்ப்பாணத்துக்கு வருகின்ற சிங்கள மக்கள் பல இடங்களுக்கும் செல்கிறார்கள். சகலவற்றையும் பார்க்கின்றார்கள். போரினால் ஏற்பட்ட அழிவுகள், சிதைவுகள், இடம்பெயர்ந்த பின்னர் மக்களில்லாத பிரதேசங்கள், உயர்



பாது[illegible]பு வலயங்கள், தெரு நீளமும் ஆ[illegible]ரில்லாத பகுதிகளிலும் உயர் பாதுகாப்பு வலயங்களிலும் தனித்து நிற்கின்ற படையினர் எனச் சகலவற்றையும் பார்க்கின்றார்கள். சிங்களப் பிரதேசத்திற்கும் தமிழ்ப் பிரதேசத்திற்கும் இடையிலான வேறுபாட்டை அவர்கள் தெளிவாகப் புரிந்து கொள்வர். வவுனியாவுக்கு வடக்கே வரும் போது இந்த வேறுபாட்டை மிகத்தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

யாழ்ப்பாணம் - ஆரியகுளம் சந்திப் பகுதி இப்போது மாலைவேளைகளிலும் அதிகாலை வேளையிலும் மிகப்பரபரப்பாகவும், சன நெரிசலுடைய தாகவும் இருக்கிறது. இதைப்போல துரையப்பா விளையாட்டரங்கப் பகுதியும் சனநெரிசலுள்ள இடமாகியுள்ளது. துரையப்பா விளையாட்டரங்கில் தங்கியிருந்த ஒரு முதிய சிங்களவரிடம் 'யாழ்ப்பாணம் எப்படி இருக்கு?' என்று கேட்டேன்.

''ரொம்பக் கவலையாக இருக்கு. முப்பது வருசத்துக்கு முதல் (1980க்கு முன்னர்) இருந்த மாதிரியே இருக்கு. அப்போது இருந்த யாழ்ப்பாணத்தில் பாதியைக் கூட இப்போது காண முடியவில்லை'' என்று கோட்டைக்கு கிழக்கேயுள்ள பகுதியைக் காட்டினார். அவருடைய முகம் கவலையினாலும் சற்று வெட்கத்தினாலும் உற்சாகமிழந்திருந்தது. அதற்காக எல்லாச் சிங்கள மக்களும் இதே மாதிரித்தான் எல்லாவற்றையும் நோக்குவார்கள் என்று சொல்ல முடியாது. ஆனால், வென்றவர்கள்-தோற்றவர்கள் என்ற கண்ணோட்டம் கொஞ்சம் அதிகப்படியானது.

சிங்கள மக்கள் வடக்கிற்கு வந்து செல்வதால் வன்னியிலும், யாழ்ப்பாணத்திலும் இதுவரையில் என்னவெல்லாம் நடந்திருக்கிறது என்பதை நேரில் கண்டு கொள்வார்கள். இது அவர்களுக்குப் பல சேதிகளைச் சொல்லும். ஊடகங்கள் எதுவும் செய்யாத வேலையை இந்தப் பயணங்கள் செய்யும். அதேவேளை இந்த மக்கள் யாழ்ப்பாணத்திற்கு வரும்போது அவர்களுக்குச் சில விடயங்களைப் புரிய வைக்கக் கூடிய மாதிரிக்கையேடுகளோ பிற சந்திப்புக்களோ இல்லை. இது மிகவும் கவலைக்குரிய விடயம். சேதமடைவதற்கு முன்பிருந்த யாழ்ப்பாணத்தையும் யுத்தத்தின் பின்னரான யாழ்ப்பாணத்தையும் பிரதிபலிக்கும் புகைப்படத் தொகுதியை உருவாக்கி, அந்தந்தக் காலப்பகுதி யுடன் விற்பனை மையங்களில் கொடுக்கலாம். ஒரு வழிகாட்டிநூலில் இவற்றைச் சேர்க்கலாம்.

'போருக்கு முன், போருக்குப்பின் யாழ்ப்பாணம்' என்ற தலைப்பில் ஒரு காட்சிக்கூடத்தை . ஓவியம், புகைப்படங்கள் உள்ளடங்கிய காட்சியகத்தை நகரில் வைத்துக் கொள்ளலாம். யாழ்ப்பாணத்தக்கு வருவோர் அனைவரும் இதனைப் பார்த்துச் செல்வர். இது அவர்களிடம் ஒருவகையான விழிப்பை ஏற்படுத்தும்.

இதைவிடுத்து வெளியூரிலிருந்து வருவோருக்கு எங்கள் உள்ளூர் உற்பத்திப் பொருட்களை மட்டும் விற்பதை நோக்கமாகக் கொண்டிருந்துவிட்டு வருவோரைக் குறை சொல்வதால் எதுவும் ஆகப்போவதில்லை. இந்த நிலையில் என்ன செய்து எங்களை அவர்களால் ஏற்றுக்கொள்ள வைக்கப்போகின்றோம் என்பதுவே முக்கியமானது.

*****

-ஜோசவ் தயாளன்-

நொறுங்கிக் கிடக்கும் கட்டடம்... கருகிக் கிடக்கும் உடல்கள்... ஓலமும், அலறலும் காற்றை நிறைக்க, பதற்றத்தோடு ஓடும் மனிதர்கள்... இந்தியாவில்

# புனே தாக்குதல்!



தாக்குதலுக்கு உள்ளான ஜேர்மன் பேக்கரி

மீண்டும் ஒரு தாக்குதல்! சுமார் ஓராண்டு காலம் ஓய்ந்திருந்த கொடூரம் மீண்டும் தலைதூக்கி உள்ளது. முதலில் கேஸ் சிலிண்டர் வெடித்தது என்றுதான் நினைத்திருக்கிறார்கள். பின்புதான் தெரிந்தது அதுவொரு திட்டமிடப்பட்ட தாக்குதல் என்பது. இரண்டு வெளிநாட்டவர்கள் உள்ளிட்ட ஒன்பது உயிர்களை பலிவாங்கியிருக்கும் புனே தாக்குதலைத் தொடர்ந்து இந்தியா முழுவதும் உஷார் படுத்தப்பட்டு வாகனத் தணிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்தூர், கான்பூர், டெல்லி என அடுத்தடுத்து தாக்குதல்கள் நடக்கலாம் என வெளியாகியிருக்கும் உளவுத் துறை தகவல்கள் எல்லோரிடமும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது!

இந்தத் தாக்குதலை நடத்தியவர்கள் யார்? அவர்களுடைய நோக்கம் என்ன? எதுவும் தெளிவாகத் தெரியாத நிலையில்... உண்மைகளின் இடத்தை நாம் யூகங்களால் நிரப்பிக் கொண்டிருக்கிறோம். மீண்டும் தொடங்க இருக்கின்ற இந்திய-பாகிஸ்தான் நாடுகளுக்கிடையிலான பேச்சு வார்த்தையை தடுப்பதற்குத்தான் இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கிறார்கள் என்று இந்திய ஆட்சியாளர்கள் கூறுகின்றனர். லஸ்கர்-இ- தொய்பாவின் வேலைதான் இது என்று புலனாய்வு நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் கூறுகிறார்கள். ஆனால், எல்லாமே யூகங்கள்தான். அண்மையில், அமெரிக்க அரசால் கைது செய்யப்பட்ட டேவிட் கோல்மன் ஹெட்லி என்ற லஸ்கர்-இ-தொய்பா அமைப்போடு தொடர்பு கொண்ட ஒருவர், புனே வந்து பல்வேறு தகவல்களை சேகரித்துச் சென்றதாகப் புலனாய்வுத் தகவல்கள் கூறிவந்தன. 'புனேயில் உள்ள யூதர்களின் புனிதத் தலமான சபாட் ஹவுஸ் என்ற இடத்தின் மீது தாக்குதல் நடத்துவதே இவர்களின் திட்டமாக இருந்துள்ளது. அதற்கடுத்ததாக ரஜ்னீஷ் ஆசிரமத்தை குறி வைத்துள்ளனர். அங்கு வெளிநாட்டுப் பயணிகள் அதிகம் வருவதால், அதைத் தாக்குவதன் மூலம் சர்வதேச அளவில் கவனத்தை ஈர்க்க அவர்கள் திட்டமிட்டுள்ளனர்' என்றெல்லாம் உளவு நிறுவனங்கள் ஏற்கெனவே கூறிவந்தன. ஆனால், இந்த இரண்டு இலக்குகளையும் தவிர்த்து விட்டு இப்போது புனேவிலிருக்கும் ஜெர்மன் பேக்கரி என்ற உணவகத்தை தாக்கியுள்ளனர்!

ஜெர்மன் பேக்கரி என்பது சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னால் ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த ஒருவரால் தொடங்கப்பட்டது. இந்த இலக்கைத் தேர்ந்தெடுத்ததன் மூலம் ஜெர்மன் அரசுக்கு தீவிரவாதிகள் ஒரு செய்தியை உணர்த்த விரும்புகிறார்கள் என்று யூகிக்க இடம் இருக்கிறது. ஏற்கெனவே, ஜெர்மன் அரசு ஆப்கானிஸ்தானில் தலையிட்டுள்ளது. அங்கு தலிபான் தீவிரவாதிகளுக்கு எதிராக போரில் ஈடுபட்டுள்ள நேட்டோ துருப்புகளில் ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த ராணுவ வீரர்களும் உள்ளனர். தற்போது, ஆப்கானிஸ்தானில் நேட்டோ படை உச்சகட்டத் தாக்குதலைத் தொடுத்து வருகின்ற நிலையில்... அதில் ஈடுபட்டுள்ள ராணுவத்தினரை திசைதிருப்பும் விதமாக புனே தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாமோ என்ற ஐயமும் எழுந்துள்ளது.

கடந்த ஏழு, எட்டு ஆண்டுகளாகவே புனேயில் தீவிரவாதிகளின் நடமாட்டம் இருந்து வந்தது. 2002 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் பாகிஸ்தானில் ஒசாமா பின்லேடனின் தளபதிகளில் ஒருவராகக் கருதப்பட்ட அபு ஜூபைதா என்பவர் அமெரிக்க உளவு நிறுவனமான எப்.பி.ஐ ஆல் கைது செய்யப்பட்டார். அவர் புனேயில்தான் கம்ப்யூட்டர் சயன்ஸ் படித்தார் என்பது

**ரவிக்குமார்**

குறிப்பிடத்தக்கது. 2008 ஆம் ஆண்டு மும்பையில் கைது செய்யப்பட்ட இந்தியன் முஜாஹிதீன் என்ற அமைப்பைச் சேர்ந்த நான்கு தீவிரவாதிகளில் மூன்று பேர் புனேயைச் சேர்ந்தவர்கள். மட்டுமின்றி, தற்போது அமெரிக்க உளவுத் துறையின் விசாரணையை எதிர்கொண்டிருக்கும் ஹெட்லியும் புனேக்கு அடிக்கடி வந்து போய் இருக்கிறார். தாக்குதல்களுக்கான இலக்குகளை அடையாளம் கண்டு தேர்ந்தெடுத்துத் தருவதற்காகவே அவர் அங்கு வந்து போனார் என்ற செய்திகள் இப்போது தெரியவந்துள்ளன. இந்த விவரங்களின் அடிப்படையில் புனேயில் எப்போது வேண்டுமானாலும் தாக்குதல் நடத்தப்படலாம் என்கின்ற எச்சரிக்கையை மத்திய உளவு அமைப்புகள் ஏற்கெனவே மாநில அரசுக்கு வழங்கி உள்ளன. மத்திய, மாநில அரசுகள் விழிப்போடு இருந்தபோதிலும் இந்தத் தாக்குதல் நடந்தேறி இருப்பது தீவிரவாதிகளின் கட்டமைப்பு எந்த அளவுக்கு வலுவாக இருக்கிறது என்பதையே சுட்டிக் காட்டுகிறது.

இந்த தாக்குதல் நடத்தப்படுவதற்கு உடனடியான காரணங்கள் என்று எதையும் நாம் கூறமுடியவில்லை. இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கூறுவதுபோல் இது இந்திய-பாகிஸ்தான் பேச்சுவார்த்தையை தடுப்பதற்காக செய்யப்பட்டிருக்கிறது என்று எடுத்துக் கொண்டால், அதன் மூலம் தீவிரவாதிகளுக்கு கிடைக்கும் பயன் என்ன என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தற்போது, வெளியுறவுச் செயலாளர்கள் மட்டத்தில் பேச்சுவார்த்தை நடத்துவது என்று இந்தியாவும் பாகிஸ்தானும் முடிவு செய்துள்ளன. மும்பைத் தாக்குதலுக்குப் பிறகு பாகிஸ்தானுடன் அனைத்துவிதப் பேச்சுவார்த்தைகளையும் இந்தியா ரத்துச் செய்து விட்டது. அந்தத் தாக்குதலில் ஈடுபட்ட தீவிரவாதிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டால்தான், மீண்டும் பேச்சுவார்த்தையைத் தொடங்க முடியும் என இந்திய அரசு கறாராகப் பேசி வந்தது. இந்தியா வலியுறுத்தியதுபோல் எந்தவொரு நடவடிக்கையையும் பாகிஸ்தான் எடுக்கவில்லை என்பது மட்டுமின்றி, தமது நாட்டில் செயல்பட்டு வரும் தீவிரவாதக் குழுக்களை முடக்குவதற்கும் கூட அது முன்வரவில்லை. இந்நிலையில், இந்தியா எதற்காக பாகிஸ்தானோடு பேச்சு வார்த்தைக்குச் செல்கிறது என்ற கேள்வி எதிர்க்கட்சியினரால் முன்வைக்கப்பட்டு வருவதை நாம் அறிவோம். இங்குதான் அமெரிக்காவின் பங்கைப் பற்றி நாம் கவனிக்க வேண்டியுள்ளது.

தற்போது இறுதி செய்யப்பட்டுள்ள இந்திய-பாகிஸ்தான் பேச்சுவார்த்தை உண்மையில் அமெரிக்க அரசால் வகுத்துத் தரப்பட்ட திட்டமேயாகும். அமெரிக்க அதிபர் ஒபாமாவுக்கு தேசிய பாதுகாப்பு ஆலோசகராக இருக்கும் ஜெனரல் ஜேம்ஸ் ஜோன்ஸ் என்பவர் சில நாட்களுக்கு முன்பு பாகிஸ்தானுக்கு வந்திருந்தார்.

(23 ஆம் பக்கம் பார்க்க...)


இலங்கை மத்திய வங்கி
பொருத்தமான இடவசதியை
யாழ்ப்பாணத்தில் தேடுகிறது



**இலங்கை மத்திய வங்கிக்கு அதன் அலுவலகத்திற்கும் சுற்றுலா விடுதிக்குமாக யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைகளினுள் பொருத்தமான பணிமனை தேவைப்படுகிறது.**

உத்தேசிக்கப்பட்ட பணிமனை பின்வரும் வசதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.

- வசதியான பாதைகளுடன் நகரப் பிரதேசத்தினுள் அமைந்திருக்க வேண்டும்.
- தளப் பரப்பு கிட்டத்தட்ட 6,000 சதுர அடி
- 10 ஊர்திகளை நிறுத்துவதற்கான இடவசதி
- மேலதிக அபிவிருத்திகளுக்கு போதிய இடவசதி
- மின்வலு, நீர் வழங்கல் மற்றும் ஏனைய வசதிகள்

ஆர்வமுள்ள தரப்பினர் கட்டட வரைபடத்தின் பிரதிகளுடன் சகல விபரங்களையும் 05.03.2010 இற்கு முன் பின்வரும் முகவரிக்கு கிடைக்குமாறு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பணிப்பாளர்
பணிமனைத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
30, சனாதிபதி மாவத்தை
கொழும்பு 1

தொலைபேசி: 011-2477400, 011-2477403, 011-2477405.
தொலைநகல்: 011-2477769, 011-2477730,
மின்னஞ்சல்: premises@cbsl.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# நாடாளுமன்றத் தேர்தலும் தமிழ்பேசும் மக்களும்

அருண் மனோகரன்



அடுத்த - புதிய நாடாளுமன்றத்துக்கான தேர்தல் நடைபெறவுள்ளது. தேர்தல் அமர்க்களங்கள் இன்னும் சில தினங்களில் ஆரம்பமாகிவிடும். இப்போதே கட்சிகள் தேர்தலுக்கான நடவடிக்கைகளில் இறங்கிவிட்டன. யாரைக் களத்தில் இறக்குவது? எந்தத் தரப்புகளுடன் கூட்டணி வைத்துக்கொள்வது? யார் யாரை வெட்டி விடுவது? எப்படி வியூகங்கள்



அமைப்பது? மக்களுக்கு என்ன சொல்வது? என்ற விவகாரங்களில் கட்சிகள் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. இதில் இலங்கையின் தமிழ், சிங்கள, முஸ்லிம் கட்சிகள் அத்தனையும் அடங்கும்.

தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கும் வாழ்வாதாரப் பிரச்சினைக்கும் ஒரு தீர்வைப் பற்றிச் சிந்திக்காமலிருக்கும் உபாயத்தை சிங்கள இராஜதந்திரம் கையாள்கின்றது. அடுத்தடுத்துத் தேர்தல்களை முன்னிறுத்துவதன் மூலம் இந்தத் தேர்தல் வியூகங்களில் தமிழ்க் கட்சிகள் சிக்கிவிடும். தமிழ் ஊடகங்களும் இந்தத் தேர்தல் வலையில் வீழ்ந்துவிடும். தவிர, அதிகாரத்திலிருக்கும் அரசுக்கும் தேர்தல் அதிக லாபத்தைத் தருகின்ற ஒரு விசயமாக இருக்கிறது. ஆக, இரண்டு லாபங்கள் இந்தத் தேர்தல்களில் கிடைக்கின்றன. சிறுபான்மைச் சமூகங்களை தொடர்ந்தும் அவர்களுடைய பிரச்சினைகளுடன் தவிக்க விடுதல் - அதிகாரத்தைத் தக்க வைத்தல் என அமைகின்றன இந்த இரட்டை இலாபங்கள். சிங்கள இராஜதந்திரத்தின் (இதுதான் சிங்கள அதிகார வர்க்கம். ஆலோசகர்கள், கருத்துருவாக்கிகள், ஊடகங்கள், அரசியல்வாதிகள், மதகுருக்கள் எனப் பல தரப்பின் கூட்டு) இது அல்லது அரசின் தேர்தல் பொறியில் மிக இலகுவாக வீழ்ந்து விடுவது தமிழ்க்கட்சிகளும் தமிழ் ஊடகங்களுமாகவே இருக்கின்றன. தேர்தல் அறிவிப்பு வர முன்னரே அதைப்பற்றிய ஆலோசனைகள், அபிப்பிராயங்கள், ஏற்பாடுகள் என்று கதைகளை எல்லாம் சனங்கள் மிகவும் நன்றாகவே அறிந்திருக்கின்றனர். இதுகாலவரை யான பட்டறிவில் தேர்தல் திருவிழாவுக் காக இந்த அரசியல் தலைவர்கள் காட்டுகின்ற அக்கறையின் அளவுக்கு மக்களின் பிரச்சினைகளில் இவர்கள் காட்டவில்லை என்பது வெளிப்படையான உண்மை. தேர்தலை எதிர்கொள்வதற்காக இந்தக்கட்சித் தலைவர்களும் அரசியல் பிரமுகர்களும் கூடுவதும், ஆராய்வதுமாக இருப்பதைப்போல தமிழ் மக்களுடைய பிரச்சினைகளான அரசியல் கைதிகள் விவகாரம், போராளிகளின் விடுதலை, மீள்குடியேற்றம், உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினை, முகாம் மக்களின் நிலை, போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகள், தமிழ்ப் பிரதேசங்களின் புனர்வாழ்வு, அபிவிருத்தி போன்ற முக்கிய விடயங்களுக்காக ஒரு மணி நேரம் இவர்கள் செலவிட்டதில்லை என்பது யாவரும் அறிந்த சங்கதி. வேண்டுமானால் அவ்வப்போது அறிக்கைகள் வெளியிடப்படும் அவ்வளவுதான். இதற்குமேல், இந்த விடயங்களை நடைமுறைப்படுத் துவதற்கு எவரும் முயற்சித்ததில்லை. அதற்காக இவர்கள் பாதிக்கப்பட்ட பொது மக்களுடன் நேரில் கலந்துரையாடியதோ, அவர்களுடைய பகுதிகளுக்கு நேரில் சென்று நிலைமைகளைப் பார்த்ததோ கிடையாது.

இது குறித்த கேள்விகளை இத்தகைய தேர்தல் சூழலில் எழுப்புவது அவசியமானதும், பொருத்தமானதுமாகும். இந்தத் தடவை வருகின்ற தேர்தலிலும் தமிழ் மக்களின் உரிமைக் கோரிக்கை - குடியேற்றங்களைத் தடுப்பதற்கான முயற்சி, இந்திய அனுசரணையைப் பெறுதல் போன்ற வழமையான மும்முரமான பணியில் அரசியல் கட்சிகள் ஈடுபடத் தொடங்கி விடுகின்றன. இது குறித்த செய்திகளுக்கும் தகவல்களுக்கும் ஊடகங்களும் முக்கியத்துவமளிக்கின்றன. மட்டுமல்ல, ஊடகங்களின் அதிக இடத்தை இந்தத் தேர்தலுக்காகவே அவை ஒதுக்கியும் விடுகின்றன.

தேர்ந்த அவதானிப்பாளர்கள் எவருக்கும் இந்த விடயங்கள் சிரிப்பையே வரவழைக்கும். தமிழ் பேசும் மக்களும் இந்த ஊடகங்களும் இதுவரையில் பல தேர்தல்களைக் கண்டு விட்டார்கள். தேர்தல் கால பரபரப்புகள், நம்பிக்கையூட்டல்கள், அறிக்கைகள், பிரகடனங்கள், வியூகங்கள் என்ற அம்சங்கள் தான் விற்பனைக்கு வரப்போகின்றன.

ஆட்சியிலிருப்பது மஹிந்த ராஜபக்ஷ அரசு. இந்த அரசின் அணுகுமுறைகளும் நிலைப்பாடும் எப்படியானவை என்பது சகலருக்கும் தெரிந்தது. இந்த நிலையில் மஹிந்த ராஜபக்ஷவைச் சுற்றியுள்ள அரசியல்-பொருளாதார நெருக்கடிகள் அடுத்துவரும் காலப்பகுதியில் எவ்வாறு அமையப் போகின்றன என்பதைச் சரியாக மதிப்பிடுவது இன்று எதிரணி அரசியல் கட்சிகளுக்குள்ள முக்கிய பணி. அரச ஆதரவுக் கட்சிகளும் இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

இலங்கை முழுவதிலுமுள்ள மக்கள் பொருளாதார நெருக்கடிகளால் அவதியுறுகின்றனர். போர் முடிந்த பின்னரும் நாடு இயல்புநிலைக்குத் திரும்பவில்லை என்ற உணர்வு நாடு முழுவதுமுள்ள சகல மக்களிடமும் உண்டு. இதற்காகத் தான் ஆட்சிமாற்றம் என்ற கருதுகோள் கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது முன்னிறுத்தப்பட்டது. தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைகளும் அப்படியேதானிருக்கின்றன. எனவே, அரசுக்கு நெருக்கடிகள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. அத்துடன் மேற்குலகத்தின் பகைமையும் ராஜபக்ஷ அரசுக்குண்டு.

இந்த நிலையில், மஹிந்தவின் பொதுமக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசு ஆட்சிக்கு வந்தால் நிலைமை நெருக்கடியாகவே இருக்கும். அதாவது மஹிந்த ராஜபக்ஷ வெற்றிகரமாக ஆட்சி நடத்த முடியாது. அவரைச்சுற்றியிருக்கும் பிரச்சினைகள் அவரை நிம்மதியாக இருப்பதற்கு அனுமதிக்கப் போவதில்லை. ஆதரவுக் கட்சிகள் கூட தமது பங்கைக்கேட்டே தீரும். அவரும் எதையாவது கொடுத்துச் சமாளிக்கத்தான் வேண்டும். வாக்களித்தவர்கள் சும்மா விடமாட்டார்கள். சும்மா இருப்பதற்காக அவர்கள் வாக்களிக்கவுமில்லை.

இதேவேளை, எதிர்க்கட்சிகள், எதிரணிகள், தொழிற்சங்கங்கள் போன்றவையும் அமைதியாக இருந்து விட முடியாது. இதையெல்லாம் கவனத்தில்கொண்டே நாடாளு மன்றத் தேர்தலில் அரசியல்கட்சிகள் செயற்படுவது அவசியம். பொதுவாகவே நாடாளுமன்றம் என்பதே பெரும்பான்மை மக்களின் நலன்களைப் பேணுவதற்கான ஓர் அமைப்பாகத்தான் இதுவரையில் இருந்து வருகிறது. இப்போது சிறுபான்மைச் சமூகங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து நிற்க முயல்வதாகப் பேச்சு அடிபடுகிறது. இது எதைக் காட்டுகிறது. மீண்டும் சிறுபான்மை, பெரும்பான்மை என்ற பிரிகோட்டை தானே. இந்தப்பிரிகோடு எப்போதும் சிங்களத் தரப்புக்கே வாய்ப்புகளை அதிகளவில் வழங்கும்.

ஆகையால் மாற்று உபாயங்களின் மூலம் சிறுபான்மைச் சமூகங்களின் நலன்களைத் தந்திரமாகப் பெற்றுக் கொள்வதற்காகத் தமிழ்பேசும் மக்களின் கட்சிகள் சிந்திக்கவேண்டும். இதற்கு அரசாங்கத்தை எதிர்ப்பது என்றோ ஆதரிப்பது என்றோ சிந்திக்காமல் ஓர் இடைநிலைப் பாதையை வகுத்துக் கொள்வது அவசியம். இந்தப் பாதையே இன்று தேவை. இதையே பலரும் இன்று வலியுறுத்தி வருகின்றனர்.

தமிழ்பேசும் மக்கள் தங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவே விரும்புகின்றனர். இன்னும் பிரச்சினைகளைத் தீர்க்காமல் வைத்திருக்க அவர்கள் விரும்பவில்லை. கடந்த கால அனுபவம், கல்வியறிவு பெற்ற சமூகம், சர்வதேச ரீதியாகப் பல நாடுகளிலும் புலம்பெயர்ந்து வாழ்கின்றபோது கிடைத்திருக்கின்ற அறிவு போன்ற செழிப்பான நிலையில் உள்ளனர் இன்றைய தமிழ் மக்கள்.



இன்னுமின்னும் சிங்கள ஆட்சியாளர்களிடமும், இந்தியாவிடமும் நம்பித் தோற்பதாயின் தமிழ் மக்கள் போன்ற அறிவில் பின்தங்கிய, விவேகம் குறைந்த வேறு சமூகம் இல்லை என்பதே உண்மையாகி விடும். இலங்கைத் தமிழரையும் விட கல்வியறிவிலும் வரலாற்றுப் புலத்திலும் பின்தங்கிய பல சமூகங்கள் இன்று தனித்துவமாக விடுதலை பெற்று நிற்கின்றன என்ற உண்மையை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

## அவலங்களைப் பகிர்ந்துகொள்வோம்

வன்னியில் நடந்த இறுதிக்கட்ட யுத்தத்தின் போது அங்கிருந்த எமது மக்கள் அனுபவித்த அவலங்கள் சொல்லில் அடக்கமுடியாதவை. அந்தப் பேரவலங்களை எதிர்கொண்டு இப்போது அகதிமுகாம்களில் வாடும் எமது உறவுகள் தமது அந்த அனுபவங்களையும் அதனால் ஏற்பட்ட உணர்வுகளையும் ஏனையவர்களுடன் பகிர்ந்துகொள்வதற்கான களத்தைத் திறந்து விடுகிறது உங்கள் 'சுடர் ஒளி'.

*எழுதுங்கள்!*

*உங்கள் அவலங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்!!*

உங்கள் ஆக்கங்களை அனுப்பவேண்டிய முகவரி:
'உயிர் வலிக்கும் கணங்கள்'
சுடர்ஒளி வாரமலர்,
இல. 85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.




# உயிரற்ற உடல்களையும் காயப்பட்டவர்களையும் கடந்து வந்தோம்

வன்னியில் போர் உச்ச நிலையை அடைந்தபோது அனைத்து மக்களும் இயல்பு வாழ்வு பாதிக்கப்பட்டவர்களாக இடம் பெயர்ந்து காப்பகழி அமைத்து உயிர்காப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார்கள். அவ்வாறான நிலையில் புதுக்குடியிருப்புப் பகுதியிலும் போர் மையம் கொண்டது.

இயல்பு வாழ்க்கை வாழ்ந்து வந்த எனது அக்காவின் குடும்பத்திலும் போர் தன் கோரத் தாண்டவத்தைக் காட்டியது. அத்தான் வசந்தன் (வயது 36) இரண்டு பிள்ளைகளின் தந்தை. அக்காவுக்கு அன்புக் கணவராக, உறவினர்களுக்கு உறுதுணையாக வாழ்ந்து வந்தார். பொருளாதாரக் கஷ்டத்தைப் போக்கவென தனியார் சிற்றூர்தி, முச்சக்கர வண்டி வைத்திருந்து அதன் உரிமையாளராகவும் தன்னகத்தே கள்ளம் கபடமின்றி குடும்பத்தோடு குதூகலித்து அவர் வாழ்ந்த காலம்.

பணி முடிந்து வீடு வரும் அவருக்கு ஓய்வு நேரத்தில் சுடர்ஒளி வாரமலர் வாசிப்பது வழக்கமாக இருந்தது. வாராந்தம் வெளிவரும் சுடர்ஒளி பந்திரிகையை தவறாது வாங்கிவருவார். அதனை இதழ்கள் மாறாது கட்டி வைத்துப் படிப்பதிலே அவருக்கு அதீத பிரியம்.



இந்த நிலையில் கொடிய யுத்தம் அவரது வாழ்வில் இயல்பைப் பாதிக்க, அதிலிருந்து குடும்பத்தைப் பாதுகாக்க தேவிபுரம் நோக்கி புறப்பட்டார். வீட்டுப் பொருட்களை ஏற்றிய வாகனத்தில் கட்டிவைத்த சுடர்ஒளி வாரமலரையும் ஏற்றத் தவறவில்லை.

அங்குபோன பின்னர் குடும்பத்தை நிலைப்படுத்தி காப்பகழி அமைத்து சில நாட்கள் கழியவில்லை வெடியோசையால் அப்பகுதியும் அதிர்கின்றது. குண்டுச் சிதறல்கள் குடிசையின் அருகே வந்து விழ பாதுகாப்புத் தேடி அங்கிருந்து இரணைப் பாலை நோக்கி நகர்ந்தோம். அங்கும் மிகவும் சிரமத்தின் மத்தியில் ஓர் இடத்தில் குடிசை போட்டு இருந்தோம். எறிகணைகள் அங்கும் விழத் தொடங்குகின்றன. அவசர அவசரமாக பாதுகாப்பு வலையம் (வலைஞர்மடம்) நோக்கிச் செல்கிறோம். உயிரைக் காப்பதற்காக ஓடியோடி இறுதியாக வந்தடைந்தோம் கடற்கரைப் பகுதிக்கு. மணல் பகுதி என்ப தால் காப்பகழி அடிக்கடி தூர்ந்து போகும். அதனை மீண்டும் மீண்டும் அத்தான் சரி செய்வார். உணவுப் பொருட்கள் இல்லாததினால் பசி, பட்டினி அதிகரித்தது. மக்களிடையே நோய்கள் பரவத் தொடங்கின. அதற்கு மருந்து போதியளவு இல்லாமல் அவதிப்பட்டோம். குண்டு பட்டு இறந்தவர்களின் உறவுகளின் ஒப்பாரி அழுகைகளும், காயப்பட்டவர்களின் வேதனை ஓலங்களும், செஞ்சிலுவைச் சங்கக் கப்பலின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருப்பும் என அந்த நாட்பொழுதுகள் கழியும். கொடுமையான அந்த நாட்களில் காப்பகழியை விட்டு வெளியே தலை தூக்க முடியாத நிலை. துப்பாக்கி ரவைகள் கூவிக்குக் கொண்டு வருவதால் எவரும் காப்பகழிக்கு வெளியில் வருவதில்லை. சில நேரங்களில் ஒரு நாள் முழுதும் காப்பகழியில் இருந்த கதையும் உண்டு.

சிறுவர்களை வைத்திருக்கும் குடும்பத்தினருக்கு உணவு போதாது. பால்மா கிடைக்காது. இவ்வாறான சூழலிலும், துப்பாக்கி வேட்டுக்களுக்கு மத்தியிலும் நீண்ட வரிசையில் நின்று உணவுப் பொருட்களையும் கடலுணவுகளையும் வாங்க அதிகாலையிலேயே சென்று விடுவார் எங்கள் அத்தான். இவ்வாறு இருக்கையில் நாங்கள் தங்கிய இருப்பிடத்துக்கு துப்பாக்கி ரவைகள் வரத் தொடங்கின. உயிர் தப்புவதற்காக உணவுப் பொருட்களின்றி, உடமைகள் இன்றி, வாகனங்களையும் கைவிட்ட நிலையில், கையில் அகப்பட்ட சில உடமைகளுடன் கடற்கரையோர சனநெருசலின் மத்தியில் வயது முதிர்ந்த எனது பெற்றோருடனும், கர்ப்பிணியாக இருந்த அக்காவுடனும், இரண்டு பிள்ளைகளுடனும் நடை பயணத்தை ஆரம்பித்தார் அத்தான்.

பாதுகாப்புக்காக அடிக்கடி நிலத்தில் விழுந்து படுப்போம். கூவி வரும் குண்டுகளுக்கும், துப்பாக்கி சன்னங்களுக்கும் விலகி விலகிக் கொண்டு எமது பயணம் தொடர்ந்தது. எறிகணைகளின் வீச்சினால் தறப்பாள் கொட்டகைகள் தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தன. கண் முன்னே தெரிந்தவர்கள், நேற்று எம்மோடு கதைத்தவர்கள் என்று பலர் இறக்கின்றார்கள். பலர் காயப்பட்டு அப்படியே விழுகிறார்கள். நின்று உதவ முடிவில்லை. வேதனையால் கத்திக் கத்தியே உயிரை விடுகிறார்கள். எங்கும் மரண ஓலம். இருள் சூழ்ந்த இரவுப் பொழுதில் கரும்புகையின் மத்தியில் கொட்டில்கள் எரியும் வெளிச்சமே வழிகாட்டியது. உறவுகளின் உயிருக்காக காப்பகழிகளை நோக்கி ஓடி ஓடி பாதுகாப்புத் தேடிக் கொடுத்துவிட்டு தானும் தன்னைப் பாதுகாக்கவென காப்பகழி ஒன்றில் அத்தான் பதுங்கினார். அன்று 2009 ஏப்பிரல் 24 ஆம் திகதி. இரவு 9.15 மணி. காப்பகழி அருகே விழுந்த எறிகணையின் ஓசையால் காதுகள் 'கிண்' என்றன. கரும்புகை கண்களை மூடியது. இருள் சூழ அனைவரின் மரண ஓலங்களும் இரத்தத்தை உறைய வைத்தன. திறக்க முடியாத அளவுக்கு காப்பகழியை கரும்புகை மறைத்துக் கொண்டது.

அனைத்தையும் இழந்தோம் என்ற நிலையில் மரண ஓலமே இறுதியாக இருக்க, மரணித்த மனிதர்கள் மத்தியில் எமது குடும்பத்தின் குல விளக்கான அத்தானும் கிடந்தார். அவர் காயப்பட்டிருந்தார். அவர் இறக்கவில்லை. அவசர அவசரமாக கடல் வழியாக முள்ளிவாய்க்கால் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றோம். அங்கு சிகிச்சைக்கு மருந்து இல்லை. அத்தானின் உயிர் இந்த உலகை விட்டுப் பிரிந்தது. கதறி அழுதோம். இத்தனை தூரமும் எங்களைக் காப்பாற்றி காப்பாற்றி அழைத்து வந்த அத்தான் இப்போது எம்முடன் இல்லை.

மறுநாள் காலை உறவினர் யாருமின்றி குடும்பத்தின் கண்ணீரோடு ஷெல்கள் ஆங்காங்கே வீழ்ந்து அதிர்ந்து கொண்டிருக்க, சவப் பெட்டியின்றி முள்ளிவாய்க்கால் மண்ணில் காப்பகழி ஒன்றினுள் அத்தானை அடக்கம் செய்தோம். எம் உயிர் காத்தவனை உயிரற்ற உடலாக குழியில் புதைத்தோம்.

அந்த அதிர்விலிருந்து மீளும் முன்னரே முள்ளிவாய்க்காலிலும் ஷெல்கள் எம்மைத் துரத்தத் தொடங்கின. நிலத்தில் விழும் ஒவ்வொரு உயிரற்ற உடலும், எஞ்சியுள்ள உயிர்களுக்குப் 'பாதுகாப்புத் தேடுங்கள்' என எச்சரிக்கை செய்வது போல இருந்தது. அத்தானை இழந்த சோகத்தில் இருக்கும் அக்காவுக்கு ஆறுதல் கூறமுடியவில்லை. இப்படியே மூன்று நாட்கள் கழிந்தன.

எப்பிரல் 27 ஆம் திகதி அன்று இரவு 11 மணி. காப்பகழியினுள் நித்திரையாக இருந்த எனது அக்காவின் மகனின் பிஞ்சு மார்பில் துப்பாக்கிச் சன்னம் பட்டது. இதை நேரில் பார்த்த நான் துடிதுடித்துக் கத்தினேன். அவனைத் தூக்கிக் கொண்டு 200 மீற்றர் தூரத்தில் அமைந்திருந்த வைத்தியசாலைக்கு ஓடினேன். இருளைக் கிழித்துக் கொண்டு வரும் எறிகணைகளுக்கும், துப்பாக்கி சன்னங்களுக்கும் இடையில் அவனுக்கு ஆறுதல் கூறிக் கொண்டு அவனை முத்தமிட்டபடி ஓடினேன். டாக்டர் அவன் உயிர் பிழைக்க மாட்டான் என்று கூறினார். மார்புப் பகுதியில் ரவை பாய்ந்துள்ளது என்றார். இல்லை இவன்து தந்தையையும் இழந்துவிட்டோம். இவனையாவது காப்பாற்றுங்கள் என்று கெஞ்சினேன். கும்பிட்டேன். கடுமையான முயற்சியின் பின்னரும் அவனை டாக்டரால் காப்பாற்ற முடிவில்லை. இறந்த அவனை ஓரிடத்தில் வைத்து அழக்கூட கொடிய யுத்தம் இடமளிக்கவில்லை. அவனின் உடலை காப்பகழியில் வைத்தோம்.

எஞ்சியோர் என் வயது முதிர்ந்த அம்மா, அப்பா, கணவனையும் பிஞ்சு மழலையையும் பறிகொடுத்த நிலையில் கர்ப்பிணியாக உள்ள அக்காவும், அவளின் ஆறு வயது மகனும். இதன் பின்பு கொலை வலயத்திலிருந்து உயிரற்ற உடல்களையும், காயமடைந்தவர்களையும் கடந்து கொண்டு வெயியேறினோம். மனித நேயமற்ற மனிதர்களாய், சோகங்கள் எம்மை வாட்ட, உடலில் உயிர் இருக்குமோ என்ற கேள்வியுடன் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியை நோக்கி நடந்தோம். இயற்கைக் கடன்களைக் கூட நிவர்த்தி செய்ய முடியாத நிலையில் நகர்ந்த நாட்களை இப்போது நினைத்தாலும் உள்ளம் நடுங்கும்.

**அந்த இறுதி நாட்களில் வன்னியில் நேர்ந்த அவலங்கள்**

இப்போது கண்களில் கண்ணீர் வருவதில்லை. அந்தக் கொடிய நிகழ்வை உறவுகயோடு கூட பகிர்ந்து கொள்ள முடியாத நிலைமை. அவர்களின் நினைவுகளை இதயக்குழியில் சுமந்தவாறு நாள் தோறும் முட்கம்பி வேலியினுள் கனத்த இதயத்துடன் விடிவை நோக்கி காத்திருக்கின்றோம்.

து. திலக் (கிரி)

# சிக்கன் குனியா நோயும் மூட்டுகளில் ஏற்படும் வலியும்



**கேள்வி:** எனது மகன், வயது 15. கொஞ்ச நேரம் கிடைத்தால் போதும் உடனே தூங்கிவிடுவான். காலையில் எப்படியாவது 5 மணிக்கு எழுந்துவிடுவான். ஆனால் இரவு 9 மணி ஆனதும் - என்ன பெரிய வேலை இருந்தாலும் நித்திரையாகி விடுவான். உடல்வலி, சோம்பல் தன்மை என்று அடிக்கடி கூறுவான். உங்கள் அபிப்பிராயம் கூறவும்.

**பதில்:** கல்வி கற்கும் மாணவர்களுக்குக் குறைந்தது 8 மணி நேரம் தூக்கம் அவசியம். அப்படித் தூங்கி எழுந்தால் தான் புத்துணர்வு ஏற்படும். , படிப்பில் மனம் ஒருங்கு சேரவும் (Concentration) முடியும். இன்றைய சூழ்நிலையில் கல்வி கற்கும் மாணவர்கள் எதிர்நோக்கும் போட்டி, எதிர்பார்ப்புகள் எல்லாம் அவர்களுக்கு மன இறுக்கத்தைத் தருகின்றன. இது தவிர, வீட்டு வேலைகள், பாடவிதான திட்டங்கள், பரீட்சைகள் போன்றவை எமது குழந்தைகள் உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் பாதிப்படையக் காரணமாக விளங்குகின்றன. போதாக்குறைக்கு இணையம், வீடியோ விளையாட்டுகள் போன்றவையும் எமது மாணவர்களின் கவனத்தை ஈர்க்கின்றன. ஒரே நேரத்தில் பல வேலைகளை, பல செயற்பாடுகளை கவனத்தில் எடுத்துக் காரியம் ஆற்றுவதும் (Multitasking) களைப்பு மற்றும் சோம்பல் தன்மையைத் தரும். எனவே முதலில் மகனோடு ஆற அமர உட்கார்ந்து அவரது பிரச்சினைக்கான காரணத்தைக் கண்டறியுங்கள். எமது மாணவர்களுக்கு நேர முகாமைத்துவம் பற்றி (Time Management) பாடசாலையிலோ, வீட்டிலோ எவரும் கற்பிப்பதில்லை. அவரது நாளாந்த வேலைகளில் - ஒவ்வொரு வேலைக்கும் ஒரு Priority முன்னுரிமை கொடுத்து - கட்டாயம் அன்றன்று செய்து முடிக்க வேண்டிய வேலைகள் என்ன, (Top Priority) எந்த வேலைக்கு கூடுதல் முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று பட்டியலிட்டு, வேலைகளை மேற்கொண்டால் அலுப்பு, சோம்பல் தன்மை, களைப்பு வராது. அவரது உணவிலும் கவனம் கொள்ளுங்கள். இந்த வயதில் நிறைய புரதம், குறைந்த மாச்சத்து உண்ணுவது மூளையைச் சுறுசுறுப்பாக்கும். வைட்டமின் மாத்திரைகளையும் உபயோகிக்கவும். படிப்புக்கு மட்டுமல்லாமல் - உடற்பயிற்சி, விளையாட்டு மற்றும் Social Enteraction என்கின்ற சமூக தொடர்பாடலும் இவருக்குத் தேவை.

**கேள்வி:** பெண், வயது 29. எட்டு மாதங்களுக்கு முன்னர் இந்தியா சென்றிருந்தபோது 'சிக்கன் குனியா' காய்ச்சல் வந்து கஷ்டப்பட்டேன். காய்ச்சல் குணமடைந்த பின்னரும் இன்னும் மூட்டுகளில் வலி உள்ளது. ஆங்கில வைத்தியம், ஆயுள்வேத வைத்தியம் எல்லாம் செய்தும் பலன் கிட்டவில்லை. வலி அதிகமாக இருப்பதால் ஆங்கில வலிநீக்கி மாத்திரைகளை உபயோகிப்பேன். இந்த மூட்டு வலிகள் முற்றாகக் குணமடைய பரிகாரம் உள்ளதா?

**பதில்:** 'சிக்கன் குனியா' நோயின் போதும் பின்னரும் - மூட்டுகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. பலருக்கு இந்தப் பாதிப்பு சில வருடக் கணக்கில் கூட இருக்கின்றது என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.. இது ஏன் ஏற்படுகின்றது என்பது பற்றி பல கருத்துகள் உள்ளன. அவற்றில் முக்கியமானது உடல் எதிர்ப்பு சக்தி சம்பந்தமான Immunoglobin பற்றியது. சிக்கன் குனியா காய்ச்சலின் பின்னர் உடலில் உருவாகின்ற இந்த Immunoglobin பொருள் மூட்டுகளிலுள்ள Cartilag எனப்படும் மென் எலும்புகளைப் பாதித்து - வாதக் குணத்தை ஏற்படுத்துகின்றது. இதனை Post Chikungunya Arthritis என்று குறிப்பிடுகின்றார்கள். சாதாரண Arthritis என்கின்ற வாதக்கோளாறு போலல்லாமல் - வீக்கம் அதிகம் இன்றி வலியோடு கூடிய மூட்டு நோயை இது ஏற்படுத்துகின்றது. இதற்கு வலிநீக்கி மாத்திரைகள் உதவினாலும் குணமாக்குவதில்லை. சமீப காலங்களில் Rhumatologist எனப்படும் விசேட வாதநோய் நிபுணர்கள் இந்த Immunoglobins பொருளை வலியிழக்கச் செய்ய Immunomodulators வகை மருந்துகளை உபயோகித்து - இந்த சிக்கன் குனியா வாதநோயை ஓரளவு குணப்படுத்தியுள்ளனர் என்று மருத்துவ உலகில் சில ஆய்வுகள் பகருகின்றன. சிக்கன் குனியா வாதப் பிரச்சினைக்கு L Levamisole 150mg மாத்திரைகளைத் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு தூங்கப் போவதற்கு முன்னர் உபயோகிக்குமாறு இந்தச் சிகிச்சை முறை கூறுகின்றது. இப்படிப் பல வாரங்களுக்கு உபயோகிக்க - பல நோயாளர்கள் 4ஆவது வாரத்திலே குணம் காணுவதாக அறிவிக்கப்படுகிறது. உங்கள் குடும்ப வைத்தியரின் ஆலோசனையுடன் இதனைப் பின்பற்றிப் பாருங்கள்.

**கேள்வி:** வயது 24. திருமணமாகி 3 ஆண்டுகள் கழிந்துவிட்டன. சிசேரியன் முறையில் ஒரு குழந்தையும் பெற்றுள்ளேன். என்றாலும் திருமணமாகிய நாளிலிருந்து உடலுறவு கொள்வதென்பது பெரும் வலியாக உள்ளது. உடலுறவின்போது நான் படும் வேதனை - வலி என்பது எடுத்து சொல்ல முடியாதது. கணவரைத் திருப்திப்படுத்து வதற்காக வலியைப் பொறுத்துக் கொண்டாலும் உடலுறவு என்று கொள்ளும்போது வெறுப்பும் பயமும்தான் ஏற்படுகின்றன. டாக்டர்களிடம் மனம் விட்டுப் பேசி சிகிச்சை பெற வெட்கமாக இருக்கின்றது. எனது பிரதேசத்தில் பெண் டாக்டர் ஒருவரும் இல்லாததும் ஒரு பிரச்சினை. எனவேதான் உங்கள் பத்தியில் இதுபற்றி ஆலோசனை கேட்க விரும்புகின்றேன்.

**பதில்:** உங்கள் பிரச்சினைக்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம். ஒன்று- உடலுறவின்போது ஏற்படும் வலி. இதனை Dyspareunia என்பார்கள். மற்றது உடலுறவுக்கு முன்னர் யோனிவாசல் ஏதோ ஒரு காரணத்தால் இறுக்கமடைந்து - Involuntary Contraction of Muscles Around the Opening - ஆண் உறுப்பு உள்ளே செல்வதற்கு இடம் கொடுக்காமல் வலி ஏற்படுவது. இதனை Vaginismus என்பார்கள். முதலாவது விடயத்தில் - ஏற்படும் வலி எரிவோடு மிக உச்சமாக அல்லது Cramping என்கின்ற தசைப்பிடிப்பு போல் இருக்கும். அது மேலோட்டமாக - பயத்தால் அல்லது உடலுறவுக்குத் தயாராக இல்லாத நேரத்தில் ஆண் உறுப்பு உட்செல்ல முயற்சிப்பதால் ஏற்படலாம். அல்லது யோனி வாசலில் ஏற்பட்டுள்ள Bartholin Cyst போன்ற தொற்றுகள், யோனித் துவாரத்தில் ஏற்படும் அழற்சிகள் அல்லது சிறுநீரக தொற்றுகளால் சிறுநீர்க்குழாயில் ஏற்படும் அழற்சி என்பவற்றால் கூட வலி ஏற்படலாம். யோனியின் உள்ளே இந்த வலி ஏற்படின்-பெண் உறுப்புகளான சூலகம், கருப்பை, பெலாப்பியன் குழாய்களில் ஏற்பட்ட தொற்றுகள் காரணமாக இருக்கலாம். எனவே ஒரு மகப்பேறு வைத்தியரின் ஆலோசனை, பரிசோதனை இங்கு மிகவும் அவசியமாகிறது. இவைகள் எதுவும் காரணமில்லாவிடில் சாதாரண Analgesic Gel எனப்படும் வலி நீக்கும் பூச்சு மருந்துகளை உடலுறவுக்கு முன்னர் யோனியில் தடவி - உடலுறவு கொள்வதை வைத்தியர்கள் அறிவுறுத்துகின்றார்கள். Vaginismus காரணமாக ஏற்படும் வலிக்கு - சில வேளைகளில் சிறு வயதில் ஏற்பட்ட வேண்டாத பாலியல் தொடர்பு அல்லது விரும்பாத பாலியல் செயல்கள் - மனதைப் பாதித்திருந்தால் ஏற்படும் என்றும் சிலர் நம்புகின்றார்கள். இதேபோல் - உடலுறவில் விருப்பம் இல்லாவிடிலும், கருத்தரித்துவிடுமோ என்ற பயம் காரணமாகவும், யோனி வாசல் இறுக்கமடைந்து உடலுறவின்போது வலியை ஏற்படுத்தும். இப்படியான வலிக்கு Kegel Exercises என்று இடுப்பு (Pelvic) தசைகளை இளக்கும் பயிற்சிகள் உதவும். இப்பயிற்சிகள் பற்றி - மகப்பேற்று வைத்தியர் ஒருவரிடம் கேட்டு அறிந்து கொள்ளலாம். இத்தனைக்குப் பின்னரும் வலி தொடர்ந்து இருக்குமாயின் - Fention Repair என்கின்ற சத்திர சிகிச்சை மூலம் நிச்சயம் குணம் காணலாம். எனவே வெட்கத்தை விட்டு தகுந்த ஆலோசனை பெறுவதே நல்லது.

**கேள்வி:** தனது மகள் வயது 21 மருத்துவ கல்லூரி மாணவி. இரவில் நிறைய நேரம் கண்விழித்து பாடங்களை படித்து காலையில் பிந்தி எழும்புவாள், இப்படி கடந்த 2 1/2 வருடங்களாக நடந்து வருகிறது. இதனால் போதிய நாட்களுக்கு வகுப்புக்கு சமூகமளிக்காததால்- இடையிடை நடைபெறும் - கருத்தரங்குகள் விசேட பயிற்சி வகுப்புகள் என்பவற்றில் கலந்துகொள்ளாத காரணத்தால் பரீட்சைக்கு சமூகமளிக்கவில்லை. உளவளத்துறை நிபுணரின் ஆலோசனை பெற்றும் பலன் இல்லை. இதனால் தனித்து நண்பர்கள் இல்லாமல் வாழ்கிற மன அழுத்தத்தால் பாதிக்கப் பட்டுள்ளார். நாங்கள் பெற்றோர் எப்படி அவருக்கு உதவமுடியும். விளக்கம் தருக.

**பதில்:** உங்கள் விவரங்களின் அடிப்படையில் பார்க்கும் போது அவருக்கு DELAYED SLEEP PHASE SYNDROME ஏற்பட்டிருக்கின்றது. சாதாரண மனிதருக்கு நித்திரை வட்டம் எனப்படும் SLEEP CYCLE 10-11 மணியிலிருந்து ஆரம்பமாகி- விடியற் காலை 6-7மணிவரை நடை பெறுகிறது. மேற்குறிப்பிட்ட DSPS கோளாறு ஏற்பட்டவர்களுக்கு இந்த வட்டம் பின் தள்ளப்பட்டு விடியற் காலை 2-4 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 7-8 மணிவரை தூங்கச் செய்கின்றது. இப்படி இந்த நித்திரை வட்டம் பின் தள்ளப்பட்டதால் பின் தூங்கி முன்னால் எழும் பழக்கம் மாறி- பின் தூங்கி பின்னால் எழும் பழக்கம் ஏற்பட்டு விட்டது. இவர்கள் நேரத்தோடு படுக்கச் சென்றாலும் இவர்களுக்கு தூக்கம் வராது அல்லது காலையில் வேளைக்கு எழும்ப முயற்சித்தால் அன்றைய தினம் முழுவதும் தூக்க கலக்கத்தோடும் களைப்போடும் காணப்படுவார்கள். வளர் இளம் பராயத்தில் தான் இந்த DSPS கோளாறு ஆரம்பமாகி, பின்னர் கல்லூரிக்கு, வேலைக்கு போகும் காலத்தில் பிரச்சினையாக போய் விடுகிறது. இந்தக் கோளாறு உள்ளவர்களுக்கு மன அழுத்தம் MOOD DISO RDERS என்கின்ற நேரத்திற்கு மாறும் குணநல பண்புகள் சேர்ந்து இருப்பதோடு. இதற்கு அடிப்படையான வேறு காரணங்கள் உள்ளதா என்பதும் ஆராயப்பட வேண்டும். வேறு நோய்களின் வெளிப்பாடாக சில வேளைகளின் DSPS தோன்றுகின்றது. SLEEP SPECI ALIST, அல்லது PSYCHIATRIST WITH SLEEP MEDICINE SPECIALIZATION போன்ற விசேட- மன நலவைத்தியர்களின் ஆலோசனை இங்கு அவசிய மாகியது.

* * *

இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
டாக்டர்
எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்த மல்லிமாராய்ச்சி
மாவத்தை, கொழும்பு - 14.

# அம்பலத்துக்கு வந்த அந்தரங்கம்!

சித்தி, அண்ணாமலை, மனைவி, பெண், அஞ்சலி, கோகுலத்தில் சீதை, சாவித்திரி என்று பரபரப்பு தொடர்களை இயக்கியவர் சி.ஜே.பாஸ்கர். இவர் மீது தற்போது மலைமலையாக செக்ஸ் புகார்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. இவரது சீரியலில் நடித்த நடிகைகளே கூறி குமுறுகின்றனர்.

''நான் சினிமாவில் சில படங்களில் கதாநாயகியாக நடிச்சேன். பெரிய வாய்ப்பு இல்லாததால் சீரியல் பண்ணலாம் என்று ஐடியா பண்ணி இவரிடம் சான்ஸ் கேட்டுப் போனேன். ஜீன்ஸ், டி-ஷேர்ட் போட்டிருந்தேன். 'அழகா இருக்கம்மா... புடைவையில நீ எப்படி இருக்கிறாய் என்று பார்க்கணும்' என்றார். இது டைரக்டர்ஸ் எல்லாருமே கேட்கிறதுதான். தங்களின் கேரக்டருக்கு ஏற்ற மாதிரி இருக்கிறோமா என்று பார்ப்பாங்க. நானும்... 'புடைவை எடுத்துட்டு வந்திருக்கேன் சார், சேஞ்ச் பண்ணிடுறேன். வேற ரூம் இருக்கா' என்று கேட்டேன். 'வேற ரூமா? அதெல்லாம் கிடையாது, இங்கேயே ஜீன்ஸை கழட்டி விட்டு புடைவையை மாத்து' என்றார். எனக்கு ஷாக் ஆயிடிச்சு. 'என்ன சார் இப்படி கேக்குறீங்க?' என்றேன். 'என் முன்னாடி ஜீன்ஸ் கழட்டாமல் சான்ஸ் கிடைக்காது' என்றார். எனக்கு சீரியலே வேண்டாம் என்று வந்துட்டேன்'' என்று கண்ணீர் பொங்கப் பொங்க பேசினார் ஒரு நடிகை.

இதேபோல் அவர் தொடரில் 'சந்திப்புக்கு' சம்மதிக்காத ஒரு நடிகையை வஞ்சம் தீர்க்க, அவரை மாடியிலிருந்து இறங்கி வரும்போது நடிகர் ஒருவரை வைத்து அவர் நெஞ்சில் இடித்துவிட்டுப் போவதுபோல் காட்சியை வைத்து, அதை 10 தடவைகளுக்கு மேல் டேக் எடுத்திருக்கிறார். தொடர்ந்து நெஞ்சில் இடி வாங்கிய அந்த நடிகை அந்த இடத்திலேயே மயங்கி விழுந்திருக்கிறார்.

மற்றொரு சம்பவம். பள்ளியில் படித்துக் கொண்டே சீரியல் ஆசைக்காக நடிக்க வந்த டீன்ஏஜ் பெண் அவர். பிரபலமான 'உறவு முறையில் அம்மா' தொடரில் நடித்திருக்கிறார். லஞ்ச் பிரேக்கில் ஓய்வெடுக்க அறைக்குள் நுழைந்தவரின் பின்னால் நுழைந்திருக்கிறார் இயக்குனர். கட்டிப்பிடித்து ஏடாகூடமாக நடக்க முயல... அலறி கூச்சல் போட்டிருக்கிறார் டீன்ஏஜ் மாணவி. இயக்குனர் கொஞ்சம் பயந்து பின்வாங்கிவிட்டார்.

இப்படி சின்னத்திரை ஏரியாவில் பாஸ்கரைப் பற்றி சொல்லும் சம்பவங்கள் எல்லாம் மெகா சீரியலையும் தூக்கி சாப்பிட்டுவிடும் போல் தெரிகிறது.

தயாரிப்பாளர் சங்கத் தலைவர் குஷ்பூ கூறியதாவது:-

''சரியான நேரத்தில் இந்த முடிவை எடுத்திருக்காங்க. நடிகைகள் மட்டுமல்ல, தயாரிப்பாளர்களும் பாஸ்கரால் பாதிக்கப்பட்டிருக்காங்க. நஷ்டப்பட்டு அழுது புலம்பிய பெரிய தயாரிப்பாளர்களை எனக்குத் தெரியும். பெண்களுக்கு எதிரான இந்த செக்ஸ் கொடுமைக்குத்தான் இந்த நடவடிக்கை. மற்றபடி பாஸ்கரை அவமானப்படுத்தவோ, அவருடைய வேலையைக் கெடுக்கவோ இல்லை. சின்னத்திரையில் இருந்த இந்தப் பூனைக்கு யார் மணிகட்டுவது என்று நிறைய நடிகைகள் கேட்டாங்க. இப்ப கட்டியாச்சு'' என்றார் குஷ்பூ.




# தனிமையில் ஆஞ்சலினா



இந்த நூற்றாண்டில் மீடியாவின் உச்சபட்ச புகழ் வெளிச்சத்தில் நனைந்த முதல் காதல் தம்பதி... ஏஞ்சலினா ஜூலி - பிராட் பிட். 'மிஸ்டர் அண்ட் மிஸஸ். ஸ்மித்' என்ற படத்தில் ஜூலி - பிராட் பிட் இணைந்து நடித்தபோது, இருவரும் நெருக்கமாகித் திருமணம் செய்துகொண்டார்கள்.

பிராட் பிட்டுடனான திருமணம் ஜூலிக்கு மூன்றாவது திருமணம். ஜோடி சேர்ந்து கிட்டத்தட்ட நான்கு வருடங்கள் ஒளி வெள்ளத்துக்கு இடையே குடும்பம் நடத்தி வந்த ஏஞ்சலினா ஜூலி - பிராட் பிட் தம்பதியிடையே இப்போது விவாகரத்து விரிசல்.

# கவிதா பாலிகாவா இது...?



கோதுமை நிற அழகி என்பதற்கு கவிதா பாலிகாவைக் காட்டினால் அர்த்தம் புரியும். அந்த துறுதுறு வண்டுக் கண்களே பல விஷயங்களை வேகமாகப் பேசிவிடுகின்றன.

இசைப்புயல் ஏ.ஆர்.ரஹ்மானின் இசைக் கல்லூரியில் வெஸ்டர்ன் கிளாசிகல் கற்றுத் தர அமெரிக்காவிலிருந்து பறந்து வந்துள்ள டீச்சர்தான் கவிதா. மங்களூரில் பிறந்து அமெரிக்காவில் குடியேறிய குடும்பம்.

மேற்கத்திய இசை மட்டுமல்ல. எப்படி கச்சிதமாகப் பேச வேண்டும் என்பதையும் கவிதாவிடம் கற்கலாம்!.

தத்துவ மேதை சோக்ரடீஸ், தனது வீட்டில் நண்பருடன் உரையாடிக் கொண்டிருந்தார். மனிதர்கள் வாழ்க்கை, இறைவன், தத்துவம் என்றெல்லாம் பேசிக் கொண்டிருந்தார் சோக்ரடீஸ்.

அப்போது அவரது மனைவி, அழைக்க அதைக் கவனிக்காமல் தொடர்ந்து உரையாற்றிக் கொண்டே இருந்தார் சோக்ரடீஸ். அதனால் கோபமடைந்த மனைவி, வசைமாரி பொழிய ஆரம்பித்தார். அதையும் கண்டுகொள்ளாமல் பேசிக்கொண்டே இருந்தார் சோக்ரடீஸ்.

ஒரு கட்டத்தில் ஆத்திரத்தின் உச்சிக்கே சென்ற அவரது மனைவி, ஒரு வாளி தண்ணீரை சோக்ரடீஸ் மீது கொட்டினார். கொஞ்சமும் பதறாமல் சோக்ரடீஸ் சொன்னார்;

''முன்பு இடி இடித்தது இப்போது மழை பெய்கிறது, அவ்வளவு தான்!''

''அம்மா! நாளைக்கு எனக்கு லீவு வேண்டும்?''

''ஐயாக்கிட்டே சொல்லு''

''லீவு வேண்டும் என்றா?''

''இல்ல என்னென்ன வேலை செய்ய வேண்டும் என்று....''



# தோல்வி

## நிமிடக்கதை

''வாழ்க்கையில் எங்கும் எதிலும் தோற்காமல் வெற்றிக்கொடி கட்டி போராடவேண்டும். போட்டிகளில் விட்டுக்கொடுத்துப் போகும் சுபாவத்தை அறவே விட்டொழிக்க வேண்டும். தோல்வி என்பது சுவையற்ற ஒரு பொருள். ஆகையால், தோல்விக் காற்று நம் மீது படாமல் கவனமாகச் செயற்பட வேண்டும். அது நம் மனதின் உற்சாகத்தைக் குலைத்து விடும்'' என்று அந்த இளம் தொழிலதிபர்கள் நிறைந்த கூட்டத்தில் ஆவேச உரை ஆற்றிவிட்டு வீடு திரும்பினார் பிரபல தொழிலதிபர் சிவா. அவர் வருகைக்காகக் காத்திருந்த நான்கு வயது பேரனை அள்ளி அணைத்து முத்தமிட்டார்.

''தாத்தா, கிரிக்கெட் விளையாடலாம் வாங்க'' என்று கையில் புதிய மட்டையுடன், பேரன் அழைத்ததை அவரால் தட்டமுடியவில்லை.

கிரிக்கெட் விளையாடும்போது, குட்டிப் பேரன் வீசிய ஒவ்வொரு பந்திலும் வேண்டுமென்றே அவுட் ஆகி, வருத்தப்படுவதுபோல் பாவனை செய்தார். தான் வீசிய பந்துகளை அவன் அடித்தபோது, அதைத் தடுக்க முடியாததுபோல் நடித்தார்.

அவற்றைக்கண்டு, பேரன் தைதட்டி ரசித்ததைக் கண்டு புளகாங்கிதம் அடைந்தார். வியாபாரத்தில், ஒரே நிமிஷத்தில் கோடி ரூபாய்கள் இலாபம் ஈட்டியபோதுகூட அம்மாதிரி சந்தோஷத்தையும், உற்சாகத்தையும் அவர் அடைந்ததில்லை.

அதோடு, சில சந்தர்ப்பங்களில், தோல்வியிலும், விட்டுக் கொடுத்து செயற்படுவதிலும் பிரத்தியேக சுவை இருப்பதை உணர்ந்தார்.

# தில்லாலங்கடி தம்மன்னா



''ஓ... நிறைய ப்ரெண்ட்ஸ் உண்டே. எல்லாமே சினிமாலதான் இருக்காங்க. வார இறுதியில் நாங்க ஒரு இடத்துல கூடிட்டா, செம லூட்டி தான். ஷூட்டிங் காமெடி, கிசுகிசுன்னு நேரம் போறதே தெரியாது!'' இப்படிச் சொல்பவர் வேறு யாருமல்ல தம்மன்னா தான்.

''பூனம் பஜ்வா, வேதிகா, ப்ரியா மணி, காஜல், இலியானா இவங்க தான் இவரது நண்பர்கள்.



# 'டபுள்' ரோல்

1900 - ஜூலை மாதம் 12 ஆம் திகதி இத்தாலி நாட்டு அரசன் 'அம்பாட்டோ' ஒரு விருந்தில் கலந்து கொண்டான். அங்கே விருந்து சாப்பிட வந்த ஒரு குறிப்பிட்ட ஆளைப் பார்த்ததும் ஆச்சரியப்பட்டான். அவன், அசப்பில் அரசன் அம்பார்டோ மாதிரியே இருந்தான். அரசன் அவனை அழைத்தான். அவன் பெயரைக் கேட்டான். 'அம்பார்டோ' என்றான். உருவமும் ஒரே மாதிரி இருக்கிறது. பெயரும் ஒன்றாக இருக்கிறதே! என்று



எல்லோரும் வியப்போடு பேசிக் கொண்டார்கள்.

அரசன் தன்னைப்போலவே இருக்கும் அம்பார்டோவை தன் அருகில் ஒரே மேஜையில் உட்கார வைத்து சாப்பிடச் சொன்னான்.

அப்போதுதான் தெரிந்தது. இரண்டு பேருக்கும் ஒரே மாதிரி இடதுகைப் பழக்கம் இருக்கிறது என்பது!

இது மாதிரி நடப்பது என்பது பெரிய அதிசயம் என்று பலர் பேசினார்கள். ஆனால் சில சோதிடர்கள், ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் பிறந்த இருவரிடம் இப்படிப்பட்ட பல ஒற்றுமைகள் இருக்கும். அப்படிப் பிறந்தவர்கள் எங்கெங்கோ பிரிந்து வாழ்வதால் இது நமக்குத் தெரிவதில்லை. அந்த இரண்டு பேரும் சந்திக்கும்பொழுது இப்படிப்பட்ட ஒற்றுமைகள் இருப்பது தெரியவரும் என்று விளக்கினார்கள்.

அதற்கு பிறகு அரசனும், அம்பார்டோவும் நெருங்கிய நண்பர்களாகி விட்டார்கள். 1902 ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி இத்தாலியில் ஒரு விளையாட்டு விழா நடந்தது.. அரசன் தன்னைப் போலவே இருக்கும் அம்பார்டோவை அந்த விழாவுக்கு அழைத்திருந்தான். விழா தொடங்கும் நேரம் வரை அம்பார்டோ வரவில்லை. அரசன் மனதில் ஏதோ ஓர் அச்சம் தேவையில்லாமல் சூழ்ந்தது. தனது ஆட்களை அனுப்பி உடனே அம்பார்டோவை அழைத்து வரச் சொன்னான்.

ஆட்கள் போனபோது அம்பார்டோ வீட்டில். அவனுக்கும் அவனது கூட்டாளிகளுக்கும் ஏதோ வாக்குவாதம் நடந்து முற்றிய நிலையில் இருந்தது. அரண்மனை ஆட்கள், அரசன் சொன்ன செய்தியை சொல்ல முனையும்போது அம்பார்டோவை அவனது கூட்டாளிகளில் ஒருவன் கோபம் கொண்டு துப்பாக்கியால் சுட்டுவிட்டான்.

விழாவில் அதே நேரத்தில் ஒரு புரட்சிக்காரனால் அரசன் மார்பிலும் வலது பக்கம் தான் குண்டு பாய்ந்திருந்தது.

ஒரு கதை

# மாற்றம்

அது ஓர் அழகான பெட்டைக்கோழி. பார்க்கின்ற சேவல்களின் உணர்வுகளை உசுப்பிவிடுமளவுக்கு திடகாத்திரமான கோழி. ஆனால் அப்போது முட்டையிட்டு முடிந்து அடைகாலம் ஆரம்பித்து ஒருவாரம். அடைவைப்பதற்குப் பக்குவமான காலமும் அதுதான். சேவல்கள் சில அந்தப் பேட்டைப் பார்த்து குரலை எழுப்பி தம் கூட அழைத்துக்கொள்ளுமே தவிர அதற்கு மேலும் அந்தப் பேட்டைத் துன்புறுத்துவதில்லை. ஆறறிவு ஜீவராசிகளுக்குக் கூட இல்லாத அத்தனை ஒரு நாகரீகமான காம உணர்வு அவைகளுக்கு.

செந்தூரன் வயது ஆறு. விவசாயி சிவனேசனுக்கும் அவனது மனைவி பிரியங்காவுக்கும் பிறந்த முதல் மகன்தான் செந்தூரன். பிரியங்கா படித்தவள். அழகானவள். ஆறு பெண்பிள்ளைகள் கொண்ட குடும்பத்தில் பிரியங்கா ஐந்தாவது. சிவனேசனைக் கரம்பிடித்த அடுத்த ஆண்டே அந்த தம்பதிக்கு பிறந்த முதல் வாரிசுதான் செந்தூரன். அதற்கு பின் வைஸ்ணவி வயது ஐந்து, காயத்திரி வயது மூன்று. அதற்குப் பின் சிசேரியன் அவனுக்கு வயது மூன்றுதான்.

அடைபடுத்திருந்த கோழிக்கு அடைமுட்டைகளைத் தெரிந்தெடுத்து, வீட்டிலிருந்த பன்னிரண்டு முட்டைகளுடன் பக்கத்து வீட்டு கழுத்து வெட்டி கோழியின மூன்று முட்டைகளையும் வாங்கி பதினைந்தாக அடைவைத்தாள் பிரியங்கா. அவளுக்கு வயது வெறும் இருபத்தேழரை. பிரியங்கா கோழிமுட்டைகளை அடுக்கி அதன்மீது கோழியை உட்காரவைத்த நாள் ஒரு திங்கட்கிழமை. ஏனென்றால் திங்கட்கிழமையென்றால் தான் அதிகம் பேட்டுக்குஞ்சுகள் பொரிக்குமாம். அது அவளின் நம்பிக்கை. ஆனால் அருகிலிருந்த செந்தூரனோ பிரியங்காவிடம் அறிவுபூர்வமாகக் கேட்ட கேள்விகள் பிரியங்காவைச் சற்றுத் திக்குமுக்காடத்தான் வைத்தன.

''அம்மா எப்ப குஞ்சு பொரிக்கும்...? எப்பிடியம்மா குஞ்சு பொரிக்குது...? எப்பிடியம்மா முட்டைக்குள்ள இருந்து குஞ்சு வெளியில வரும் ?''

செந்தூரனின் கேள்விகளுக்கு பிரியங்காவின் பதில்கள் அவசரத்தில் வெளிவந்தன.

செந்தூரனின் மனது இருபத்தொரு நாட்கள் எப்போது வரும் என்று எண்ணிக்கொண்டிருந்தது. ஆனால் குஞ்சுகள் வேளைக்கே பொரித்துவிட்டால்...? செந்தூரனின் சிறுபிள்ளை மூளை அவனைக் குடைந்துகொண்டிருந்தது.

அடைகட்டி அடுத்தநாள் அம்மாவுக்குத் தெரியாமல் செந்தூரன் அடைக்கோழிப்பக்கம் சென்றான். அப்போது சில நுள்ளான்கள் முட்டைகள் வைத்திருந்த பெட்டியில் ஏறியிறங்கிச் சுறுசுறுப்பாக விளையாடிக்கொண்டிருந்தன.

''அம்மா... அம்மா... எறும்பு அம்மா... ஓடிவாங்கோ...'' செந்தூரன் கூவி அழைக்க பிரியங்கா ஓடிவந்தாள். அடைக்கோழி அலுத்துக்கொண்டு தனது பாஷையில் பிரியங்காவைத் திட்டித்தீர்த்தது. அதைப்பொருட்படுத்தாது பிரியங்கா அந்தக்கோழியைத் தூக்கி வெளியே வைத்துவிட்டு முட்டைகளை எண்ணினாள். ஒரு முட்டை உடைந்திருந்தது. 'முதல் அடைக்காலம் கோழிக்குப் புதுசு. அதுதான் உடைச்சுப்போட்டுது' பிரியங்கா தனது பாட்டுக்குச் சொல்லிக்கொண்டே உடைந்துபோன முட்டைக்கழிவுகளை வைக்கோலுடன் அப்புறப்படுத்தினாள். முட்டைக் கடகத்தின் அடியில் இரண்டு மூன்று பேப்பர்களைப் போட்டு அதற்கு மேலே புதிய வைக்கல் பரப்பி முட்டைகளை அடுக்கி எண்ணினாள் பிரியங்கா.

''செந்தூரன்... உள்ளுக்குப் போய் இரண்டு மூன்று பேப்பர்த்துண்டு எடுத்துக்கொண்டு வாடி செல்லம்...'' பிரியங்கா கூறிய மாத்திரத்திலேயே செந்தூரன் வீட்டுக்குள் சென்றான். பேப்பர்கள் சிலவற்றைத் தேடினான். அப்போது ஜனாதிபதித் தேர்தல் அறிவித்திருந்த காலம். செந்தூரன் கண்களுக்கு முதல் நாள் அப்பா கொண்டுவந்த தேர்தல் பிரசாரத் துண்டுகள்தான் காட்சி கொடுத்தன. வேட்பாளர் ஒருவர் பலவர்ணப் புகைப் படங்களில் தோன்றி பல வாக்குறுதிகளை எழுதியிருந்த பெரிய இரண்டு பத்திரிகைப் பிரசுரத்துண்டுகளுடன் பிரியங்காவிடம் விரைந்தான் செந்தூரன். செந்தூரன் கொண்டுவந்த பத்திரிகைத்துண்டுகளை வாங்கிய பிரியங்கா சற்றுநேரம் அதை உற்றுப்பார்த்தாள். வேட்பாளர் ஒருவர் தனது இரண்டு விரல்களையும் காண்பித்து வெற்றிச்சைகை காட்டியிருந்த அழகிய அச்சுப்பதித்த பிரசுரத் துண்டு அது. இரண்டு பிரசுரத்துண்டுகளும் இரண்டாக மடிக்கப்பட்டு முட்டைக் கடகத்தின் அடிப்பாகத்தை மறைத்தன. அதன்மேல் வைக்கோல் போடப்பட்டு எஞ்சியிருந்த பதினான்கு முட்டைகளுக்கும் எறும்புக்கவசம் இடப்பட்டது. சினம் கொண்டிருந்த அடைக்கோழியின் சிறகுகள் மீண்டும் முட்டைகளை மூடிக் கொண்டன.



செந்தூரனும் இருபது நாட்கள்தான் என்றவாறு அவ்விடத்தைவிட்டு வெளியேறினான்.

தேர்தல் திருவிழா சூடுபிடிக்க அனைவரது உதட்டிலும் அது பற்றிய செய்திதான் ஆக்கிரமித்திருந்தது. ''அவன் வருவான்-அவன்தான் வருவான், இவன் வருவான்-இவன்தான் வருவான்...'' தத்தமது ஊக அறிவுக்கு எட்டியவாறு அனைவரும் தமது நம்பத்தகுந்தவர்களிடம் மட்டும் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டிருந்தனர். அடைவைத்த நாளிலிருந்து செந்தூரன் இருபத்தொரு நாட்களை எண்ணி அந்தநாளைத் தனது மனதில் பதித்துக்கொண்டான். 'குஞ்சுகள் எப்போது முட்டையிலிருந்து வெளிவரும் அவற்றை எப்போது என் கண்களால் பார்த்து ரசிப்பேன்...?' என செந்தூரனின் பிஞ்சு உள்ளம் நாட்களை எண்ணிக்கொண்டிருந்தது. கோழி அடைகாத்த முட்டைகளை ஒவ்வொரு நாளும் சென்று பார்ப்பதற்கும் அவன் தவறுவதில்லை. அதுவும் பிரியங்கா இல்லாத நேரத்தில்த்தான்.

அப்பா சிவநேசனும் ஆங்காங்கே கிடைக்கப்பெற்ற தேர்தல் பிரசுரங்களை வீட்டுக்குக் கொண்டுவந்து அடுக்கி அடுக்கி மலைபோலக் குவித்துவந்தார். வாக்குறுதிகள் மலைபோலக் குவிந்துகிடந்தன. தேர்தலுக்குப் பத்து

**-ஏகாம்பரம் தினேஸ்-**

நாட்கள் இருக்கும்போது அனைவரது உள்ளத்திலும் அதுபற்றிய எதிர்பார்ப்புகள் அதிகரித்துக் கொண்டேயிருந்தன. செந்தூரனின் கணிப்பின்படி கோழிக் குஞ்சு பொரிக்கும் நாள் தேர்தலுக்கு மறுநாள் என்பதை அவனது மழலை நெஞ்சம் எண்ணி எண்ணி அந்த நாளுக்காக ஏங்கிக்கொண்டிருந்தது.

தேர்தலும் நெருங்கிக் கொண்டிருந்தது. செந்தூரனின் அப்பா, அம்மா அவனது பக்கத்து வீட்டுக்காரர்கள், அவனது ஊரார், பிரதேசத்தார் அனைவரும் ஒரு முடிவெடுத்தவர்களாக தேர்தல் திருவிழாவுக்கு எஞ்சியிருந்த நாட்களை எண்ணிக்கொண்டிருந்தனர்.

செந்தூரனுக்கு தேர்தல் பற்றி எந்த அக்கறையும் இருக்கவில்லை. அவனுக்கு இருந்த ஒரே எதிர்பார்ப்பு அடைக்கோழி, அதன்கீழ் வைக்கப்பட்டிருந்த முட்டைகள், அது பொரிக்கப் போகும் குஞ்சுகள். அப்பா, அம்மா தேர்தல் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும் போது அவன் நெஞ்சம் கோழிக்குஞ்சுகள் பற்றித்தான் சிந்தித்துக்கொண்டிருந்தது. பள்ளிக் கூடம் விட்டு வந்தவுடன் அவன் அஜராவது கோழி அடைகாத்த பெட்டியின் முன்தான். அதுவும் பிரியங்கா அதனை அவதானிக்காதபோதுதான்.

மாதம் வாரமாகி, வாரங்கள் நாட்களாகக் குறைந்து தேர்தல் திருவிழாவும் வந்துசேர்ந்தது. பட்டாசுகள் சகிதம் திருவிழாவும் களைகட்டி அன்று மாலையே முடிவுக்கு வந்தது. செந்தூரனைப் பொறுத்தவரை அது இருபதாவது நாள். மறுநாள் கோழிக்குஞ்சுகள் பட்டுப்போன்ற மேனியுடன் முட்டையிலிருந்து வெளிவரப்போகும் நாள். அவன் இருபது நாட்களாகக் காத்திருந்த நாள். அந்தச் சிறு பிள்ளையின் கனவுகள் நனவாகப் போகும்நாள்.

ஆனால் அவனது ஊரைப்பொறுத்தவரையில் அதே நாள் தான் அவர்களது தலைவிதியைத் தீர்மானிக்கப்போகின்ற நாள். தாங்கள் கீறிய புள்ளடிகள் ஏணியாகவோ அல்லது ஏராகவோ மாறப்போகின்ற நாள்.

அன்று இரவு பத்துமணி, செந்தூரன் கோழிக்குஞ்சுக் கனவுகளுடன் தூக்கத்துக்குச் சென்றான். ஆனால் அவனது ஊரவரோ தொலைக்காட்சிப் பெட்டிகளின் முன் மண்டியிட்டிருந்தனர். செந்தூரனின் அப்பா சிவநேசனும் தொலைக்காட்சிக்கு முன்பாகவிருந்து எதையெதையோ எண்ணிக் கொண்டிருந்தார். அன்றைய தினம் சில திரைப் படங்களும் காண்பிக்கப்படவிருந்தன.

மறுநாள் அதிகாலை நேரம் ஐந்து மணி முப்பதைக் கடந்திருந்தது. செந்தூரனின் சிறுமூளையில் கோழிக்குஞ்சுகள் கொத்தி அவனைத் துயிலெழுப்பின. நேராக ஓடிச்சென்ற செந்தூரன் அடைகாத்த கோழியைத் தூக்கிக் கீழே போட்டுவிட்டு குஞ்சுகளைத் தேடினான். அங்கே எந்தக் குஞ்சும் பொரித்திருக்கவில்லை. செந்தூரனின் மனதில் இடிவிழுந்தது போலிருந்தது. ''அம்மா... அம்மா...'' என்று அலறியழைத்தான். அம்மா பிரியங்கா எழுந்துவந்தாள். செந்தூரன் தனது கவலையை அடக்க முடியாமல் கண்களால் பேசினான். அப்போதுதான் அம்மா பிரியங்காவுக்கு கோழிக்கு முட்டை வைத்து இருபத்து ஒரு நாட்கள் முடிந்துவிட்ட நினைவு வந்தது. ஆனால் ஒரு முட்டைகூட சொண்டு கொத்தியிருக்கவில்லை. செந்தூரன் முட்டைகளை ஒவ்வொன்றாக எடுத்துக் குலுக்கத் தொடங்கினான். எல்லா முட்டைகளிலிருந்தும் குலுங்கல் ஒலி வெளியேறியது.

அம்மா பிரியங்கா அந்த ஓசைகளைக் கேட்டு அதிர்ந்து போய்நின்றாள். எல்லா முட்டைகளும் கூழ் முட்டைகளானது எப்படியென்று அவளால் ஊகித்துக் கூடப் பார்க்க முடியவில்லை. இருப்பினும் அவளாலும் அதனை ஜீரணிக்க முடியவில்லை. ''சே... எல்லா முட்டைகளும் கூழ்... ஒருக்காலும் இப்பிடி வந்ததில்லை...'' பிரியங்கா வாய்க்குள் முணுமுணுத்தபடி அலுத்துக்கொண்டாள்.

விவரம் அறியாத செந்தூரன் பேச ஆரம்பித்தான் ''அம்மா... குஞ்சுக்கு வைச்சு பத்து நாளிலேயே எல்லாம் இப்பிடித்தான் குலுங்கிச்சுது... நான் எல்லாத்திலயும் குஞ்சுதான் குலுங்குது எண்டு நினைச்சன்...'' செந்தூரன் கூறிப் பெருமூச்சு விட்டுக் கவலையுடன் காட்சி தந்தான். அப்போதுதான் பிரியங்காவுக்கு ஏதோ மனதில் பொறி தட்டியது. ''அப்ப நீ ஒவ்வொரு நாளும் முட்டைகளைக் குலுக்கிப் பார்த்தனியா...?'' அம்மா அதட்டினாள். ''நான் குஞ்சு கத்துதாண்டுதான் பார்த்தனான்'' செந்தூரன் கூறிமுடிக்க பிரியங்காவின் ஆத்திரம் பல மடங்கானது. முட்டை அடை வைத்த நாளிலிருந்து குலுக்கிக் குலுக்கிப் பார்த்த செந்தூரனுக்கு அடிபோடுவதா இல்லை அவனது வயதில் அவன் அறியாமற் செய்த தவறை எண்ணி அவனை மன்னிப்பதா எனப்புரிய முடியாத பிரியங்கா நடந்த விவரங்களைத் சொல்லுவதற்கு சிவநேசன் அருகே விரைந்தாள்.

அப்போது நேரம் ஆறு மணியைக் கடந்திருந்தது. சிவநேசன் தேர்தல் முடிவுகளைத் தொலைக்காட்சியில் பார்த்துக்கொண்டிருந்தான். ''அப்பா... அப்பா...'' பிரியங்கா கணவனை அழைத்தாள். சிவநேசன் பிரியங்காவை நோக்கித் திரும்பினான்.

அறியாமற் செய்த பிழையினால் அதிர்ந்துபோயிருந்த செந்தூரனின்



முகத்தைவிட சிவநேசனின் முகம் அதிக கவலையில் லயித்திருந்தது. அந்த முகம் வாடிப்போய் வற்றியது போல் மனைவியின் குரலிலே ஆர்வம் காட்டாது அடங்கியிருந்தது.


முட்டைகள் அனைத்தையும் குலுக்கிக் குலுக்கிக் கூழ்முட்டைகளாக்கிய செந்தூரனின் முகத்தைவிட அதிகம் சோபையிழதிருந்த சிவநேசனின் முகத்தைப் பார்க்கும்போது பிரியங்காவுக்கும் அழுகையழுகையாக வந்தது.

செந்தூரன் அழுதுகொண்டேயிருந்தான், முட்டைகள் குஞ்சு பொரிக்காத கவலையில். கோழிக்கூட்டின் இன்னொரு மூலையில் புதிதாக அடைபடுத்திருந்த கோழியொன்றைக் காட்டி பிரியங்கா செந்தூரனைச் சமாதானப்படுத்தினாள். இன்னும் இருபத்தொரு நாட்களில் புதிய கோழிக்குஞ்சுகளைப் பார்த்துவிடலாம் என எண்ணிய சந்தோஷத்தில் செந்தூரன் முகம் பிரகாசித்தது. ஆனால் தனது கணவன் சிவநேசனுக்கு ஆறுதல் கூற வார்த்தைகளின்றி பிரியங்கா தவித்துக்கொண்டிருந்தாள்.


ஆனால் அந்த ஐந்தறிவு ஜீவனான அடைக்கோழி, தான் அடைகாத்த முட்டைகள் அனைத்துமே கூழ்முட்டைகள் என்பதை அறியாமல் தனது சொண்டினால் முட்டைகளை இழுத்து இழுத்துத் தனது சிறகுகளுக்குள் மறைத்துக்கொண்டிருந்தது. தான் அடைகாத்த முட்டைகளிலிருந்து தனது குஞ்சுகள் வெளிப்படும் என்ற ஆதங்கத்திலும், தான் அடைகாத்த முட்டைகள் அனைத்துமே கூழ்முட்டைகளானதை அறியாமலும்...

****

# சிவசேனாவின் தடையை மீறி ஷாருக்கானின் புதிய படம்



பிரபல ஹிந்தி நடிகர் ஷாருக்கானின் 'மை நேம் இஸ் கான்' என்ற திரைப் படத்தை வெளியிட முடியாதவாறு



நரேந்திர மோடி

தடுக்கப்போவதாக சபதம் எடுத்த சிவசேனா கட்சியையும் மீறி திரைப் படம் வெளியாகியுள்ளது. இந்தியன் பிரிமியர் லீக்கில் விளையாட பாகிஸ்தான் வீரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படாததற்குப் பல தரப்பினரும் கண்டனம் தெரிவித்தனர். உள்துறை அமைச்சர் சிதம்பரம் கூட இது தேவையில்லாத சர்ச்சை, இதை உருவாக்கியிருக்கக் கூடாது எனக் கருத்துக் கூறியிருந்தார். அவ்வாறே, ஷாருக்கானும் கருத்துக்கூறப் போக அதை அதிரடி அரசியல் கட்சியான சிவசேனா வேறுவிதமாக எடுத்துக் கொண்டு, அவரது படத்தை மும்பையில் வெளியிட விடமாட்டோம் எனக் கூச்சல் போடத் தொடங்கியிருந்தது. இதற்கு முன்பும் பல பட அதிபர்களையும், இயக்குனர்களையும் பல விடயங்களில் மிரட்டிப் பணிய வைத்த கட்சி சிவசேனா ஆகும். சிவசேனாவுக்கு எதிரானது எனப்பட்ட கருத்துகளை கூறியவர்கள் கடைசியில் தமது திரைப்படம் தடைசெய்யப்படலாம் என்ற அச்சத்தில் சிவசேனாவிடம் மன்னிப்புக் கோர நேர்ந்துள்ளது. ஷாருக்கானோ விடாப்பிடியாக இருந்து வந்தார். இதனால், சிவசேனா அவரது படத்தை வெளியிடவிடோம் என முரண்டு பிடித்தது.

ஹிந்தி திரையுலகின் தலைநகரான மும்பையில்தான் முதலில் படம் வெளியிடப்படுவதுதான் வழக்கமாகும். சிவசேனா தொண்டர்கள் தீவைப்பில் ஈடுபடலாம் என்ற அச்சத்தில் படமாளிகை உரிமையாளர்கள் படத்தைத் திரையிட மறுத்து விட்டனர். எனினும் மத்திய அரசு மாநில ஆட்சியிலுள்ள தனது கட்சி முதல்வரிடம் கறாராக நடந்து கொண்டு படத்தை வெளியிட்டே தீரவேண்டும் எனச் சொல்லிவிட்டது. மத்திய உள்துறை அமைச்சுச் செயலர் ஜி.கே.பிள்ளை மகாராஷ்ர அரசுத் தலைவர்களுடன் முதல் நாளிலிருந்து தொடர்புகொண்ட வண்ணமே இருந்துள்ளார். நிலைமையின் தீவிரத்தை உணர்ந்த முதல்வர் சவானும், துணை முதல்வர் ஆர்.ஆர். பட்டேலும் படமாளிகை அதிபர்களுடன் இரவிரவாகப் பேச்சுக்களைத் தொடர்ந்து நடத்தி படத்தைத் திரையிட இணங்க வைத்தனர்.

திட்டமிட்டபடி முதல்வர், துணை முதல்வர், உள்துறை இணையமைச்சர் முதலானோர் முக்கிய திரை அரங்குகளில் அச்சமயம் பிரசன்னமாகி இருப்பது என தீர்மானிக்கப் பட்டது. எனினும், பின்னர் முதல்வர் வரவில்லை. துணை முதல்வரும் அவரது இணைஅமைச்சரும் நேரில் வந்தனர். முதல்நாளே ஆயிரக்கணக்கான சிவசேனாத் தொண்டர்கள் சிறையில் தள்ளப்பட்டனர்.

எஞ்சி இருந்த சில நூறு பேரை விரட்ட நூற்றுக்கணக் கான பொலிஸார் சகல படமா ளிகைகளிலும் குவிக்கப்பட்ட னர். உண்மையில் ஆர்ப்பாட்டக் காரரை விட அதிக எண்ணிக்கையான பொலிஸார் ஒவ்வொரு பட மாளிகையிலும் காணப் பட்டனர்.



ப. சிதம்பரம்

கடைசியில் திட்டமிட்டபடி திரைப்படம் வெளியானது. காலையிலிருந்தே மும்பை நகரவாசிகள் வரிசையில் நின்றபடி படத்தின் வரவுக்காக காத்துக் கிடந்தனர். சிவசேனாவின் உத்தரவை அலட்சியப்படுத்தும் போக்கு ஷாருக்கான் ரசிகர்களிடம் தெளிவாகத் தெரிந்தது. சவால் விட்ட சிவசேனா கடைசியில் தனது தோல்விக்கு நொண்டிச் சாட்டுகளைத் தேடவேண்டியதாயிற்று. ஹிந்தித் திரையுலகின் இன்றைய முடிசூடா மன்னனான ஷாருக்கான் ஒரு சிறுபான்மையினர் என்பதால் அவரது படம் வெளிவரவிடாது தடுக்கப்பட்டது என்ற அவப்பெயரை வரவிடாது காப்பதில் மத்திய, மாநில அரசுகள் வென்றன. இது இந்திய அரசியலில் புதிய சகாப்தத்தின் தொடக்கமே எனலாம். தனிமனித உரிமை என்பதனைக் கட்டிக் காப்பதில் உள்ள ஆர்வத்தையும், அக்கறையையும் இந்திய அரசு உச்சக்கட்ட அளவில் வெளிப்படுத்தியது மிக முக்கியமானதாகும்.

சமீபத்தில், ராகுல்காந்தி மும்பை வரக்கூடாது; வந்தால் தடுப்போம் எனவும் சிவசேனா ஆவேசப்பேச்சுப் பேசிய போதும் கடைசியில் அதுவும் புஸ்வாணமாயிற்று. ராகுல் காந்தி மிகுந்த சாவகாசமாக மும்பை வந்து தனது கட்சிக்கு ஆயிரக் கணக்கில் புதிய உறுப்பினர் களைத் திரட்டிக் கொண்டு போனது சிவசேனாவின் முகத்தில் கரி பூசியது போலாயிற்று. அடிதடி வன்முறை அரசியல் மூலம் தனி மனிதனின் பேச்சுரிமையை மட்டுப்படுத்த முயலும் சிவசேனாவின் சிறுபிள்ளைத் தனம் கடும் கண்டனங்களைக் கண்டுள்ளது.

சமீபத்தில் சச்சின் டெண்டுல்காரைக் கூட அக்கட்சி வசை பாடியிருந்தது. இந்திய மக்கள் ஒவ்வொருவரும் தெய்வம்போல பூஜிக்கும் சச்சின் மீது சேறு பூசியதை எந்த இந்தியனும் ஏற்கவில்லை. 20 வருடமாக சாதனைக் கிரிக்கெட்டை ஆடும் சச்சின் சொன்னது வேறெதுவுமில்லை; இந்தியன் ஒவ்வொருவருக்கும் மும்பை சொந்தம் என்பதே. சிவசேனா கட்சி தேர்தல்களில் தோற்று மிகுந்த இறங்கு முகத்தில் இன்று உள்ளது. கட்சித் தலைவர் பால்தாக்கரே முதுமையில் உள்ளார். மருமகன் ராஜ் தாக்கரே தொடங்கிய புதிய போட்டிக் கட்சி சக்கை போடு போட்டு வருகிறது. எல்லா வகையிலும் வங்குரோத்து அரசியல் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் முதிய பால்தாக் கரேக்கு ஏற்பட்டிருப்பது கண்கூடு.

சிவசேனாவின் கூட்டாளியான பாரதிய ஜனதா மற்றும் அதன் தாய் இயக்கமான ஆர்.எஸ்.எஸ். முதலியவை கூட 'மும்பை மராட்டியருக்கு' என்ற சிவசேனாவின் கோஷத்தை எதிர்த்து அண்மையில் கருத்து வெளியிட்டுள்ளன. தோழமைக்கட்சிகள் மத்தியில் இவ்வாறு கருத்து வேறுபாடு இருப்பது இப்போதுதான் பகிரங்கமாக வெளிப் பட்டுள்ளது. இந்த வயிற்றெரிச்சல் வேறு பால்தாக்கரேயைக் குடைகிறது என்று கூறப்படுகின்றது. சிவசேனா மற்றவர்களைவிட மாறுபட்ட கொள்கையைக் கொண்டிருப்பது ஒன்றும் குற்றமல்ல. ஆனால் அதைத்



பால்தாக்கரே

திணிப்பதற்கு வன்முறை வழிகளை கையாள்வது எவராலும் ஏற்கப்பட வில்லை. மும்பை மராட்டியர்களுக்கு மட்டுமே என்று சிவசேனா சொல்வது ஜம்மு-காஷ்மீர் தீவிரவாதிகள் போல பிரிவினைவாதம் பேசுவதாகவே நோக்கப்படும் என மனிதஉரிமை ஆர்வலர்கள் கூறுகின்றனர். ஜின்னாவுக்கும் தாக்கரேக்கும் என்ன வேறுபாடு என்று கூடக் கேள்வி எழுப்பப் பட்டுள்ளது.

மும்பையில் வாழ்வதாயின் வட இந்தியர்களை மராட்டி கற்க வேண்டும் எனத் தாக்கரே சொல்வது குறிப்பிடத் தக்கது. அப்படியானால் இந்தியாவில் வாழ தாக்கரே ஹிந்தி கற்கவேண்டும் என்று சொன்னால் என்ன நடக்கும் என

**எஸ். சுரேந்திரஜித்**


காங்கிரஸ் கட்சி கேட்டுள்ளது.

எவ்வாறாயினும் அரசயந்திரம் நினைத்தால் எந்தக் கும்பல் வன்முறையையும் அடக்க முடியும் என்பது இவ்விடயத்தில் நிரூபிக்கப்பட்டது.

அயோத்திராமர் கோயில் இடிப்பையும், இலங்கையில் 1983இல் சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறையையும் அந்தந்த அரசுகள் நினைத்திருந்தால் நிச்சயமாக அடக்கியிருக்க முடியும்.

1984 இல் இந்திரா படுகொலையை அடுத்து சீக்கியர் மீது சில காங்கிரஸார் படுகொலையை கட்டவிழ்த்து விட்டது மற்றும் குஜராத்தில் 2002இல் நரேந்திர மோடி அப்பாவி முஸ்லிம்களை கொன்றுகுவித்தது யாவுமே அந்த அரசுகள் நினைத்து நடத்திய சாதனைகளே. அரசயந்திரம் முழுவீச்சில் செயல் பட்டால் இவற்றைத் தவிர்த்திருக்க முடியும் என்பது ஷாருக்கான் படவெளியீடு மூலம் நிதர்சனமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

****




சிவசேனா கட்சியின் ஆதரவாளர்களால் ஷாருக்கானின் 'மை நேம் இஸ் கான்' என்ற புதிய படத்தின் போஸ்டர்கள் மும்பையில் கிழிக்கப்படுகின்றதைப் படத்தில் காணலாம்.

# ஒரு வெடிகுண்டும் சில தளிர்களும்

'கோபாலன் புத்தியுள்ள சிறுவன். ஒருநாள் அவன் கடற்கரையில் விளையாடிக்கொண்டிருந்தபோது கடலில் ஒரு சாடி மிதந்து வருவதைக் கண்டான். அந்தச் சாடியைக் கோபாலன் கையிலெடுத்துத் திறந்தபோது உள்ளிருந்து ஒரு உருவம் வெளியே வந்தது. அந்த உருவம் வளர்ந்து வளர்ந்து பெரிதாகிக் கொண்டே போனது....'

இது முன்னைய நாள்களில் சிறுவயதுப் பாடப் புத்தகமொன்றில் வந்த கதை. சிறு வயதில் எப்போதுமே வினோதமாகத் தெரியும் எதனையும் ஆராய்ந்து பார்ப்பது இயல்பாகவே உள்ள குணம்தான். ஆனாலும் அந்தக் குணமே பலவேளைகளில் விபரீதங்களைக் கொண்டு வருவதும் உண்டு. கடந்த வாரம் குடாநாட்டில் இடம்பெற்ற ஒரு கோரமான நிகழ்வும் இத்தகைய ஆராயும் குணத்தினால் நேர்ந்ததுதான்.

பாடசாலை மணி அடித்ததும் வீடு செல்லும் ஆர்வத்தோடு நடையைக் கட்டத் தொடங்கினார்கள் அந்தப் பத்து வயதுப் பாலகர்கள். பாடசாலையில் நடந்த நிகழ்வுகளைத் தங்களுக்குள் பேசி மகிழ்ந்தவாறு வந்துகொண்டிருந்த அந்த மாணவர்களின் கண்ணில் பட்டது ஒரு வினோத வடிவங்கொண்ட இரும்புப் பொருள். எதையுமே நோண்டிப் பார்க்கும் பருவம் கொண்ட அவர்கள் இந்தப் பொருளைப் பார்த்துவிட்டுச் சும்மா இருப்பார்களா? அந்தப் பொருளைக் கையிலெடுத்து ஒவ்வொருவராகக் கற்பனைக் குதிரையைத் தட்டிவிடத் தொடங்கினார்கள். அவர்களில் எவருக்குமே அது என்னவென்று கடைசி வரைக்கும் பிடிபடவேயில்லை. சிறுவர்கள் இனந்தெரியாத பொருளொன்றைக் கையில் வைத்துக் விளையாடிக்கொண்டிருந்ததைக் கண்ட வழிப்போக்கர் ஒருவர் அதனைத் தூர எறிந்துவிட்டு நடையைக் கட்டுங்கள் என்று அறிவுரை கூறிவிட்டு நகர்ந்தார். மாணவர்களுக்கும் பசி வயிற்றைக் கிள்ளத் தொடங்கியதால் தொடர்ந்தும் ஆராய்ச்சியில் ஈடுபட மனமின்றி, வழிப்போக்கரின் அறிவுரைப்படி அந்த மர்மப் பொருளைப் பலம்கொண்ட மட்டும் தூர வீசினர். அவ்வளவுதான்! அடுத்தநொடியே 'பளர்!' என்ற ஒலி காதைப் பிளந்தது. கூடவே 'ஐயோ அம்மா!' என்ற அவலக் குரலும் ஒலித்தது. எங்கும் புகை மயம். கந்தகத்தின் வாசனை அப்பகுதியெங்கும் பரவியது. எல்லாம் நடந்து முடிந்தபின்னர் பார்த்தபோது இரண்டு பச்சிளம் தளிர்கள் பரிதாபமாக உயிரை விட்டிருந்தார்கள். பத்தே வயதான அவர்களின் தோழர்களில் எட்டுப்பேர் படுகாயமடைந்திருந்தார்கள்.

நீண்ட நாளைக்குப் பின்னர் குடாநாட்டில் நிகழ்ந்த இந்த வெடிச் சம்பவத்தால் ஒட்டுமொத்த மக்களும் ஒருகணம் ஆடிப்போயினர். 'போர் முடிந்துவிட்டது. இனிமேல் அவலச் சாவுகளுக்கு இங்கு இடமில்லை' என்ற நினைப்பில் இருந்த யாழ்.மக்களுக்கு மர்மப் பொருள் வெடிப்பு பேரிடியைத் தந்துள்ளது. இதற்கு முன்னரும் பல தடவைகள் இத்தகைய குண்டுவெடிப்புச் சம்பவங்கள் யாழ்.மண்ணில் நிகழ்ந்தேயிருக்கின்றன. ஆயினும் அப்போது போர் உக்கிரம் கொண்டிருந்ததால் அதனால் ஏற்பட்ட இழப்புகளுக்கு முன்னால் இத்தகைய சம்பவங்கள் சர்வசாதாரணமாகவே இருந்தன. எனினும் பலரிடம், தெரியாத பொருள்களை தீண்டக்கூடாது என்னும் விழிப்புணர்வு ஏற்படத் தொடங்கியதால்



யாழ். கொழும்புத்துறையில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்த இரண்டு மாணவர்களையும் படங்களில் காணலாம்.

நாளடைவில் இத்தகைய மர்மப் பொருள் வெடிப்புச் சம்பவங்கள் தேய்ந்து தேய்ந்து கடைசியில் மறக்கடிக்கப்பட்டே போயின.

போர் முடிவுக்கு வந்த பின்னர் இத்தகைய மர்மப் பொருள்கள் வருவதற்கான சந்தர்ப்பங்களே இல்லையென்பதால் அதுகுறித்த விழிப்பூட்டலைத் தமது பிள்ளைகளுக்குப் பெற்றோர் வழங்குவதும் குறைந்துவிட்டது. ஆயினும் போர் என்பது முடிவுக்கு வந்துவிட்டாலும் அதனுடைய தாக்கங்கள் கண்ணுக்குத் தெரியாமல் நம் பூமியெங்கும் ஒளிந்தே கிடக்கின்றன. அவை பல்வேறு ரூபங்களில் தேவையான சந்தர்ப்பங்களில் வெளிப்பட்டு தம்முடைய காரியத்தை கனகச்சிதமாகச் செய்து முடிக்கின்றன.

**- பிரமன்**

பல தசாப்தங்களுக்கு முன்னர் போர் முடிவடைந்துபோன வியட்னாமில் இன்றைக்கும் ஆங்காங்கே ஒளிந்திருக்கும் மிதிவெடிகளும், பொறிவெடிகளும் வெடித்து மக்களின் உயிரையும், அவயவங்களையும் காவுகொள்ளத் தவறுவதில்லை. இதுபோலவே போர் நிகழ்ந்த பல பகுதிகளில் நாள்கள் பல சென்ற பின்னும் மறைந்து கிடக்கும் வெடிபொருள்கள், தாம் வெளிப்படும் சந்தர்ப்பங்களில் அழிவுகளை ஏற்படுத்தி வருகின்றன. போர் தந்த உடனடி இழப்புகளை விடவும் கண்ணுக்குத் தெரியாமல் புதைந்து கிடக்கும் இத்தகைய அரூபமான ஆபத்து மிகப் பெரியளவில் உளத்தாக்கத்தை எல்லோரிடமும் ஏற்படுத்துகிறது. இத்தகைய சம்பவங்களில் ஒன்றாகவே கொழும்புத்துறையில் மாணவர்களின் உயிரைப் பலியெடுத்த மர்மப் பொருள் வெடிப்பையும் நோக்கவேண்டியிருக்கிறது.

ஆயி[illegible]ம் இந்தச் சம்பவம் பல்வேறு சந்தே[illegible]ளையும் தோற்றுவிக்கவே செய்[illegible]றது. ஏனெனில் குறித்த பாடசாலைக்கு இந்த மாணவர்கள் காலங்காலமாகச் சென்று வருகிறார்கள். இதுதவிர போர் முடிவடைந்த பின்னரும்கூட மாணவர்கள் செல்லும் அதேபாதையில் வீதியோர ரோந்து நடவடிக்கைகளில் இராணுவத்தினர் ஈடுபட்டிருந்தனர். அப்போதெல்லாம் இராணுவத்தினரின் கண்ணிலோ அல்லது மாணவர்களின் கண்ணிலோ சிக்காமல் இந்த மர்மப் பொருள் எப்படி ஒளிந்திருந்தது? அன்றைக்கு மட்டும் அதிசயமாக அதுவும் மாணவர்களின் ஒட்டுமொத்தப் பார்வையையும் ஈர்க்கும் வகையில் வீதியில் பகிரங்கமாக அது தோன்றுவதற்கான காரணம் என்ன? என்பன போன்ற சில வினாக்கள் இந்தச் சம்பவம் குறித்து பலரின் மனதில் எழவே செய்கின்றன. அந்த வினாக்களில் தர்க்கபூர்வமான நியாயப்பாடும் இருப்பதாகவே தோன்றுகிறது.

உயர்பாதுகாப்பு வலயங்களில் தம்முடைய பொருள்களை எடுத்து வந்த ஒருசிலர் பொருள்களோடு பொருள்களாக வந்த இந்த மர்மப் பொருளைக் குறித்த வீதியில் விட்டுவிட்டு வந்திருக்கலாம் என ஒருசாரார் கருதுகின்றனர். அல்லாதவிடத்து யாழ்ப்பாணத்தில் நிலவுகின்ற இயல்பு வாழ்வைத் தொடரவிடாது ஓர் அதிர்வலையை ஏற்படுத்த நினைத்த விஷமிகளின் நாசவேலையாக்கூட இந்தச் சம்பவம் நடந்திருக்கலாம் எனவும் சிலர் நம்புகின்றனர். ஆயினும் இது குறித்து இராணுவத்தினரோ பொலிஸாரோ இதுவரை வாய்திறக்கவில்லை.

இராணுவத்தினரின் பூரண கட்டுப்பாட்டில் இருக்கின்ற ஒரு பகுதியில் அதுவும் மிக நீண்ட நாள்களாக போரின் தடயமே இல்லாமல் போன இடத்தில் இத்தகைய மர்மப் பொருளொன்று அநாதரவாக இருந்ததும் அதனைப் பாடசாலை மாணவர்கள் எடுத்து விளையாடி உயிரிழந்ததும் அரசுமீதான நம்பிக்கையீனத்தையே மக்களிடம் தோற்றுவித்துவிடும். நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இத்தகைய மக்களின் நம்பிக்கையீனம் எதிர்மறை விளைவுகளையே உண்டுபண்ணிவிடும். எனவே விரைவான நடவடிக்கையொன்றை மேற்கொள்ளவேண்டிய கட்டாயம் அரசுக்கு உண்டு. வெடிபொருள்கள் பற்றிய விழிப்புணர்வு நடவடிக்கைகள் மட்டுமல்லாது எதிர்காலத்தில் இத்தகைய மர்மப் பொருள்கள் திடீரெனத் தோன்றும் நிகழ்வுகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்.

***

# 'தேநீர்'... சில உண்மைகள்!

டீ எனப்படும் 'தேநீர்' எமது அன்றாட வாழ்வில் கலந்துவிட்ட ஒன்று. நாம் பொதுவாக 'சுறுசுறுப்பு பானமாக' அறிந்த தேநீர், பல விசேஷமான அம்சங்களைக் கொண்டிருக்கிறது என்பது தேநீர்ப் பிரியர்களுக்கு மகிழ்ச்சிகரமான செய்தி.

நாம் அன்றாடம் பருகும் 'தேநீர்' தவிர பல்வேறு வகையான தேநீர்கள் உண்டு. அவற்றின் மகத்துவங்கள் இங்கே...

* சூடான லவங்கப்பட்டை தேநீர், பெண்களுக்கு அற்புதம் நிகழ்த்தும். இது மனஅழுத்தத்துக்கு நல்லது. தலைவலியிலிருந்து உடம்பு விடுபட்டுச் சுதந்திரமாக உணர உதவும். மேலும், சுவாசம், செரிமானம் மற்றும் ரத்த சுத்திகரிப்பு ஆகியவற்றுக்கும் உதவுகிறது.

* ஜலதோஷத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 'மசாலா தேநீர்' இதமளிக்கும்.

* 'கிரீன் டீ'யில் உள்ள 'பாலிபனால்கள்' அல்லது 'பளேவனாய்டுகள்' ஒட்டுமொத்த உடல் நலத்துக்கு நல்லது. குறிப்பாக புற்றுநோய் வராமல் தடுக்கும். புற்றுநோய் போன்ற ஆபத்துகளுக்குக் காரணம், செல்களின் சிதைவாகும். அதைத் தடுக்கும் பணியில் கிரீன் டீயில் உள்ள 'ஆன்டிஆக்சிடன்ட்கள்' உதவுகின்றன.

* 'மூலிகை தேநீரில் 'டேனின்' இல்லை. எனவே நெருக்கடியான வாரம் அல்லது அதிகமான அழுத்தங்களின் போது மூலிகை தேநீர் அருந்தலாம். மூலிகை தேநீரில் தேர்ந்தெடுப்பதற்கு அதிக வகைகள் உள்ளன என்பதும் மகிழ்ச்சிக்குரிய செய்தி.

* 'இஞ்சி தேநீர்' கொஞ்சம் காரசாரமாக இருந்தாலும், இதமான உணர்வைக் கொடுக்கும். பசியைத் தூண்டும். வாந்தி உணர்வைத் தடுக்கும். அதிகமாகப் புத்துணர்வு அளிக்கும் - குறிப்பாகப் பெண்களுக்கு.

* 'அஸ்வகந்தா தேநீர்' மனநிலையை உயர்த்தும், மனதுக்கும் உடம்புக்கும் ஓர் துடிப்பை ஏற்படுத்தும். தவிர நல்ல பலத்தைக் கொடுப்பதுடன், நோய்கள், கட்டிகள், ஞாபக இழப்பு ஆகியவற்றைத் தடுக்கும். மனநிலைக்கு ஊக்க சக்தி அளிக்கும். நல்ல தூக்கத்தை ஏற்படுத்தும்.

* தேநீருடன் 'ஸ்வீட் ரூட்' அல்லது 'லீகோரைஸை' சேர்த்தால் வழுக்கை, பொடுகு, பற்சிதைவு, தொண்டைப் புண், காசநோய், உடம்பு துர்நாற்றம், மன அழுத்தம், சோர்வு, தூக்கமில்லாமை, ஜலதோஷம் ஆகிய பாதிப்புகளைக் குறைக்கும்.

* ஏலக்காய் தேநீரை எவர் விரும்ப மாட்டார்? அது



இதமளிக்கும், வாந்தி உணர்வைத் தடுக்கும், ஜலதோஷம், இருமலுக்கு மிகவும் ஏற்றது. மனஅழுத்தத்தைக் குறைத்து உடலுக்குப் புத்துயிர் அளிக்கும். எல்லாவற்றுக்கும் மேலாக ஏலக்காய் தேநீர் நல்ல சுவையாகவும் இருக்கும்.

*

# வாழ்வாதாரத்திற்காகப் போராடும் பெண்களின் பரிதாபநிலை!



யுத்தத்தினாலும் பல்வேறு இடப்பெயர்வுகளினாலும் பொருளாதார மட்டத்தில் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் பெண்கள். வீட்டின் தலைவனாக ஆண் இருந்தாலும் அவருடைய பங்கு உழைத்து பணத்தை மனைவியிடமோ, தாயிடமோ கொடுத்து விடுவதோடு அவருடைய பங்கு முடிந்து விடுகின்றன. ஆனால் அத்தியவசியப்பொருட்கள் முதல் அத்தனை பொருட்களும் விலையேற்றத்தால் உயர்ந்து நிற்கிறது. இந்த விலையேற்றத்தையும் சமாளித்து வீட்டின் ஆண் கொண்டுவந்து கொடுக்கும் பணத்திலேயே வீட்டின் தேவைகள், பிள்ளைகளின் கல்வித் தேவைகள், மருத்துவத் தேவைகள் என அனைத்தையும் சமாளிப்பதோடு, தன்னுடைய பங்கிற்கும் தன்னால் முடிந்த அளவில் பொருளாதாரத்தை ஈட்டப் பாடுபடுகிறாள் பெண். வீட்டில் ஆண்துணை இருப்பவர்களுக்கே இந்த நிலை என்றால் ஆண் துணை இல்லாத குடும்பதவர்களின் நிலை?

சமாதானத்திற்கும் அபிவிருத்திற்குமான பெண் ஊடகவியளாலர்களை வலுவூட்டும் ஊடகத்துறைப் பங்காளிக்கான பெனோன்ஸ் தெற்காசியா மற்றும் நெதர்லாந்தின் ஹவோய்ஸ் ஆகியவற்றின் உதவியுடன் விதவைப்பெண்கள் தமது வாழ்வாதாரத்திற்கான பொருளாதாரத் தேவையை எவ்வாறு ஈட்டுகின்றனர் என்பதைப் பற்றிய ஆய்வொன்றினை அண்மையில் திருகோணமலை பிரதேசத்தில் மேற்கொண்டோம்.

திருகோணமலையில் இருந்து சுமார் 40 கிலோமீட்டர் தொலைவில் உள்ள பகுதி லிங்கப்புரம். யுத்தத்தின் போது இப்பகுதியில் இருந்து சென்ற மக்கள் இப்போதுதான் குடியேறியுள்ளனர். மிக வறியதொரு பகுதியான இப்பகுதியில் 160 குடும்பங்கள் வாழ்கின்றனர். அதில் 80 விதமானோர் யுத்தத்தின் போது தமது கணவன்மாரையும், மகன்மாரையும் பறிகொடுத் பெண்களே. இப்பகுதிக்கு நாம் சென்ற போது அன்றாட உணவிற்கே கஷ்டப்படும் நிலையில் தான் இவர்களை சந்தித்தோம்.

திருகோணமலையில் இருந்து மூதூருக்கு செல்லும் வழியில் தான் லிங்கபுரம் உள்ளது.

லிங்கபுரத்தில் உள்ள பெண்கள் எவ்வாறான பிரச்சினையை சந்திக்கின்றார்கள், பொருளாதார தேவையை எவ்வாறு எதிர்நோக்குகிறார்கள் என்பது பற்றி அவர்களிடமே கேட்டோம்.

திருமதி.சிவசுப்பரமணியம் புஷ்பராணி. வயது 50

"எனக்கு இரண்டு பெண்பிள்ளைகள். என் கணவரை கடந்த 3 வருடத்திற்கு முன்பு சந்தேகத்தின் பெயரில் பிடித்துச் சென்றார்கள். இன்றுவரை தகவல் எதுவும் இல்லை. நானும், வயது வந்த 2 பெண்பிள்ளைகளும் தான் வசித்து வருகிறோம். எங்களுக்கென்று எந்த உழைப்பும் இல்லை. கிடைப்பதை வைத்துத் தான் காலத்தைக் கொண்டு செல்கிறோம். அவர் இருக்கையில் ஓரளவிற்காவது என் குடும்பத்தில் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருந்தது. இடம்பெயர்வுகளின் போது கூட அவர் ஏதாவது தொழில் செய்து குடும்பத்தைப் பார்த்தார். ஆனால் அவர் போன பின் எதுவும் இல்லை. இப்போது எங்களுக்கு சமூர்த்தி முத்திரை மூலம் கிடைக்கும் அரிசி, பருப்பு போன்றவற்றில் தான் காலம் செல்கிறது. அதுவும் காணாமலே உள்ளது. குடும்பத்தில் முழுமையாக மூன்று வேளை உணவிற்கு அது போதுமானதாக இல்லை. எங்களுக்குக் காணி இருக்கிறது; அதில் தோட்டம் போட்டு மரக்கறிகளை எடுப்போம் என்றால் அதற்கும் வழி இல்லை. காரணம் கிணறு இல்லை. கிணறு வெட்டுவதற்கு ரூபா 50 ஆயிரம் கேட்கிறார்கள். இந்நிலையில் நாங்கள் என்ன செய்வது? நாங்கள் குளிப்பதற்கு செல்வது இந்த ஊருக்கு வரும் வழியில் ஓடுகிற வாய்காலில் தான் (மாவைஆறு). குடிநீர் எடுப்பதற்கு இங்கிருந்து சில வீடுகள் தள்ளி ஒரு வீட்டில் தண்ணீர் எடுக்கச் செல்வோம் அந்த வீட்டிற்குத் தான் இந்த பகுதியைச் சேர்ந்த பலர் தண்ணீர் எடுக்கச் செல்கின்றனர். காலையில் முதல் வேலையே தண்ணீர் எடுப்பது தான். சில வீடுகளில் கிணறு இருக்கிறது அதில் வருவது எல்லாம் உப்பு தண்ணீர். இங்கு பல அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவிகளை செய்தன. ஆனால் அது சரியான முறையில் வறியவர்களைச் சென்றடையவில்லை. பண வசதியும், ஆண்துணையும் இருக்கும் வீடுகளுக்கே கிடைத்தது. ஒரு அரச சார்பற்ற நிறுவனம் கால்நடை பிராணிகளை வழங்கியது. நாங்கள் சென்று கேட்டதற்கு, உங்கள் வீட்டில் ஆண்கள் யாரும் இல்லை. உங்களால் வளர்க்க முடியாது. தென்னம் கன்று தருகிறோம் என்றார்கள். தென்னங்கன்றினை வைத்தால் இரவு வேளையில் யானை வந்து சரித்து விட்டுப் போகிறது. எனக்குக் காணி இருக்கிறது கோழிப் பண்ணை வைக்கவோ, ஆடு, மாடு வளர்க்கவோ ஏதேனும் நிறுவனம் உதவி செய்தால் நன்றாக இருக்கும். இனி வரும் காலமாவது நிம்மதியாக வாழ வழி செய்யுங்கள்" என்றார் புஷ்பராணி.

வாழ்க்கையில் உயிருக்குப் பயந்து ஓடி,ஓடி குடும்ப உறவுகளையும், உடைமைகளையும், பறிக்கொடுத்தும் இன்னும் வாழ்க்கையை கொண்டு செல்வதற்கு ஓடி, ஓடி வேலை செய்யும் இன்னொரு பெண்ணைச் சந்தித்தோம். இவரை வறுமை இன்னும் வாட்டுகிறது.

திருமதி. அமிர்தலிங்கம் பேச்சிமுத்து (வயது 40)

"எனக்கு திருமணம் நடந்து 6 மாதத்தில் என்னுடைய கணவரை சந்தேகத்தின் பெயரில் பிடித்துச் சென்று கொன்று விட்டார்கள். அப்பொது நான் கர்ப்பிணி. இப்போது எனது மகளும் திருமணம் முடித்து குழந்தையும் உள்ளது. இவ்வளவு காலமும் யுத்தத்தின் காரணத்தால் நாங்கள் வாழ்வாதாரம் இல்லாமல் இருந்தோம். இப்போது தான் சொந்த இடங்களுக்குத் திரும்பி இருக்கின்றோம். இருப்பினும் நிம்மதியும், சந்தோஷமும் இல்லாமலே வாழ்கிறோம். எனது கணவர் இறந்த பின்னர் நான் அம்மாவோடு போய் இருந்தேன். எனக்கு அப்பாவும் இல்லை. மிகுந்த கஷ்டத்திற்கு மத்தியிலேயே குடும்பம் சென்றது. என் அம்மா காலைச் சாப்பாடுகள் செய்து விற்றும், நான் வாடகைக்கு உடைகள் தைப்பதன் மூலமுமே குடும்பத்தை நடத்தினோம். கிடைக்கும் எல்லா வேலைகளையும் செய்வோம். அன்றாட நாள் கூலி வேலைக்கு கூட நான் சென்றிருக்கிறேன்.

**-சாந்தி-**

ஏதோ சொந்தமாக இந்த காணி இருக்கிறது. யுத்தத்தின் போது ஓடுவதும் திரும்பி வருவதுமாக எங்களுடைய காலம் இருந்தது. இப்போது யுத்தம் இல்லை ஆனால் அன்றாட எங்களுடைய தேவைகளை கவனிக்க பணத்திற்காக போராடுவதே எங்களுக்கு யுத்தமாக உள்ளது. நான் இப்போது வீட்டில் வாடகைக்கு உடைகள் தைத்துக் கொடுக்கிறேன். அதுவும் உடனடியாக பணம் தரமாட்டார்கள். கொஞ்சம் கொஞ்சமாக தருவார்கள். இல்லாவிட்டால் பிறகு தாரேன் என்று சொல்வார்கள் அந்தப் பணம் வந்து சேராது. இந்தப் பகுதிக்கு நிறைய் அரச சார்பற்ற நிறுவனங்கள் வந்து உதவிகள் வழங்கின. ஆனால் அவைகள் சரியான முறையில் வறுமையில் உள்ளோருக்கு கிடைக்கவில்லை.

நோய் என்றால் கூட நாங்கள் மூதூருக்கு தான் செல்ல வேண்டும். அல்லது திருகோணமலைக்கு செல்ல வேண்டும். என்னுடைய அம்மா பாரிசவாத நோயாளியாக உள்ளார். அவருக்கு மருந்து எடுப்பதற்கு மூதூருக்கே செல்ல வேண்டும். இங்கிருந்து ஆட்டோவில் மூதூருக்கு செல்வதற்கு ரூபா 700 தேவை. அந்த வசதி இல்லாததால் வீட்டிலேயே தான் வைத்து பார்க்கிறேன். நாங்கள் என்ன செய்வது? வறுமை எங்களை எந்தளவு ஆக்கிரமித்துள்ளது என்று பாருங்கள்" என்றார்.

இவரைப்போலவே பல பெண்கள் அப்பகுதியில் அன்றாட தங்களுடைய ஜீவனோபாயத்திற்காக போராடுகின்றனர். தொழில் என்று பார்த்தால் அப்பகுதியில் விவசாயத்தை குறிப்பிடலாம். கதிர் அறுப்பதற்கு முன்னர் பெண்களை நாள் சம்பளத்தில் வைத்திருந்தவர்கள் கூட இன்று மெஷின்களின் உதவியுடன் வேலையைச் செய்து முடிக்கின்றனர். சமூர்த்தி முத்திரைக்கோ, ஏனைய தேவைகளுக்கோ இப்பகுதிக் கிராம சேவகரிடம் செல்வதானால் அவருக்கும் சிறு தொகை பணத்தை கொடுத்தே பெற்றுக்கொள்ளவேண்டிய சூழ்நிலையில் தான் இருக்கின்றோம் என்கின்றனர் இப்பகுதி மக்கள். இப்பகுதி மக்களுக்கு ஒரு கிறிஸ்தவ பாதிரியார் ஒரு தனியார் நிறுவனத்தின் உதவியோடு பல குடும்பங்களுக்கு தையல் மெஷின் போன்றவைகளை வழங்கி இருப்பதாகவும் இன்னும் பலருடைய குடும்ப விபரங்களைப் பெற்றுச்சென்றிருப்பதாகவும் கூறினார்கள். இது எப்படி இருந்த போதிலும், ஒவ்வொரு நாளையும் ஒவ்வொரு கணமாக கடத்துகின்றனர் இப்பகுதி குடும்பப் பெண்கள். *

குடும்பத்தவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் வறுமையோடு போராடும் இப்பகுதிப் பெண்களுக்கு எந்தவித சுயதொழிலுக்கான வாய்ப்பு கிடைக்கவில்லை என்பதே கவலைக்குரிய விடயம்



## பெண்

தொகுப்பு: சாந்தி

**சகோதரிகளே!**

பெண் பகுதியில் பிரசுரமாகும்
**சகோதரிகளின் பார்வைக்கு**
நீங்களும் உங்கள் கருத்துக்களை எழுதி அனுப்பலாம்.
இச்சமூகத்தில் சகோதரிகள் மட்டத்தில் நீங்கள் காணும் குறைநிறைகளை எம்மோடு பகிர்ந்து கொள்ளுங்கள்.
நீங்கள் பகிர்ந்துகொள்ளும் விடயங்கள் ஒவ்வொன்றும் ஆக்கபூர்வமானவையாகவும் இருக்க வேண்டும்.
**வந்து சேர வேண்டிய எமது முகவரி:**
சகோதரிகளின் பார்வைக்கு
சுடர் ஒளி வாரமலர்,
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு 14.

# 3 பையன்கள் பற்றியதே மாத்தியோசி



படம்-மாத்தியோசி

பாண்டி, ஓணான், மங்கா, மாரி என்னும் நான்கு விடலைப் பையன்கள் கிராமத்தில் ஏகப்பட்ட சேட்டைகள் செய்ய, அதனால் ஏற்படும் பிரச்சினைகளால் அவர்கள் கிராமத்தை விட்டு வெளியேறி சென்னைக்கு வருகிறார்கள்.

சென்னையின் வாழ்க்கைப் பயணத்தில் அவர்கள் சந்திக்கும் சம்பவங்கள், பிரச்சினைகள், காதல் எனப் பல உணர்ச்சிக் கலவைகளைக் கலந்து உருவாக்கியிருக்கிறார் 'மாத்தியோசி' படத்தை, அதன் இயக்குநர் நந்தா பெரியசாமி.

அந்தப் பையன்களிடம் நட்புப் பாராட்டும் பெண்ணாக ஷம்மு நடித்துள்ளார். ஜனநாகத்தின் தூண்கள் நான்கு, திசைகள் நான்கு, செத்துப் போனால் தூக்குறதுக்கு கூட நாலு பேர் வேணும்... இப்படி நான்கு என்பது நம் வாழ்க்கையில் நீக்கமற நிறைந்திருக்கிறது. இந்தப் படத்திலும் அந்த நான்கு கேரக்டர்கள்தான் படத்துக்குத் தூண்களாக இருக்கின்றன... என்கிறார் படத்தின் இயக்குநர் நந்தா பெரியசாமி.

# பூபதி பாண்டியன் இயக்கத்தில் விக்ரம்!

விக்ரம் நடிக்கும் படத்தைப் பூபதி பாண்டியன் இயக்குகிறார் என்பது பல வருடங்களாக உலவி வரும் செய்தி. விக்ரமுக்காக ராஜா வேடம் என்ற கதையையும் பூபதி பாண்டியன் தயார் செய்து வைத்திருந்தார். வேறு படங்களில் பிஸியாக இருந்ததால் ராஜா வேடம் போட விக்ரமுக்கு நேரம் கிடைக்காமல் போனது. தற்போது அதற்கான சூழல் வந்துள்ளது.விக்ரம் கே.குமார் இயக்குவதாக இருந்த 24 படத்திலிருந்து விக்ரம் விலகியிருக்கிறார். இதனால், அந்தப் படத்தைத் தயாரிப்பதாக இருந்த மோகன் நடராஜன் விக்ரமை இயக்கும் வாய்ப்பைப் பூபதி பாண்டியனுக்கு அளித்திருக்கிறார். இந்தத் தகவலை மோகன் நடராஜனே தெரிவித்துள்ளார்.செல்வராகவன் இயக்கத்தில் விக்ரம் நடித்துவரும் படத்தின் படப்பிடிப்பு முடிந்த பிறகு அவர் பூபதி பாண்டியனின் இயக்கத்தில் நடிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.



படம்-தம்பிக்கு இந்த ஊரு



சிம்புவின் பிறந்தநாள் விழாவில் அஜித்...!

சரத்குமார் நடித்த 'ஜக்குபாய்' படம் ரிலீஸுக்கு முன்பே திருட்டு வி.சி.டியில் வெளியாகி திரையுலகினரை அதிர்ச்சியடைய வைத்தது. இதனால், புதுப்படங்களின் 'டப்பிங்', 'மிக்சிங்' பணிகள் கடும் கண்காணிப்பில் நடக்கின்றன.

'ராவணன்' பட வேலைகள் நடக்கும் ஸ்டூடியோக்களில் தனது ஆட்களை நிறுத்தி வைத்துள்ளார் மணிரத்னம். ரஜினியின் 'எந்திரன்' படம் மெகா பட்ஜெட்டில் தயாராகிறது. இப்படம் திருட்டு வி.சி.டியில் வெளியாகாமல் தடுப்பதற்காகக் கண்ணும் கருத்துமாய்ப் பாதுகாக்கிறார் ஷங்கர்.

'3 டி' தொழில் நுட்பத்தில் படம் எடுத்தால் அதை டி.வியிலோ, மொனிட்டரிலோ பார்க்க முடியாது. திரையரங்குகளுக்கு வந்துதான் பார்க்க வேண்டும். எனவே '3 டி' தொழில் நுட்பத்தில் 'எந்திரன்' படத்தை வெளியிட ஷங்கர் திட்டமிட்டுள்ளார்.

படம்-தில்லாலங்கடி



# 3 நாட்களில் 45 கோடியை தாண்டியது அசல்

அஜித் நடித்த 'அசல்' படம் மூன்று நாட்களில் சுமார் 45 கோடி ரூபாயை வசூலில் தாண்டியுள்ளதாம். சிவாஜி புரொடக்ஷன் தயாரிப்பில் அஜித், சமீரா ரெட்டி, பாவனா நடித்து கடந்த 6ஆம் திகதி வெளியான படம் அசல். ரசிகர்களின் ஏகோபித்த எதிர்பார்ப்புடன் இருந்த இந்தப் படத்தில் அஜித் சிகரெட் பிடிப்பது போன்ற காட்சி இருக்கிறது எனக் கூறி பல அமைப்புகளும் ஆர்ப்பாட்டம் நடத்தியதுடன், அசலுக்குத் தடை விதிக்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தனர்.

இதனால் 'அசல்' ரிலீஸ் தள்ளிப் போகுமா? என்ற கேள்வி எழுந்த நிலையில் திட்டமிட்டபடி 6ஆம் திகதி படத்தை திரையிட்டனர். உலகெங்கும் 550 திரையரங்குகளில் 'அசல்' படம் திரையிடப்பட்டது. மொத்தம் 41 நாடுகளில் வெளியான 'அசல்', தமிழகத்தில் மட்டும் 360 திரையரங்குகளில் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அமீருடன் ஆண்ட்ரியா!

டைரக்டர் அமீர் நடிக்கவுள்ள புதிய படத்தில் அவருக்கு ஜோடியாக நடிகை ஆண்ட்ரியா நடிக்கப் போகிறாராம். 'பருத்தி வீரன்' படம் மூலம் பட்டி தொட்டியெங்கும் பிரபலமானவர் டைரக்டர் அமீர். அவர் 'யோகி' படத்தின் மூலம் ஹீரோ ஆனார். 'கூடல் நகர்' என்ற படத்தை இயக்கிய டைரக்டர் சீனு ராமசாமிதான், அமீர் நாயகனாக நடிக்கும் புதிய படத்தை இயக்கப் போகிறாராம். இந்த படத்தில் அமீர் நாயகனாக நடிக்கிறார் என்பதை விட அவருக்குஜோடியாக நடிப்பது நடிகை ஆண்ட்ரியா என்பதுதான் பரபரப்பு!



# சுனைனாவின் சொந்த முயற்சி!

நகுலின் கைப்பாவையாக இருந்த சுனைனா இப்போதுதான் தாமாகவே ஒவ்வொரு படங்களின் கதையையும் கேட்டு கால்ஷீட் கொடுக்க ஆரம்பித்துள்ளார். அப்படி அவர் கொடுத்துள்ள படம்தான்.... படத்தின் பேர் இன்னும் வைக்கவேயில்லை.

இந்தப் படத்தை இயக்குகிறார் 'பசங்க' புகழ் பாண்டிராஜ். கதாநாயகன் வேறுயாருமல்ல. கலைஞரின் பேரன் அருள்நிதிதான். யாரை இவருக்கு ஜோடியாக்கலாம் என்று யோசித்து யோசித்து ஒய்ந்துபோன பாண்டிராஜ், கடைசியாக சுனைனாவை ஒப்பந்தம் செய்துள்ளாராம்.

ஆனால், இந்தப் பட்சியோ இதுவரை நகுலிடம் கேட்டுக் கேட்டுத்தான் ஒவ்வொன்றையும் செய்து வந்தது. இப்போது தாமாகவே துணிந்து கதை கேட்டுக் களம் இறங்கியுள்ளார். அப்படின்னா சுயபுத்தியில இயங்க ஆரம்பித்திட்டார்போல...!

# எல்லாளன் பட ஒளிப்பதிவாளர் சந்தோஷுடன் ஒரு சந்திப்பு...

புலிகளின் அனுராதபுர விமானத்தளம் மீதான தாக்குதலை நினைவூட்டும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள 'எல்லாளன்' என்ற திரைப்படத்திற்கு ஒளிப்பதிவு செய்ததுடன் ஈழத்தின் திரைப்பட உருவாக்கப் பிரிவுடன் இணைந்து படத்தின் அனைத்துப் பணிகளிலும் பங்களிப்புச் செலுத்தியவர் ஒளிப்பதிவாளர் சந்தோஷ்.

திரைப்படத்தை கமராவிலும், ஈழத்தின் இறுதித் தினங்களை நினைவுகளிலும் ஒருசேரப் பதிவுசெய்து வந்திருக்கும் அவருடன் ஒரு சந்திப்பு.

கேள்வி- நீங்கள் எல்லாளன் படப்பிடிப்புக்காக ஈழம் சென்றது, 2008 ஜனவரியில். போர் நடந்து கொண்டிருந்த ஆபத்து மிகுந்த காலத்தில் அங்கு செல்ல எப்படி துணிந்தீர்கள்?

பதில் - 'எல்லாளன்' படத்துக்கு முன்னர் இலங்கையில் ஒரு ஆவணப் படத்துக்கும், ஒரு குறும் படத்துக்கும் ஒளிப்பதிவு செய்திருக்கிறேன். லண்டன் நண்பர் ஒருவருக்கு விளம்பரப் படம் இயக்கும்போது, 'எல்லாளன்' படம் பற்றித் தெரிய வந்தது. நான் பணிபுரிந்த ஆவணப் படமும் சரி, குறும் படமும் சரி, இலங்கை இராணுவத்தின் பாதுகாப்பில் இருந்த தமிழர் பகுதிகளில் எடுத்தவை. தமிழீழப் பகுதியில் படப்பிடிப்பு நடத்த வாய்ப்பு வந்தபோது, அந்த ஒரு காரணத்துக்காகவே உடனே ஒப்புக்கொண்டேன்.


கே-போர் நடந்து கொண்டிருக்கிற சூழலில் திரைப்படம் எடுக்க ஈழப் போராளிகள் விரும்பியது ஏன்?

ப-ஈழத் தமிழர்கள் இயல்பாகவே கலையார்வம் அதிகம் உள்ளவர்கள். அவர்களின் தலைமைக்கும் அந்த ஆர்வம் இருந்தமையால் தமிழ்ப் படங்கள் மட்டுமின்றி எல்லா மொழித் திரைப்படங்களும் மக்களுக்கு கிடைக்கக்கூடிய சூழல் அங்கிருந்தது. யுத்தம் சம்பந்தப்பட்ட படம் என்று மட்டுமில்லாமல் வெளிநாட்டு கிளாசிக்குகளையும் தமிழில் மொழிமாற்றம் செய்து மக்களிடம் கொண்டுபோய்ச் சேர்த்திருக்கிறார்கள். இதுக்காக மொழியாக்கப் பிரிவு என்றே ஒன்று இயங்கி வந்திருக்கு. நம்மூரில் செய்கின்ற மாதிரி தமிழைக் கொச்சைப்படுத்தாமல் அப்படியே அர்த்தம் மாறாமல் அழகிய தமிழில் மொழியாக்கம் செய்திருக்கிறார்கள். ஆபாசக் காட்சிகள் போன்ற தேவையில்லாதவற்றைத் தணிக்கை செய்வதற்கென்றே தமிழீழத் தணிக்கைக் குழு ஒன்றும் செயல்பட்டிருக்கிறது.

இதுதவிர போராளிகளே குறும் படங்களை உருவாக்கியிருக்கிறார்கள். இயக்குனர் மகேந்திரன் சேர் ஈழத்திற்குச் சென்று இப்படித்தான் ஒரு படத்தை உருவாக்கவேணும் என்று அவங்களுக்கு சொல்லிக் கொடுத்திருக்கார். அவரது பயிற்சிக்குப் பிறகு திரைப்படங்கள் மீதான போராளிகளின் பார்வையில் ஒரு மாறுதல் உருவாகியிருக்கு.

யுத்தம் நடந்துகொண்டிருக்கும் போது ஏன் படம் எடுத்தார்கள் என்று கேட்டீங்க... நமக்குதான் யுத்தம் அசாதாரணமான விடயம். அவங்களுக்கு சராசரி வாழ்க்கையில் யுத்தமும் ஒன்று.

அடுத்த வாரமும் தொடரும்....



# சினி துளிகள்...

## வருத்தப்படும் உச்ச ஸ்டார்

மகள் தயாரித்த முதல் படம் கலாசாரத்தை சீண்டிப் பார்க்கிறது என வரும் விமர்சனத்தால் கவலையில் இருக்கிறார் உச்சம். திருமணம் நிச்சயமாகியிருக்கும் நேரத்தில் இப்படிப்பட்ட விமர்சனம் வருவதுதான் உச்சத்தை அதிக கவலைப்பட வைத்துள்ளது. படத்தைப் பற்றி அபிப்பிராயம் சொல்லாமல் இருப்பதே நல்லது என்ற முடிவுக்கு வந்திருக்கிறாராம் உச்ச ஸ்டாார்.

## புரிந்துகொண்ட நடிகர்

நாட்டு நடப்புத் தெரியாமல், ''நம்ம படம்தான் டாப்பு தெரியுமில்ல'' என்று உதவி இயக்குனர்களிடம் பில்டப் புலம்பல் புலம்புவதுதான் அந்த கருப்பசாமி ஹீரோவின் வழக்கம். இவரது நடிப்பில் உருவான முருகனின் பெயர் கொண்ட மூன்றெழுத்துப் படம் பைனான்ஸ் பஞ்சாயத்தால் வெளிவராமல் இருக்கிறது. அதேபோல் காக்கும் படமும் விலைபோகாமல் தத்தளிக்கிறது. நிலைமை விபரீதமாவதைப் புரிந்தே புர்ச்சி நடிகருடன் இணைந்து நடிக்க ஒப்புக்கொண்டாராம். உண்மையை இப்போதாவது புரிந்து கொண்டாரே என்று சந்தோஷப்படுகிறார்கள் உ. இயக்குனர்கள்.

## புயலின் புரளி

ஏமாத்திப்புட்டாங்க என்று காமெடிப் புயல் வடிக்கும் கண்ணீரில் உண்மை இல்லை என்கிறது அவருக்கு நெருக்கமான வட்டாரம். தண்ணியில் கயிறு திரிக்கும் இவரிடம் கோடிக் கணக்கில் சுட யாராலும் முடியாது. லயன் காமெடியார் மனஸ்தாபத்தில் புயலை பிரிந்து வேறு நடிகர்களுடன் கூட்டணி சேர்ந்ததுதான் புயலின் அதிரடி ஒப்பாரிக்கு காரணம் என்கிறார்கள். ஏமாந்திருந்தால் அது லகரங்களில்தான் இருக்கும். கோடி எல்லாம் சும்மா என்கிறார்கள் புயலின் பூமி சாஸ்திரம் தெரிந்தவர்கள்.

# கவிதைப்புனல்

## துளிர்க்குமோ?

போர்ஓய்ந்த பின்னிலையில்-வீடு
    போய்ச்சேர வழியில்லை-எங்கள்
ஊர்மனைகள் அழிந்தபின்பும்-அங்கு
    உள்நுழையத் தெரியவில்லை-ஆள
ஆர்வந்து நன்மையென்ன?-வாழ்வு
    அவலமொரு தொடர்கதைதான்-தங்கள்
பேர்வாழ புகழோங்க-பொய்கள்
    பேசுவதும் ஒருகலைதான்!

ஏர்பிடித்து நிலமுழுது-ஆங்கு
    இறுதிவரை பாடுபட்டு-நெல்லாம்
போர்க்குவியல் கண்டகண்கள்-கழனி
    போகவழி தேடுதுகாண்!-அடிக்கும்
மார்கழியின் தூறலிலே-உயர்ந்த
    மாடிப்பரண் மீதினிலே-இரவில்
நேர்பார்வை சுழல்பார்வை-வீசி
    நிதம்காவல் புரிவோமே!

மார்தட்டி நின்றமாந்தர்-ஈற்றில்
    மறைவாகிப் போனதென்ன?-உள்ளம்
சோர்வாகி நின்றதாலே-எங்கள்
    சுதந்திரமும் போனதுகாண்!?-குடிக்க
நீர்இல்லை நிர்க்கதிதான்-பயணம்
    நிர்மூல மானதுவே-சூழ்ந்த
கார்இருள் விலக்கவோடி-பதறி
    கடைசிவரை வந்தவர்யார்?

ஊர்முழுதும் நடந்தகால்கள்-முடக்கம்
    கூர்முள்ளு முகாம்களுக்குள்-இன்னல்
கோர்வையாய் தொடர்வதுமேன்?-வாழ்வில்
    குறுகியாம் நிலைகுலைந்தோம்-ஊரில்
பேர்கொண்டு வாழ்ந்தவாழ்வு-போரால்
    போனதே அகதிவாழ்வாய்!-எங்கள்
பூர்வீகம் நிலைத்திடுமா-அணைக்கும்
    பொற்காலம் புலர்ந்திடுமா?

-அலெக்ஸ்பரந்தாமன், வவுனியா

## அவள்!

தங்கத் தாமரை போன்ற முகத்தினாள்
தமிழில் இனியதோர் காவிய மானவள்
மஞ்சள் பூசிய மலர்களைப் போன்றவள்
மங்கை எந்தன் மனதுக் கினியவள்

இன்ப மென்றொரு வீணையை மீட்டியே
இனிய கான மிசைத்திடும் பூங்குயில்
கண்களால் ஒரு காவியம் பாடியே
காதலுக் கொரு கோடு வரைந்தவள்

அன்பினா லொரு பால மமைத்தவள்
அழகினா லெந்தன் ஆவிபறித்தவள்
தென்ற லோடொரு சேதியைச் சொன்னவள்
சின்னவள் என்சிந்தை கவர்ந்தவள்

பட்டுக் கூந்தலிற் படுக்கை விரித்தவள்
பால் நிலாவினிற் பாட லிசைத்தவள்.
தொட்டுத் தொட் டெனைப் பேசி மகிழ்ந்தவள்
சொர்க்க மீதிலோர் தொட்டி லமைத்தவள்

வானில் நீந்திடும் தேனிலா வண்ணமோ
வண்ண மெல்லாம் எனை வம்புக் கிழுக்குமோ
கூனலிளம் பிறை நெற்றியில் வீழ்ந்திடும்
கூந்தலுக் கொரு கோடி கொடுக்கவோ.

அழகினுக் கொரு அழகினைத் தந்தவள்
அன்பினால் எந்தன் உள்ளம் கவர்ந்தவள்
மலர்களில் அவள் மல்லிகை போன்றவள்
மாலைத் தென்றலில் மந்திரம் சொன்னவள்.

கூனிநின்ற புருவங்கள் மத்தியில்
குற்றி வைத்தொரு பொட்டையு மிட்டனள்
மானின் பார்வை மருண்ட விழியினள்
மங்கை எந்தன் மனதுக் கிசைந்தவள்.

தேனடா அவள் சிற்றிடை நூலடா
மானடா அவள் மைவிழி மீனடா
வானடா அவள் வண்டமிழ் பாவடா
வைய மீதிலென் வாழவின் ஒளியடா.

கந்தபேரின்பம் 'திவான்'

## மலையக எழுச்சி

### உரிமைகள் பறிப்பு!

உதவிகள் மறுப்பு; எங்கள்
    உரிமைகள் பறிப்பு; கற்றால்
பதவிகள் மறுப்பு; காணிப்
    பகிர்வினில் புறக்க ணிப்பு
கதவுகள் அடைப்பு ஈட்டக்
    கல்வியில் வாய்ப்பு; நாட்டில்
இதரபல் தடைகள்; சமூகம்
    இடரினில் தவிப்புச் சிக்கி!

வீசுவோம் கடலில்; கூடி
    விரட்டுவோம் நொடியில்; அற்ப
தாசுநீர்; துடைப்போம்; கள்ளத்
    தோணிகள் என்று வன்று
பேசியோர் பல்லோர்; பார்த்து
    ஏசியோர் சில்லோர்; கேட்டுக்
கூசினோம்; புளித்துப் போன
    கூக்குரல்; நகைத்து நின்றோம்!

தொழிலாளர் வர்க்க மிங்கு
    தொடர்ந்தந்த வர்க்க மாக
வழிவழி யாக வீழ
    வழிவெட்டு; மீட்சிக் கன்று
குழிவெட்டு; பதவி கேட்டால்
    குறுக்கீடு; மறுப்பு; எங்கும்
பழிப்புரை; ஒடுக்கல்; வீழ்ச்சி
    பள்ளத்தில் சமூகம்; தாழ்ச்சி!

தொழிலாளர் கல்லாப் பிள்ளை
    தொழிலாளி யாக மட்டும்
வழியன்று; பதிவு; வேலை
    வழங்கல்கள்; ஆனால் இல்லம்
பிழிந்திங்கு கற்க வைக்கும்
    பிள்ளைக்குப் பதவி கேட்டால்
பழிவாங்கல்; ஒதுக்கல்; வேட்டு
    பிரஜையா என்று கேட்டு!

(தொடரும்).

கவிஞர் வி.எஸ். காந்தி

## ஊருக்குப் பாலம்!

காலம் கால மாய்ஊரார்
    கடல்க டந்து பயணித்த
கோலங் கண்டு இறைவனும்
    கொள்ளுந் துன்பம் களையவே
பாலந் தந்தான் எமக்கேதான்
    பயணம் செய்து மகிழ்வோமே!

படகுப் பயண வாழ்வினில்
    பட்ட பாடு பெரும்பாடு
இடரைக் களைந்து எம்மையே
    இறைவன் இன்று காத்திட்டான்
தொடரும் பயண வழியினில்
    தொல்லை இனியும் இல்லையே!

மாண்டு விட்ட பல்லோரின்
    மனதில் இருந்த வேட்கையும்
நீண்ட பாலம் ஒன்றிங்கு
    நிலைக்க வேண்டு மென்பதே!
ஆண்ட வனாரின் அருளாலே
    அமைந்த திங்கு பாலமே!

நிறைந்த மக்கட் பேரெலாம்
    நிம்மதி காணும் நற்காலம்
விரைந்த பயணம் செய்திடவே
    விழைந்த பாலம் வந்ததுவே!
இறைவன் ஈந்தான் பாக்கியம்
    இதயம் நெகிழ்ந்து போற்றிடுதே!

-வி.எம்.அன்ஸார், கிண்ணியா- 02.

## புனிதனாவாய்!

அறுபது துளிகள் அவன்செல விட்டான்
    அதிலொரு துளியில் நீயானாய்!
ஊறுதுணை செய்தே உடலுற வேற்ற
    உத்தமி அவளும் தாயானாள்!

பத்துத் திங்கள் கருவறை யென்னும்
    பள்ளியில் நீயும் துயில்கொண்டாய்!
பத்துத் திங்கள் வாழ்ந்து முடித்து
    பாரெனும் இந்தப் புவிகண்டாய்!

நூலினைச் சுமந்தே புன்னகை தவழ
    நுவலும் கல்வி பெறச்சென்றாய்!
வாலிப மிடுக்கில் வனிதையர் பலரை
    வலையில் வீழ்த்தி நீவென்றாய்!

நன்மை தீமைகள் தேரா நின்றே
    நலிவும் சிறப்பும் தான்கொண்டாய்!
சின்ன மனத்தர் செகத்தில் காட்டும்
    சீற்றம் தனையும் நீகண்டாய்!

பெண்ணாம் ஆசைக் கடலில் நீந்தி
    பிள்ளைகள் பலரை நீபெற்றாய்!
கண்ணாய் இல்லாள் தன்னை மதித்து
    களித்தாய்; வாழ்வில் சிறப்புற்றாய்!

ஆத்மீ கத்தை அறியும் முயல்வில்
    ஆலயம் தனிலே பழிநின்றாய்!
சாத்வீ கத்தின் சால்பை உணர்ந்தால்
    சகத்தில் புனிதன் என்றாவாய்!

-கவிஞர் அ.கௌரிதாசன்,
ஆலங்கேணி கிழக்கு, கிண்ணியா

## வேண்டாம்!

எழுது கோலை வைக்கிறேன்
    எழுத வில்லை இனியுமே
பழுது கொண்ட ஆட்சியில்
    பயன்ப டாதே ஊடகம்
அழுத கண்ணும் காய்ந்ததே
    ஆரு மில்லை கேட்கவே
கழுதை தேய்ந்து தேய்ந்துமே
    கட்டெ றும்பாய் ஆனதே!

தாள்கள் எதற்கு ?கோல்முடம்
    தலையும் எதற்கு ? கைமுடம்
நாள்கள் எதற்கு? வாழ்விலை
    நலன்கள் எதற்கு? மகிழ்விலை
ஆள்தான் எதற்கு? உருவமே
    அருளும் எதற்கு? இறையிலை
வாள்தான் எதற்கு? தழுக்கியே
    வளமும் எதற்கு? பாலையே!

போதும் தமிழும் பாடலும்
    புகழ்ப டைத்த நூல்களும்
யாதும் ஊரே என்றநாம்
    யாவ ருக்கும் கேளிராய்
கோதும் புளியும் ஆகியே
    கொஞ்ச நாளில் மாய்வமே
பாது காப்பு இனியுமா?
    பாரை நம்பு மாதலை?



பிழையை விட்டு வாழவே
    பிறந்த 'சாதி' நாங்களே
பழைய வற்றைப் பேசியே
    பாழுங் கிணற்றில் வீழ்ந்தோமே
களைந்து வாழ விழைபவர்
    காலைப் பிடித்து வாழலாம்
விளைவு வட்டம்-வெறுமையே
    வேண்டாம் இங்கு பெருமையே!

-சி. அம்பலவாணர், திருகோணமலை.



சந்திரன்,
அட்டன்.

**கேள்வி:-** அதிகாரம் இல்லாதவர் அதிகாரம் உள்ளவருக்குப் போட்டியாக வந்துவிட்டால் என்ன நடக்கும் பித்தரே?

**பதில்:-** அதிகாரம் உள்ளவர், இல்லாதவரைத் துரத்துவது, துன்பப்படுத்துவது, ஓட ஓடத் துரத்துவது, கடைசி வரை துரத்திச் சென்று துவம்சம் செய்வது. இது ஏட்டிலில் இல்லாத ஒரு சட்டம்.

விமல்,
நெடுந்தீவு.

**கேள்வி:-** ஜனநாயகத்தின் சின்னங்கள் என்ன?

**பதில்:-** ஜனநாயகத்துக்கு மூன்று சின்னங்கள் இருப்பதாகக் கேலியாகச் சொல்லப்படுவதுண்டு. குளிர்பானம் அல்லது மதுபானம், பூமாலை மற்றும் மைக்.

காண்டீபன்,
கொழும்பு.

**கேள்வி:-** நான் பெண் பார்க்கப் போகலாம் என்றிருக்கிறேன். எனக்கு உபதேசம் செய்யுங்கள் பித்தரே...?

**பதில்:-** கண்களை நம்பாதீர்; காதுகளை நம்பும்,

வேலு,
மட்டக்களப்பு.

**கேள்வி:-** இரகசியங்களை மனைவியிடம் சொல்லலாமா, தாயிடம் சொல்லலாமா?

**பதில்:-** அன்பை மனைவியிடம் காட்டும்; இரகசியத்தை தாயிடம் மட்டும் கூறும்.

தாயகன்,
இளவாலை.

**கேள்வி:-** பொருளாதாரப் பிரச்சினையால் சாமியார் ஆகிவிடலாமா என்று யோசிக்கிறேன்...?


**பதில்:-** 'மதுரை வீரன்' என்ற லேட்டஸ்ட் மோசடி சாமியார் சொல்வதைக் கவனியுங்கள்; சிலவேளை உங்கள் பிரச்சினைக்கும் தீர்வு இருக்கலாம். ''என்னிடம் எந்த விதமான விசேட திறமையும் இல்லை. நான் ஒரு சாதாரண மனிதன். சாமியார் வேடம் போடுவது மிகச் சிறந்த தொழில் என்று புரிந்தது. உடனே போட்டுக் கொண்டேன். வலிய வந்து விழுந்த பெண்களை என் பசிக்கு இரையாக்கிக் கொண்டேன்'' - என்கிறார். ஆனால் இவரைப் பின்பற்றி விடாதீர்.




ஜெபாரதி,
கொழும்பு.

**கேள்வி:-** கடைச் சாப்பாட்டை சாடும் கணவனைத் திருத்த வழி சொல்லுங்கள் பித்தரே....?

**பதில்:-** வீட்டுச் சாப்பாடு நன்றாக இருந்தால் அவர் ஏன் கடைச் சாப்பாட்டை நாடுகிறார்...? விருந்தை நீர் சரியாகப் படைத்தால் அவர் வேறு இடம் நாட மாட்டார் சகோதரியே....!




லதா,
வவுனியா.

**கேள்வி:-** பெண்களின் பின்னால் சில பேய்கள் அலைவது ஏன் பித்தரே.....?

**பதில்:-** 'பெண் என்றால் பேயும் இரங்கும்' என்ற பழமொழியை நீர் அறிந்திருக்கவில்லையா? இரக்கத்தில் தான் பின்னால் திரிகின்றன போலும்....?

அமீன்,
மருதானை.

**கேள்வி:-** சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாதாமே. உண்மையா பித்தரே...?

**பதில்:-** யார் சொன்னார்கள் அப்படி...? கடந்த பொதுத் தேர்தலில் தோற்றவர்களும் இப்போது வேட்பாளர் நியமனத்துக்கு ஒற்றைக்காலில் நிற்கின்றார்களே...?

யது,
வவுனியா.

**கேள்வி:-** காதலியை வசப்படுத்துவதற்கு எப்படி அணுக வேண்டும்...?

**பதில்:-** மெல்ல மெல்ல Little by little.

வரன்,
மஸ்கெலியா.

**கேள்வி:-** பித்தரே! குரைக்கும் நாய் கடிக்காது என்கிறார்கள் உண்மையா...?

**பதில்:-** ஆம். குரைக்கும் சமயத்தில் கடிக்க முடியாது தானே....?



அக்மல்,
பேருவளை.

**கேள்வி:-** தலையெழுத்து - திருமண எழுத்து. ஒப்பிடுக. பித்தரே...?

**பதில்:-** ஒன்று தானாக வந்து ஒட்டிக் கொள்வது. மற்றயது நாமாகத் தேடி விதித்துக் கொள்வது.

மதி,
நீர்கொழும்பு.

**கேள்வி:-** பித்தரே! பார்த்தால் பசி தீருமா?

**பதில்:-** சில பசிகள் கனவில் கூட தீர்ந்துவிடும். வேறு சிலவோ ருசித்து அனுபவித்த பின்னரும் அடங்குவதில்லை. பசிகள் பல விதம். ஒவ்வொன்றும் ஒரு விதம்....!

ராஜ்,
சிலாபம்.

**கேள்வி:-** உயிரின் தொடக்கம் எங்கே பித்தரே...?

**பதில்:-** உணர்ச்சியின் சங்கமத்திலே அன்பரே...!

விவேக்,
பசறை.

**கேள்வி:-** தாதியர் பணிக்கு அதிகம் பெண்களையே அமர்த்துகிறார்களே. ஏன்?

**பதில்:-** 'ஆள் பாதி; ஆடை பாதி' என்பார்கள். அதுபோல நோய் நிவாரணத்துக்கு 'மருந்து பாதி; மாது மீதி' என்று நினைக்கிறார்களோ என்னவோ...!

கண்ணன்,
கண்டி.

**கேள்வி:-** நீங்கள் சோதிடத்தை நம்புவீர்களா?

**பதில்:-** 'மந்திரம் கால்; மதி முக்கால்' என்றால் உங்களுக்கு விளங்க வேண்டும்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 406

சொற்சிலம்பம் 406 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய கடைசித் திணம் 2010 ஆம் ஆண்டு மார்ச் 07 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் மார்ச் 14 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல. 404 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன. தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக ரூபா 250 உம், இரண்டாவது பரிசாக ரூபா 150 உம், மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.

## சொற்சிலம்பம் போட்டி இல.404


| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 தே | 2 க | ப் | 3 பி | 4 யா | 5 ச | ம் | ■ |
| 6 ச | ம | ■ | 7 தா | ச | ன் | ■ | 8 வி |
| 9 வ | ம் | 10 பு | ■ | 11 க | னி | 12 த | ல் |
| மு | ■ | 13 வ | 14 ர | ம் | ■ | 15 ம | லை |
| 16 மை | 17 தா | ன | ம் | ■ | 18 பு | து | ■ |
| ■ | 19 ரா | ம் | ■ | 20 ம் | கா | ■ | 21 மு |
| 22 உ | ள | ■ | 23 த | க | ர் | 24 த | ல் |
| 25 ப | ம் | ப | ர | ம் | ■ | 26 கா | லை |

## சொற்சிலம்பம் போட்டி இல. 404

### பரிசு பெறுவோர்

1. திருமதி. ஜே. ஏபிரகாம், பீட்று எஸ்டேட், மார்க்காஸ் தோட்டம் டிவிசன், நுவரேலியா.
2. திரு. சி.இராஜேந்திரா, இல. 33, 5/1, 42ஆவது ஒழுங்கை, கொழும்பு - 06.
3. பொ. பாலசுப்பிரமணியம், பிரதான வீதி, தம்பிலுவில் - 01.

## சொற்சிலம்பம் போட்டி இல.406



### சொற்சிலம்பம் போட்டி இல. 406

**இடமிருந்து வலம்**

1. மனம் வெந்து பரிதாபப் படல்.
6. பிள்ளை.
7. ஒரு கிரகம்/ ஒரு கிழமையும் கூட.
8. நாவிதன் செய்வது.
10. முக்கனிகளுள் ஒன்று
11. (அளவுக்கு) அதிகம்/ கூட.
12. ஆசைப்பட.
14. ஆற்றைக் கடக்க உதவும்.
15. நிகழ்வு/ நிகழ்ந்தது.
17. பிறருக்குத் தெரியாமல் தீட்டுவது.
18. பழம்.
19. எழுத்துக்களின் ஆரம்பம் இது என்பர்.
20. சமிபாடு நடப்பது இங்கே.
21. முப்பரிமாணங்களுள் ஒன்று.

**மேலிருந்து கீழ்**

1. ஐந்தாம் திதி/ நாள்.
2. கவரி.
3. விடாய்.
4. 'பல' என்பதைக் குறிக்கும்.
5. ஒரு தமிழ் மாதம்.
7. 'சல்யூட்' அடிப்பதை/ வணங்குவதை இப்படிக் கூறுவர்.
9. முகம்.
10. அருந்துதல்/ குடி
12. நஞ்சு.
13. கவனம்/ படிவம்.
14. ஊர்வலம்/ உலாப் போதல்.
15. இராஜசின்னத்தில் ஒன்று. கடலில் விளைவது.
16. இரவு அல்லாத நேரம்.
17. அனைத்து/ எல்லா.
19. உள்.

### சொற்சிலம்பம் போட்டி இல. 404

**பாராட்டுப் பெறுவோர்**

01. த.சந்திரராணி, கல்முனை.
02. திருமதி. ஞானம் சோமசுந்தரம், கல்லடி.
03. அ.சௌமியா, வவுனியா.
04. மா.சுப்பிரமணியம், மட்டக்களப்பு.
05. திருமதி சந்திரா ரவீந்திரன், ஹற்றன்.
06. எம்.எவ்.எம். றிம்சாத், கிண்ணியா.
07. செல்வன் அ.செந்தூரன், மட்டக்களப்பு.
08. வி. தனபாலசிங்கம், சாவகச்சேரி.
09. பொன்னம்பலம் கோகிலா, மீசாலை.
10. ஜே.எஸ்.எச் மௌலானா, கல்கிசை.
11. திருமதி விக்டோரியா ஜெயராஜ், வத்தளை.
12. எபனேசர் சாந்தரூபன், யாழ்ப்பாணம்.
13. ஜெயசேகரா நகுலன், யாழ்ப்பாணம்.
14. திருமதி செபமணி அல்பிரட், மானிப்பாய்.
15. கே.சிவதாசன், மட்டக்களப்பு.

# "பொறுமையாளர்களுக்கு வெற்றி நிச்சயம்"

ஆத்திரப்படுவதில் மனிதர்கள் காட்டும் அக்கறை பொறுமை கொள்வதில் காட்டுவதில்லை. ஆத்திரம் என்பது சினத்தினால் உந்தப்படும் ஓர் உணர்ச்சியாகும். பொறுமை இழத்தலே பாவச் செயல்களுக்கு ஆதாரமாய் அமைகிறது.

ஆத்திரப்படுவதில் நாம் காட்டும் ஆர்வம் பொறுமை கொள்வதில் காட்டுவதில்லை. அதிகவேளை ஆத்திரப்படுவதின் மூலம் ஏற்படும் இழப்புகள் பொறுமை காப்பதின் மூலம் ஏற்படுவதில்லை.




நமக்கு இறைவன் எத்தனையோ அருட்கொடைகளை வழங்கியிருக்கிறான். அவற்றிலெல்லாம் மிகவும் அரிதானது பொறுமையும் அதனைக் கடைப்பிடிக்கும் திடகாத்திரமான மனநிலையுமாகும். பொறுமை பெற்றவர்கள் பாக்கியசாலிகள். பொறுமையாளர்களுக்கு அவர்கள் செய்ததைவிட இன்னுமின்னும் அதிகமான நற்கூலி வழங்கப்படும் என்றும் பொறுமையாளர்களுக்கு அளவற்ற கூலி வழங்கப்படும் என்றெல்லாம் கூறப்பட்டிருக்கிறது.

உடலுக்கு சிரசு எவ்வாறு முக்கியத்துவம் பெறுகின்றதோ அது போலவே நமது அன்றாடச் செயற்பாடுகளுக்குப் பொறுமையே பிரதானமாக விளங்கவேண்டும்.

சாதாரண மனிதர்களிலிருந்து நம்மை வேறுபடுத்திக் காட்டுவது பொறுமையேயாகும். பொறுமைக்கு உயர்தர மதிப்புண்டு.

ஒருவர் தனக்கு ஏற்படும் கோபத்தை அடக்கிக்கொண்டு பொறுமையைக் கடைப்பிடித்தால் அவருக்கு உயர்தர கண்ணியமும் தன் உள்ளத்தில் மன அமைதியும் ஏற்படும்.

தங்களுக்கு ஏற்படும் கஷ்ட நஷ்டங்களைப் பொறுத்துக் கொண்டு அமைதி காத்தவருக்குச் சமூகத்தில் எப்பொழுதும் உயரிய அந்தஸ்து இருக்கும்.

**-ஏ.எச்.ஏ.ஹுஸைன்-**

என்னென்ன விடயங்களில் நாம் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும்? உடல் சம்பந்தப்பட்ட பொறுமை; உடலில் ஏற்படக் கூடிய கஷ்டங்களையும் வருத்தங்களையும் பொறுத்துக் கொள்ளலை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். இத்தகைய பொறுமை சில வேளைகளில் செயல்களோடு தொடர்பு கொள்ளும் கடினமான வேலையைப் பொறுமையோடு செய்வது.

இன்னும் சில வேளைகளில் சகிப்புத் தன்மையோடு பொறுமை பின்னிப் பிணைந்து இருக்கும். கடின தண்டனையைப் பொறுத்துக் கொள்வது, வேதனை நிறைந்த வியாதியைச் சகித்துக் கொள்வது என்பவை இவற்றில் அடங்கும்.

வறுமை, பசி, பட்டினி, உயிரிழப்புகள், பொருளாதார இழப்புகள், அங்கவீனம் என்பனவற்றிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பவர்களுக்கும் நற்கூலியும் பிரதிபலனும் நிறையவே உண்டு.

மனத்தில் எழும் பேராசைகளும், உடலில் எழும் காம உணர்ச்சியும் எமது பொறுமையைக் கடுமையாகச் சோதிக்கும். இவற்றை எதிர்த்து நாம் போட்டியிட்டு அதிலே நாம் வெற்றியடைந்தால் இந்த உணர்வுகள் தோல்வியடைந்தால் நமக்கு நிரந்தர மகிழ்ச்சியும், உயர் கண்ணியமும், அமைதியும், ஆனந்தமும் உண்டாகும். சில ..... உணர்ச்சிகள் வெற்றி பெற்று நாம் தோல்வியடைந்தால் நமக்கு எல்லா அம்சங்களிலும் நிரந்தரத் தோல்வியே ஏற்பட்டு அதன் மூலமாக அவஸ்தையும் அவமானம் உண்டாகும். அழகிய முறையில் பொறுமையைக் கடைப்பிடிப்போர் அச்சப்படவோ, அவமானப்படவோ வேண்டியதில்லை.

***

உங்களது
அந்தரங்க பிரச்சினைகள் மற்றும் குடும்பப் பிரச்சினைகள், சந்தேகங்கள் தொடர்பான கேள்விகளுக்குப் பதிலளிக்கிறார் உளநல ஆலோசகர்
ஏ.எச்.ஏ.ஹுஸைன்.
கேள்விகள் வந்துசேரவேண்டிய முகவரி:
'உளநல ஆலோசனை'
சுடர் ஒளி வாரமலர்,
85, ஜெயந்தமல்லி மாராச்சி மாவத்தை, கொழும்பு - 14.
ஈமெயில் :
abdulhussein525@gmail.com

# மனிதர்கள் ஏன் மற்றவர்களை ஏமாற்றி வாழ்கிறார்கள்?

**கேள்வி:** எனது அயல் வீட்டில் உள்ள ஆண்கள் மதுப்பிரியர்களாக இருக்கிறார்கள். மதுபோதை தலைக்கேறிய நிலையில் தினமும் வீட்டுக்கு வந்து மனைவிமாருக்கே பலத்த அடி விழுகிறது. தகாத வார்த்தைப் பிரயோகங்கள் சரளமாக வருகின்றன. எல்லோரையும் மனைவிமாருக்கு இட்டுக் கட்டிக் கதைக்கிறார்கள். பொழுதுபட்டாலே எமக்கும் தொல்லை ஆரம்பித்து விடும். இப்படிப் பட்டவர்களை என்ன செய்யலாம்? பொலிஸில் பிடித்துக் கொடுக்க முடியாதா?

**பதில்:** இப்படிப்பட்ட பேர்வழிகளின் தொல்லையிலிருந்து பாதுகாப்புப் பெற சட்டத்தில் விஷேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வீட்டு வன்முறைத் தடுப்புச் சட்டம் இதற்கு உதவும். இத்தகைய நபர்களின் தொல்லைகள் எல்லை மீறிப்போனால் பொலிஸாரின் உதவியை நாடுவது நல்லது.

மதுபோதையால் ஏற்படும் நாசக்கேடுகள் பற்றி நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். அதாவது எல்லா வகையான தீமைகளுக்கும் ஆணிவேராக மதுபோதையே கருதப்படுகிறது. போதையில் நிதானமிழந்துபோய் இருப்பவர் எதைச் செய்வார். எதைச் செய்யமாட்டார் என்று அறுதியிட்டுக் கூறமுடியாது. மது அருந்துதல் ஒரு கெட்ட பழக்கம் மட்டுமல்ல, அது பல தீமையான பின் விளைவுகளுக்கும் முன்னோடியாகவும் இருந்து வருகின்றது. மது பகுத்தறிவைப் போக்கி விடுவதால் மனிதர்களுக்கு மனிதத் தன்மை அற்றுப்போய் மிருகத் தன்மை வந்து விடுகிறது.

மது போதையினால் ஏற்படும் கொடிய விளைவுகளை சட்டத்தினால் மட்டும் தடுத்திட முடியாது. மதுப்பிரியர்கள் மத்தியிலும், மதுப்பிரியர்களில்லாத மற்றறவர்கள் மத்தியிலும் நல்ல மன மாற்றம் ஏற்பட வேண்டும்.

மதுவினால் ஏற்படும் உடல் நலப் பாதிப்புக்களையும் மற்றுமுள்ள பாதிப்புக்களையும் குறித்த விழிப்புணர்வு ஏற்படவேண்டும். இந்தகைய சமுதாய விழிப்புணர்வின் மூலமாகவே மதுவினால் ஏற்படும் தீமைகளை ஒழிக்க முடியும்!

**கேள்வி:** நான் ஒரு பெண், வயது 35, இரண்டு குழந்தைகள் உள்ளன. தற்போது என் பெற்றார் சகோதரங்களின் உதவியோடு என் குழந்தைகளைக் கஷ்டப்பட்டு வளர்க்கின்றேன். நான் இரண்டு முறை திருமணம் செய்துள்ளேன். ஆனால் இரண்டு வாழ்க்கையும் கைகூடவில்லை. நான் எப்போதுமே ஒரு திறந்த மனதுள்ள ஒருத்தியாக இருப்பதாலும் எல்லோரும் என்னை இலேசாக ஏமாற்றி விடுகிறார்கள். வாழ்க்கையில் என் போன்ற நல்லவர்களுக்கு ஏன் இத்தகைய கஷ்டங்கள் வரவேண்டும். மனிதர்கள் ஏன் மற்றவர்களை ஏமாற்றி வாழ்ந்து கொண்டு போகிறார்கள்? என் போன்ற நல்லவர்கள் வாழமுடியாதா?

**பதில்:** வாழ்க்கை என்பது ஒரு சோதனைக் களம் தான். இதில் நன்மையும் தீமையும் மாறி மாறி நடக்கும். ஏமாற்றி வாழும் இழி குணங்கள் இல்லாத சிறந்த மனநிலை உங்களிடம் இருப்பதே ஒரு சிறப்பம்சம் தானே! இத்தகையதொரு உயர்வானதொரு மனநிலையைக் கொண்டிருக்கும் நீங்கள் ஏன் கலங்கவேண்டும்.

நீங்கள் யாரையும் ஏமாற்றவில்லை; மனங்களைக் காயப்படுத்தவில்லை; தீயவற்றைச் செய்யவில்லை என்ற ஆத்ம திருப்தி உங்களிடம் இருக்கும் போது யாருக்கும் எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை. வாழ்க்கையில் உங்களுக்குத் தோல்வி ஏற்பட்டு விட்டதாக நீங்கள் கருத வேண்டாம்.

நல்ல உள்ளங்களைச் சுற்றி எப்பொழுதும் நல்ல உறவுகள் இருந்து கொண்டே இருக்கும். நயவஞ்சகத்தனமாக அல்லது நன்றி கெட்டதனமாக நடந்து கொள்பவர்கள்தான் வாழ்க்கையில் இடறுபட்டு நிம்மதியை இழந்து தோல்வியைச் சந்திப்பார்கள்.

நீங்கள் உங்கள் குழந்தைகளோடும் பெற்றோர், சகோதர்களோடும் அவர்களது அரவணைப்பில் நம்பிக்கையிழந்து விடாது வாழுங்கள். மனம் தளர்ந்து விடவேண்டாம். நிறைவாக நிம்மதியாக வாழும் வழிமுறை உங்கள் நம்பிக்கையில்தான் உண்டு.

**கேள்வி:** நான் ஒரு பெண், வயது 40, நான்கு பிள்ளைகளும் நல்ல கணவனும் இருக்கிறார்கள். கேள்வி என்னவென்றால் நாம் வாழ்க்கையில் பல சோதனைகளில் முட்டி மோதியிருக்கிறோம். என்னைப் போன்று என் கணவரும் பிள்ளைகளும் மற்றவர்கள் மீதே இரக்கம் காட்டுவதில் எப்போதும் முன்னிற்பார்கள். மற்றவர்களின் குற்றம் குறைகளை நாம் கண்டு கொள்வதே இல்லை. நமக்கெதிராக மற்றவர்கள் செய்யும் அனைத்துக் குற்றங்குறைகளையும் நாம் மன்னித்து மறந்து விடுகிறோம். இது நமது பலவீனமா? இதனைச் சிலர் தவறாகப் பயன்படுத்தலாமல்லவா?

**பதில்:** முதலில் நீங்கள் உங்கள் கணவர், உங்களுக்கேற்றாற்போல உங்களுக்குக் கிடைத்திருக்கும் பிள்ளைகள் எலலோருக்கும் சிறப்பாக உள்ள பரந்த மனம் எனும் பேரருள் கிடைத்திருப்பதே ஒரு சிறப்பம்சமாகும். இத்தகைய சிறப்பு வாய்ந்த உள்ளத்திற்கு நிகராக உலகில் எதுவுமே இருக்க முடியாது.

உலகில் நாம் வாழ்கின்ற கால அளவு மிகக்குறுகியதாகும். அதனை அமைதியோடும், நிம்மதியாகவும், நிறைவாகவும், மகிழ்ச்சியாகவும் கழிக்க வேண்டும்.

நிறைவும், நிம்மதியும், ஆத்ம திருப்தியும் நமக்குக் கிடைக்க வேண்டும் என நாம் ஆசைப்பட்டால் பிறருக்காக நம் நம்மை அர்ப்பணித்து விடவேண்டும்; மற்றவர்களுக்காகவே வாழ வேண்டும்; மன்னிக்கும் பெரும்பண்பை நாம் கைக்கொள்ள வேண்டும்.

"நன்மையும், தீமையும் சமமாக மாட்டா! தீயவற்றை நன்மையைக் கொண்டு எதிர்கொள்ளுங்கள்; அதுதான் அதற்கான சிறந்த வழிமுறையாகும். உங்களோடு கரும்பகை பாராட்டுபவர் ஒரு காலத்தில் உங்களுடைய இனிய நண்பராக மாறிவிடக்கூடும்" என்றும் நல்லவர்கள் கோபத்தை மென்று அடக்கிக்கொள்கிறார்கள்; மக்களை மன்னித்து விடுகிறார்கள். இறைவனோ இத்தகு சான்றோரையே நேசிக்கிறான் என்று புனித அல்குர்ஆன் உபதேசிக்கிறது.

மன்னிப்பது ஒருபோதும் நமது பலவீனமாக மாறிவிடாது. மன்னிப்பதால் கண்ணியமும், கௌரவமும் வாழ்க்கையில் அழகும், ஆனந்தமும், கவர்ச்சியும் உண்டாகும்.

***

**பலரின் வேண்டுகோளுக் கிணங்கி இப்பகுதியில் பிரசுரிக்கப்படும் வாசகர்களால் அனுப்பப்படும் உளவியல் சார்ந்த கேள்விகளுக்கு அவர்களின் பெயர், இடம் என்பவை குறிப்பிடப்படவில்லை.**

# மடியில் உறங்கினான்

**1995 ஆம் ஆண்டு சாவகச்சேரியில் இருந்து இடம்பெயர்ந்த ஒருவர் தனது குடும்பத்துடன் கிளாலி அடைகிறார். அங்கு ஹெலிக்கொப்டர் தாக்குதலில் அவர் கொல்லப்பட அவரது மனைவியும் மகளும் கிளாலியைப் படகில் கடந்து விசுவமடுவை அடைகிறார்கள். பல கஷ்டங்களின் பின்னர் முள்ளியவளையில் குடியிருக்கிறார்கள். மகள் தீபா பாடசாலையில் படிக்கும் போது குயிலன் என்பவனுடன் நட்பாகிறாள். அதன் பின்னர் இவர்கள் படும் துன்பங்களையும் வன்னி யுத்தத்தில் அவர்கள் சிக்கிப் படும் அவலங்களையும் இந்த கதை விளக்குகிறது.**

4

க. தமிழ்மொழியன்

எனக்கு ஓர் அதிர்ச்சி இருந்தது. கடவுளின் செயல் அப்பொழுதுதான் நிகழ்ந்திருந்தது. எதுவுமே பேச முடியவில்லை. என் எதிரே என் அன்புக் கணவன் குயிலன் இருந்தான். என்ன செய்வது என்று எனக்குப் புரியவில்லை. ஐயோ, கட்டிப்பிடித்து அழத்தான் தோன்றியது. ஆனால் முடியவில்லை. நான் செய்த பிழையால் வந்த வினை இதுதான். என் கண்கள் இரண்டும் அழுதன. அவனின் கண்களும் அதைத்தான் செய்தன. என்னில் அவன் அளவுகடந்த பாசம் வைத்திருந்தான் என்பது எனக்குத் தெரியும். கதைக்க என் வாய் உச்சரித்தது. ஆனால் சத்தம் வெளியில் வரவில்லை. என் மனசுக்குள் கடவுளை வேண்டினேன், கதைக்க வேண்டும்... கதைக்க வேண்டும்... எப்படியாவது என்னைக் கதைக்க வை என்று கேட்டுக்கொண்டிருந்தேன். அவன் முகத்திலும் ஏன் அழுகிறாய் கதையன் என்று கேட்கிற மாதிரியிருந்தது. ஆனால் கதைக்காமல் அழுது கொண்டிருக்க திடீரென குயிலன் எழுந்து வெளியில் போக என்ன நடந்ததோ தெரியவில்லை, என் மனம் கேட்காமல் மேல் ஏறியவனின் கையை எட்டிப்பிடித்து இழுக்க, விழுந்துவிட்டான். நான் இழுத்துத்தான் அவன் விழுந்தான் என்று நினைத்தேன், ஆனால் அப்படியில்லை. ஐயோ.. குயிலனுக்கு நெஞ்சில் ரவுண்ஸ் பட்டுத்தான் விழுந்தான். உடம்பு முழுவதும் இரத்தம். என்ன செய்வது தலை சுற்றிக்கொண்டுவந்தது. அருகில் இருந்தவர்கள் அவனுக்குக் கட்டுப் போட்டனர். நான் செய்தனா... நான் செய்த பிழையைச் சொல்லிச் சொல்லி அழுதேன். அப்பதான் அபி உள்ளுக்குள் இருந்து எனக்குக் கிட்டவாக வந்தாள்... 'அபி... இது தானம்மா உன்ர அப்பா... அப்பாவைப் பாரம்மா... பார்... இது தான் எங்கட விதி. இதுக்காகவா நாங்கள் இப்படி வாழ்ந்தோம்...' நான் அழுதபடி இருக்க, அபி கத்தத் தொடங்கினாள். 'இது அப்பா இல்லை... மாமா... மாமா...' என்று கத்தினாள். அப்பதான் எனக்கு விளங்கியது. பழைய ஞாபகம் எனது நினைவுக்கு வந்தது. தன்னோடு ஒரு மாமா நல்ல மாதிரி, தன்னை மோட்டார் சைக்கிளில் கூட்டிப் போவார். பள்ளிக்கூடம் விடும்பொழுது எல்லாம் தன்னுடன் வந்து கதைப்பார். சாப்பாட்டுச் சாமான்கள் எல்லாம் வாங்கித் தருவார் என்று சொல்லுறவள்தான். எதுவுமே செய்ய முடியவில்லை. இன்னுமொருவரின் உதவியுடன் குயிலனைத் தூக்கி ஒரு மோட்டார் சைக்கிளில் கொண்டு போய்க்கொண்டிருந்தோம். களைப்பு ஏற்பட்டு அவன் மயக்க நிலையில் இருந்தான். 'தீபா... தீபா,.. செல்லம் என்ர செல்லம்... அபி... அபி...' என்று முனகியபடி இருந்தான். போய்க் கொண்டிருக்கும் போது றோட்டில் எத்தனையோ காயக்காரர்கள் கிடந்தனர். இறந்தவர்கள் எத்தனையோ பேர், எண்ணியா சொல்ல முடியும்? - எல்லாமே சுடுகாடுதான். ஷெல்லடிக்குள் ளும் ஒருமாதிரி ஆஸ்பத்திரிக்குப் போய்ச் சேர்ந்தோம். ஆஸ்பத்திரியில் தறப்பாள் விரிக்கப்பட்டு நூறுக்கு மேற்பட்ட காயக்காரர்கள் அடுக்கப்பட்டிருந்தனர். அங்கு குறிப்பிட்ட வைத்தியர்கள் மட்டும்தான் இருந்தனர். முன்னுக்குக் கொண்டு வந்தவர்களுக்குக் கூட மருந்து கட்ட முடியாத நிலையில் வைத்தியர்கள் இருந்தனர். ஆஸ்பத்திரியே ஒரே இரத்த வெள்ளமாக இருந்தது. அங்கு ஒரே செத்தவீடுதான். என்ன செய்வது? ஒரு துவாய் கிடந்தது. அதில் படுக்க வைத்துவிட்டு ஒரு டாக்டரிடம் ஓடிப்போய் ''என்ர கணவன் காயப்பட்டிட்டார். அவரைக் காப்பாற்றுங்கோ கதைக்க ஏலாமல் கிடக்கிறார்'' என்று சொல்ல டாக்டர், ''இவர்கள் எல்லாரையும் பார்க்காமல் அவரைப் பார்க்க முடியாது, எனக்கு எல்லாம் உயிர்தான்'' என்று சொன்னார். நான் உடனே அவரின் காலில் விழுந்து அழுதேன். ஏதோ அவர் மனம் இரங்கிவிட்டது. அவர் வந்து கையைப் பிடித்துப்பார்த்து, கண்ணையும் பார்த்து சொன்னார் 'இவருக்கு இரத்தம் சரியாகப் போய் விட்டது. உடனே இரத்தம் ஏத்த வேண்டும் இல்லாட்டிக்கு உயிருக்கு ஆபத்து' என்று சொல்லிவிட்டுக் கேட்டார், இரத்தம் என்ன குறூப் என்று. ஏ மைனஸ் என்றேன். இதற்கு எம்மிடம் இரத்தம் இல்லை, எடுத்துத் தான் ஏத்தவேணும், எப்படியாவது ஒழுங்கு செய்யுங்கோ என்று சொல்லிவிட்டு சென்று விட்டார். பிறகு என்ன ஆஸ்பத்திரியில் இருந்தவரிடம் கேட்கவில்லை, எல்லோரிடமும் அழுது அழுது கேட்டேன். எல்லோரும் தம் தம் பிரச்சினையுடன் நின்றார்கள். அந்த நிலையில் எவர்தான் தருவார்கள். உடனே என்னுடன் வந்த அண்ணனை அனுப்பித் தெரிந்த ஒருவரைக் கூட்டிவரச் சொன்னேன். அவரும் சென்றுவிட்டார். குயிலனை என் மடியில் தூக்கி வைத்திருந்தேன்.

அவன் அழுது திக்கித்திக்கி சொன்னான், 'தீபா... தீபா... என்ரபிள்ள... கவனம் வடிவா பார்த்துக் கொள்..., நீ... எதையும் யோசிக்காத..., நான்... ஏதாவது... பிழை செய்திருந்தால்... மன்னிச்சுக் கொள்...' என்றான்.

''நீங்கள் மற்ற உயிரைக் காப்பாற்ற உங்கட இரத்தத்தைக் குடுத்தீங்கள், ஆனால் இப்ப உங்களுக்குத் தர யார் வந்தார்கள்? பார்த்தீங்களா? எப்படிக் கஷ்டப்படுகிறம்''

''அ... சரி... அதைவிடு.. எதுவெண்டாலும்... மற்றவர்களுக்கு... நல்லது... செய்தால் சரி...'' என்று சொன்னான். பின்பு அவனுக்கு கதை வரவேயில்லை. மூச்சு மட்டும் வேகமாக இழுத்துக் கொண்டிருந்தது. திடீரென அந்த மூச்சுக் குறைந்து விட்டது. நான் பயத்தில் டாக்டர் எனக் கத்தினேன். அவரும் ஓடிவந்து கண்ணைத் திறந்து பார்த்தார் - முகத்தில் கையை வைத்துப் பார்த்தார்- கையைப் பிடித்துப் பார்த்தார். நான் அவர் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன். அவர் முகம் மாறியது. எழுந்து நின்று தலையை ஆட்டினார். அப்பொழுதுதான் என் கணவன் மடியில் உறங்கினான் என்பது விளங்கியது. நிரந்தரமாகவே உறங்கி விட்டான். என் கணவர் இரத்தத்தைக் கொடுத்து மற்றவரைக் காப்பாற்றினார், இன்று அவருக்கு இரத்தம் இல்லாமல் போயிற்றே என்று சொல்லிச் சொல்லிக் கத்தினேன்- கத்தினேன்... அப்படியே நான் மயங்கி விட்டேன். எனக்கு பிறகு என்ன நடந்தது என்று தெரியவில்லை. பின்பு என் தறப்பாளில் தான் முழித்தேன். அந்த அண்ணன் என்னை வீட்டுக்குக் கொண்டு வந்து விட்டிருந்தார். என் கணவரின் உடல் மருத்துவமனையிலேயே அடக்கம் செய்யப்பட்டது. உதவியில்லாத படியால் இப்படிச் செய்யப்பட்டது. என் கணவனும் இல்லாமல் அவரின் நினைவுடன் இப்படி இழுபட்டு இழுபட்டு இஞ்ச வந்து கடைசியில் சாப்பாட்டுக்கு லைனில் நிற்கவேண்டி வந்திட்டுது''

''சரி இது எல்லாம் சொல்லுறாய் நான் வரேக்க எதையோ வைத்திருந்து மறைச்சனி என்னத்த மறைச்சனி?''

''அது ஒண்டுமில்ல, என் கணவன் நட்பின் ஞாபகமாகத் தந்த மோதிரம் தான் அது. இண்டைக்கு வெடிச்சுப் போயிற்று. அதுதான் சரியான கவலையா இருக்குது'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது, ''அம்மா... அம்மா...''

''என்ன பிள்ள...''

''நான்... பக்கத்து வீட்டு மாமாவோட சாப்பாடு எடுக்கப் போனனான். என்னை முன்னுக்கு கூப்பிட்டு ஒரு மாமா சாப்பாடு தந்தவர்... பிறகு... வழியில வரேக்க...



ஒரு தம்பி அழுது கொண்டிருந்தான். மாமா அவனிடம் என்ன என்று கேட்டார். அவன் சொன்னான் சாப்பாடு எடுக்கப் போனது.. சாப்பாடு கிடைக்கவில்லை என்று. அப்ப மாமாவிடம் கேட்டன்... இதக் குடுப்பமா... என்று. அவரும் ஓம் என்றார்... நான் அதக் குடுத்திட்டு வந்திட்டன் அம்மா'' என்றாள். எனக்குச் சிரிப்புத் தான் வந்தது. ''அப்பா எதைச் செய்வாரோ, அதை நீ செய்கிறாய், நீ அப்பா பிள்ளைதான் வேறு என்னத்தைச் சொல்வது'' மதியம் பாப்பம் சாப்பாட்டுக்குப் போவம் இப்படியே எம்' வாழ்க்கை போய்க்கொண்டிருக்கு. எனி என்னதான் நடக்கும் இருந்துதான் பாப்பம்.

முற்றும்.

# கும்பகோணத்தில் குடியேறுகிறார் ஜெயேந்திரர்?

இழந்த பெருமையை மீட்டுவிட வேண்டும் என்ற துடிப்போ என்னவோ... கும்ப கோணத்தையே குலுங்க வைக்கும் விதமாக காஞ்சி சங்கராச்சாரியாரின் 75 ஆவது அவதார மகோத்ஸவத்தை கடந்த 7ஆம், 8 ஆம் திகதிகளில் பெரிதாகக் கொண்டாடி இருக்கிறார்கள் அவருடைய பக்தர்கள். பெரிய அரசியல் கட்சியின் மாநாட்டுக்கு இணையாக சங்கராச்சாரியாரின் பிறந்த நாள் கொண்டாட்டத்தை நடத்திய விழாக் குழுவினர்,

''சங்கரராமன் கொலை வழக்கில் இவரை சம்பந்தப்படுத்தி கைது செய்த போது, மனம் நொந்தும் பயந்தும் மடத்தைவிட்டு பலரும் விலகிப் போனார்கள். சங்கராச்சாரியார் சிறையிலிருந்து வெளியே வந்தபோதும் கூட மடத்தின் பக்தர்கள் முன்புபோல் ஈடுபாடு காட்டவில்லை. ஆனால், தற்போது அந்த வழக்கில் முக்கிய சாட்சிகளான ரவிசுப்ரமணியன் உள்ளிட்டவர்களும், சம்பந்தப்பட்ட சங்கரராமன் குடும்பத்தினருமேகூட நீதிமன்றில் பொலீஸாரின் பொய் முகத்தை உரித்துக் காட்டிவிட்டனர். இப்போது தான் பெரியவர் மீது எந்தத் தப்பும் இல்லை என்று எல்லோரும் உணர்ந்திருக்காங்க, அதற்காகத்தான் அவரோட அவதார விழாவை, வெற்றி விழா மாநாடாக நடத்தத் திட்டமிட்டோம்!'' எனச் சொன்னார்கள் உற்சாகமாக.

அவர்களின் கூற்றுக்குச் சான்றாக கும்பகோணம்முழுவதும் 'இந்துக்களின் வெற்றித் திருநாள்', 'நமது வெற்றியை நாளை சரித்திரம் சொல்லும்' 'இப்படைத் தோற்கின் எப்படை வெல்லும்?' என்ற வார்த்தைகளை தாங்கியிருந்த போஸ்டர்களும் கண்ணில்பட்டன. மிகப்பெரிய பந்தல், ஆயிரக்கணக்கான வேத விற்பன்னர்கள், குறைவில்லாத உணவு, முதியோர்களுக்கு உதவி, குழந்தைகளுக்கு நல உதவிகள் என அரசியல் தலைவர்களையே மிஞ்சும்படியான நிகழ்ச்சிகளுடன் பிரமாண்ட ஊர்வலமும் நடந்தது. அதில் யானை, குதிரை, கரகாட்டம், கோலாட்டம், குறவன் குறத்தி ஆட்டம், கேரள செண்டை மேளம், நாகஸ்வர கச்சேரி, டிரம்ஸ் கச்சேரி, அலங்கார ஊர்திகள், சிவதாண்டவம் என கண்கொள்ளாக் காட்சிகள் விரிந்தன. இவற்றை எல்லாம் பார்த்தபடியே இரண்டரை மணி நேரம் மின் அலங்காரம் செய்யப்பட்ட திறந்த வண்டியில் பயணித்து மடத்துக்கு வந்து சேர்ந்தார் விழா நாயகரான ஜெயேந்திரர் சங்கராச்சாரியார்.

விழாவுக்கு வந்திருந்த ப தர்கள் அனைவருக்கும் உற்சாகமான மன நிலையில் புன்னகையோடு சளைக்காமல் பிரசாதங்கள் வழங்கிக் கொண்டேயிருந்தார் சங்கராச்சாரியார். ஆனால், முதல்நாள் ஆரம்பித்து மறுநாள் பேரணி வரை தலைமை வகித்த ஜி.ஆர்.மூப்பனார் ஏனோ கடைசி வரை ஜெயேந்திரரிடம் பிரசாதம் வாங்க முடியவில்லை.

இந்தப் பிரமாண்டக் கொண்டாட்டத்தின் பின்னணி குறித்து செய்தியாளர்கள் பக்தர்களிடம் விசாரித்தார்கள். ''சங்கரராமன் வழக்குக்குப் பிறகு ஜெயேந்திரருக்கு காஞ்சிபுரத்தில் தங்குவது பிடிக்காமல் போய்விட்டது. சிறையிலிருந்து வந்த பிறகும்கூட அவர் காஞ்சிபுரம் போகாமல் வெளியே தங்கியிருந்தது எல்லோருக்கும் தெரிந்ததுதான். வழக்கு முடிந்து குற்றமற்றவர் என்கிற தீர்ப்பு வந்துவிட்டால், அதன்பிறகு ஜெயேந்திரர் தங்கப் போவது கும்பகோணம் மடத்தில்தான். அதற்கான முன்னோட்டமாகத்தான் தன் அவதார மகோத்ஸவத்தை இங்கே இப்படி நடத்தி பக்தர்களின் மனநிலையை ஜெயேந்திரர் நூல் பிடித்துப் பார்த்திருக்கிறார்...'' என்றார்கள்.

''இப்போதெல்லாம் காஞ்சி மடத்தில் ஜெயேந்திரர், விஜயேந்திரர் இருவரும் தனித்தனி வழியில் செல்கிறார்கள். பெரிதாகப் பேசிக் கொள்வதுகூட கிடையாது. அதனாலும் இடமாற்றத்தை விரும்புகிறார் ஜெயேந்திரர். மற்ற எல்லா சங்கர மடங்களையும் விட கும்பகோண மடம் மிகவும் பழைமை வாய்ந்தது. 253 ஆண்டுகளுக்கு முன்பு ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளுக்காக தஞ்சையை ஆண்ட மகாராஷ்டிர மன்னனின் அமைச்சரான டபீர்பந்த் என்பவர் அமைத்துக் கொடுத்த மடம் இது. அதிலும் காவிரியின் கரையில் எல்லா சிறப்புகளுடனும் அமைந்தது. இப்படித் தொன்மை வாய்ந்த இந்த இடத்துக்கு சில கிலோ மீட்டர் தூரத்தில்தான் ஜெயேந்திரரின் சொந்த கிராமமான இருள் நீக்கி இருக்கிறது. இந்துக்களின் மிக முக்கிய ஆன்மிகத் ஸ்தலமாக கும்பகோணம் விளங்குகிறது. ஆச்சார அனுஷ்டானங்களை இன்றளவும் தொடர்ந்து சரியாகக் கடைப்பிடித்து வரும் அந்தணர்கள் அதிகம் வாழ்வதும் கும்பகோணத்தில்தான். அதனால்தான் கும்பகோணத்தில் தங்க ஜெயேந்திரர் முடிவெடுத்திருக்கிறார்!'' என்றும் சொன்னார்கள்.

****

சந்தன் ஓவியம் தீட்டுவதில் மகா கெட்டிக்காரன். நாடெங்கிலும் உள்ள அரசர்கள், ராஜாக்கள், மகா ராஜாக்கள் மற்றும் புகழ்பெற்ற நபர்கள் அவனை அழைத்து தமது உருவப்படங்களை வரைந்துகொள்வார்கள். பதிலாக அவனுக்கு இலட்சக்கணக்கான ரூபா பரிசாகக் கொடுப்பார்கள்.

சந்தன் ஓர் உண்மையான கலைஞன். அவன் தன்னுடைய கலாசிருஷ்டிகளால் பணம் சம்பாதிக்க ஒருபோதுமே நினைக்காதவன். அவனுக்கு மூன்று பிள்ளைகள் இருந்தனர். மூன்று பிள்ளைகளையும் அவன் மிகவும் நேசித்தான்.

சந்தனுடைய மனைவி, சுறுசுறுப்பானவளும் தூரதிருஷ்டி வாய்ந்தவளுமாக இருந்தாள். தன்னுடைய பிள்ளைகள் வீண் செலவு செய்துகொண்டும், ஊர் சுற்றிக்கொண்டும் இருப்பது பற்றிப் பலர் அவளிடம் முறையிடுவார்கள். ஆனால், இதுபற்றி அவள் தனது கணவனிடம் ஒருபோதுமே சொல்லமாட்டாள். பிள்ளைகள் உதவாக்கரைகளாக இருக்கும் விஷயத்தைக் கேட்டு, அவர் வீணாகக் கலைப்படுவார் என்று நினைத்தாள். ஆனால், அடிக்கடி தனது கணவனை அவள் எச்சரிக்கவும் தவறுவதில்லை.

''இப்போது உங்களுக்கும் வயதாகிவிட்டது. எதிர்காலத்தைப் பற்றியும் யோசியுங்கள். பிள்ளைகள் வளர்ந்துவிட்டார்கள். எதிர்காலம் எப்படி இருக்குமோ தெரியாது. கொஞ்சம் சேமித்து வையுங்கள்'' என்று அவள் சொல்லும்போதெல்லாம் சந்தன் சிரித்துவிட்டுச் சும்மா இருந்துவிடுவான்.

சந்தனுடைய நண்பர்கள் எப்போதாவது அவனைச் சந்திக்கும்போது ''நண்பா! நீ பெரிய பெரிய புள்ளிகளின் ஓவியங்களை வரைகின்றாய். நீ கெட்டிக்காரன். ஆனால், இன்றுவரை நீ உன்னுடைய படத்தை வரையவில்லை. அதனைக் கட்டாயம் வரைந்துவை. பிற்காலத்தில் பிள்ளைகள் அதைப் பார்த்து மகிழ்ச்சி அடைவார்கள். அது அனைவருக்கும் பெறுமதிமிக்க செல்வமாக இருக்கும்'' என்று சொல்வார்கள். இதனைக் கேட்டு சந்தன் சிரித்துவிட்டு, ''காலம் வரும்போது எல்லாம் தானாக நடக்கும்'' என்று சொல்லிவிடுவான்.

# தகப்பனாரின் ஓவியம்



ஒரியக் கதை

காலம் கழிந்துகொண்டு சென்றது. சந்தனுடைய மனைவி கவலையாலும், தீராத நோயாலும் இறந்துவிட்டாள். சந்தன் இதனையிட்டு மிகவும் கவலையடைந்தான். அவன் நோய்வாய்ப்பட்டான்.

ஒருநாள் சந்தன் தன்னுடைய மூன்று பிள்ளைகளையும் அழைத்து பின்வருமாறு சொன்னான் :

''பிள்ளைகளே! எனது இறுதி நேரம் வந்துவிட்டதாக எனக்குத் தெரிகிறது. நான் உங்களுக்கு நல்ல கல்வி அளிப்பதற்கு முடியுமான அளவு முயற்சி செய்தேன். எனது மரணத்துக்குப் பிறகு சகோதரர்களான நீங்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். உங்களுடைய நடத்தையையும், பரஸ்பர அன்பையும் மக்கள் உதாரணமாக எடுத்துக்காட்ட வேண்டும். எனவே, எனது சொத்தை உங்களில் ஒருவருடைய பெயருக்கு எழுத நான் தீர்மானித்திருக்கின்றேன். நான் மரணித்தபிறகு, உங்கள் விருப்பப்படி எதையும் செய்துகொள்ளலாம். இதனையிட்டு நன்கு யோசித்து ஒரு வாரத்துக்குள் எனக்குப் பதில் தாருங்கள்.''

ஒரு வாரத்துக்குப் பிறகு சந்தன் தன்னுடைய பிள்ளைகளை மறுபடி

**யாத்ராம் ரஸேந்திர**

அழைத்து, ''நீங்கள் என்ன முடிவெடுத்துள்ளீர்கள்?'' என்று கேட்டான்.

இளைய மகன் கோபத்தோடு சொன்னான் : ''எழுதுவதற்கு உங்களிடம் என்னதான் இருக்கிறது? ஒரு செல்லாக் காசு கூட இல்லையே. இருக்கும் ஒரு வீட்டையும் ஒருவருக்கே கொடுத்துவிட்டால் மற்றவர்கள் எங்கே இருப்பார்கள்? உங்களுடைய இறுதி விருப்பம் நிறைவேற நான் ஒருபோதும் அனுமதிக்கமாட்டேன். எல்லோருக்கும் சம பங்காகத் தந்தால்தான் நல்லது.'' மூத்தவன் இளையவனுடைய பேச்சை ஆமோதித்தவனாக, ''எங்கள் மூவருக்கும் சமமான பங்கு வேண்டும்'' என்று சொன்னான்.

சந்தன் அவர்களுக்கு எவ்வளவோ விளங்கப்படுத்தினான். ஆனால், மூவருமே பிடிவாதமாக நின்றுவிட்டார்கள். சில நாட்களுக்குப் பிறகு சந்தன் இறந்து போனான். பிள்ளைகள் தகப்பனது இறுதிக் கிரிகைகளைச் செய்துவிட்டு, தகப்பனாருடைய உயிலைத் தேடலானார்கள். ஒரு பெட்டிக்குள்ளிருந்து முத்திரையிடப்பட்ட பெரியதொரு பொட்டலம் கிடைத்தது.

அதைத் திறந்து பார்த்தபோது ஒரு கடிதமும் மூன்று துண்டுகளாகப் பட்ட தகப்பனாரின் படமும் கிடைத்தன. அக் கடிதத்தில் கீழ்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

''பிள்ளைகளே! இன்றுவரை நான் எனது ஓவியத்தைத் தீட்டவில்லை. பணம் சேர்த்து வைக்கவும் இல்லை. உங்களுடைய கல்விக்காகவும், தாயாரின் சிகிச்சைக்காகவும் வீட்டை அடகு வைத்திருக்கிறேன். நீங்கள் மகிழ்ச்சியான வாழ்வை வாழ்வதற்காக ஒரு சித்திரம் தீட்டியிருந்தேன். ஆனால், நீங்கள் பொறாமைக்காரர்களாகவும், சண்டைக்காரர்களாகவுமே இருந்தீர்கள். எனினும், நீங்கள் விரும்பியது போன்று என்னுடைய படத்தை மூன்று துண்டுகளாக்கி இருக்கிறேன். மூவரும் தத்தம் விருப்பப்படி ஒவ்வொரு துண்டை எடுத்துக்கொள்ளுங்கள். ஒரு சித்திரம் யாராவது ஒருவனுடைய பங்குக்கு வந்தால் நீங்கள் நிச்சயமாகவே மகிழ்ச்சியோடு வாழ்வீர்கள்.'' இறுதி வார்த்தைகளைப் படித்த மூன்று சகோதரர்களும் மிகவும் மனம் வருந்தினார்கள். தங்களுடைய தகப்பனாரின் மேன்மையை அவர்கள் உணர்ந்துகொண்டனர். மூன்று சகோதரர்களும் சேர்ந்து பாடுபட்டு அடகுவைக்கப்பட்டுள்ள வீட்டைத் திருப்புவதாகத் தீர்மானம் செய்துகொண்டனர்.

தமிழில் - ஸீயெம்மே

## 2 ஹாத்திம்தாய்

புத்தாக்கம் : கே. கான்




## இளஞ்சுடர்

தயாரிப்பு : நிலா



ம்... உசிரு போகும் போல இருக்கு .. இறங்குங்கடா.

## சிறுவர் கைவண்ணம்



ஜி. ஜனனி, தரம் 6 கிங்ஸ்ரன் சர்வதேச கல்லூரி, வெள்ளவத்தை



திவாஷினி, தரம் 9, கிங்ஸ்ரன் சர்வதேச கல்லூரி, முகத்துவாரம்.



கி. அக்ஷனன், தரம் 6, ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, திருகோணமலை

# மந்திரத்தீவு மந்தாகினி

**-இராமசாமி ரமேஷ்-**

(சென்றவாரத் தொடர்ச்சி...)

மந்தாகினியின் மந்திரக் கோட்டையினுள் பெரிய பாத்திரத்தில் நீரும், யாக குண்டத்தில் நெருப்புமாக அமர்ந்திருந்தாள். அவளின் வாயிலிருந்து "ஜெய்! தத்ரூ மகான்ய... தீ... காளி... ஜெய் மகாகாளி! ஹா... ரிதிரிதி... காளி..." என, வார்த்தைகள் ஒலித்தன.

சற்று நேரத்துக்குப் பிறகு -

"ஏய்... சண்டிகா! வா இங்கே..." அவளின் உரத்த குரல் கேட்டு, காவல் கடமையில் ஈடுபட்டிருந்த சண்டிகா பதறியடித்துக்கொண்டு வந்தாள்.

"தேவி அழைத்தீர்களா?"

"ஆமாம்... இன்று நிலவு வரும் நேரம்... நான் இந்தப் பவள நாட்டுக்கே ராணியாகி விடுவேன்... அத்தோடு மட்டுமா? இனி நான்தான் இங்கே கடவுள்... அனைவரும் என்னைத்தான் வணங்கவேண்டும்... நீ இப்போது என்ன செய்கிறாய் என்றால்... பெரிய தீக்கிடங்கை மூட்டி... தயார்படுத்து. குலோதரியிடமும் மாருதியிடமும் அந்தப் பிள்ளைகளைக் கடலில் நீராட்டி அழைத்துவரச் சொல்... சீக்கிரமாக வேலைகள் ஆகட்டும். அவர்களைக் கொண்டுவந்து... நான் தீக்கு முன்னால் இருப்பேன்... என் எதிரில் கட்டிவைத்து பூஜைக்கு ஏற்றவாறு தயார்படுத்து... சண்டிகா... நம் பெண்டிர்களைக் குளித்து அலங்கரித்துக்கொள்ளச் சொல்... நான் குளித்துவிட்டு வருகிறேன். சொன்னது புரிந்ததுதானே!" கட்டளையிட்டவள், எழுந்து எங்கோ போனாள்.

காட்டினுள்ளே...

அன்ரனி முன்னே நடக்க, பாத்திமாவும், மேரியும், கோபியும் பின்னால் வந்தார்கள். பயந்த சுபாவம் கொண்ட மேரி பாத்திமாவின் கரங்களைப் பிடித்துக்கொண்டே நடந்தாள். ஏதாவது அசைவுகள், ஒலிகள் கேட்கின்றனவா என நால்வரும் கூர்ந்து கவனித்துக்கொண்டே நகர்ந்தார்கள். மனித நடமாட்டம் எதுவும் தெரியவில்லை.

சிறிய பாதை ஒன்று நடுக் காட்டினுள் இருந்து கடற்கரையை நோக்கியவாறு சென்றுகொண்டிருந்தது. முன்னே நடந்த அன்ரனி, பின்னால் வந்தவர்களைச் சைகை செய்து நிறுத்தினான். பாத்திமாவை அருகில் அழைத்து காதோரம் ஏதோ கூறினான். அப்படியே நால்வரும் மரத்தின் பின் சென்று மறைந்து கொண்டனர். அப்போது தூரத்தே ஒரு ஒளி தோன்றி வந்துகொண்டிருந்தது. அவர்களுடைய இதயங்கள் வேகமாக அடித்துக்கொண்டன.

"கோபி! யாரோ நம்மைக் கண்டுவிட்டார்கள். தொலைஞ்சோம். அன்ரனி... எனக்குப் பயமாயிருக்கு..." மேரி, கோபியின் காதினுள் கூற, "ஏய் மேரி! உனக்குப் பைத்தியமா? இவ்வளவு தூரம் வந்தாச்சு... இனி வருவதை நாமதான் சமாளிக் கணும்... கொஞ்சம் பேசாமல் இரு!" பாத்திமா மேரியைக் கடிந்துகொண்டாள். இரண்டாகியிருந்த தீப்பிளம்புகளின் வெளிச்சத்தில் சில தலைகள் தெரியத் தொடங்கின.

அத்தோடு பேச்சுக் குரல்களும் கேட்டன. நால்வரும் காதைக் கூர்மையாக்கிக் கொண்டார்கள். கிட்ட நெருங்க நெருங்க, தீயின் வெளிச்சம் நன்கு பரவி, கூட வருபவர்களைக் காட்டிக்கொடுத்தது. முன்னால் மாருதியும், அவளின் பின்னால் வாய், கை கட்டப்பட்ட நிலையில் ஐந்து பிள்ளைகளும், அவர்களின் பின்னால் ஒரு தீப்பந்தத்தோடு குலோதரியும் வந்து கொண்டிருந்தார்கள்.

தம் நண்பர்களைக் கண்டதும், இந்த நால்வரின் விழிகளும் கூர்மை அடைந்தன.

"ஏன்டி மாருதி..., இந்தப் பசங்களை இனிக் காணமுடியாது... நம்ம மகாராணி எத்தனை வீரம் படைத்தவர்... அவரும் சண்டிகாவும்தானே அந்தக் குறிஞ்சித் தீவில் வித்தை காட்டுபவர்கள்போல நடித்து, இந்த ஐந்தையும் படகிலே கடத்தி வந்தார்கள்... இன்று நிலவு கிளம்ப முன் காளி தேவிக்கு இவர்களைக் பலி கொடுப்பார்... அதன்பின்னர் நம் மந்தாகினி தேவிதான் இந்தப் பவள நாட்டையே ஆளப்போகிறார்... எப்படித் தெரியுமா...? இவர்களைப் பலி கொடுத்து விட்டால் நம் தேவியின் கனவை மகாகாளி நிறைவேற்றி வைப்பாள். இனி நாங்களும் சுக போகமாக வாழலாம்..." இப்படி குலோதரி மகிழ்ச்சி பொங்க, மாருதியிடம் கூறிக்கொண்டு வந்தாள்.

"ஆமாம், குலோதரி! நீ சொல்வது முற்றிலும் உண்மை... ஆண்களுக்கு நிகராய் நம் தேவி திறமை கொண்டவரடி... சரிசரி! விரைவாக இவர்களை நீராட்டி வந்தால்தான், பூஜை சரியான நேரத்தில் நடக்கும்... ம்! நடவுங்கள் சீக்கிரமாய்!! மாருதி பிள்ளைகளை அதட்டினாள்.

இப்போது அவர்கள், இந் நால்வரும் இருக்கும் இடத்தைத் தாண்டி, கடலை நோக்கி நடந்து கொண்டிருந்தார்கள். வெளிச்சம் சிறிது சிறிதாகக் குறைந்தது. இவர்கள் நால்வரையும் தன் பின்னே வரும்படி சமிக்ஞை காட்டிவிட்டு, அன்ரனி நடக்கத் தொடங்கினான்.

அன்ரனிக்கும் மற்ற நால்வருக்கும் மந்தாகினியின் திட்டம் புரிந்தது

'அன்ரனி நாங்க தனிச்சு நின்னு இந்த கொடிய கூட்டத்தை அழிச்ச முடியாது ஆனால், நம்மட நண்பர்களை காப்பாத்தாமலும் விட முடியாது. நீ என்ன நினைக்கிறாய் அன்ரனி?" நடந்து கொண்டிருந்தவனிடம் மெதுவாய்க் கேட்டாள் பாத்திமா

(தொடரும்...)



## பன்னாட்டுப் பழமொழிகள்

ஆர்மினியா

1) எதுவும் தெரியாதவனுக்கு எந்தச் சந்தேகமும் இல்லை.

2) சத்தியத்துக்கு இன்னொரு பெயர் "மனச்சாட்சி."

3) பேசுகிறவன் விதைக்கிறான். கேட்பவன் அறுவடை செய்கிறான்.

4) தாயின் இதயம் பிள்ளையின் பள்ளிக்கூடம்.

5) நாக்கில் எலும்புகள் கிடையாது. ஆனால், அது எலும்புகளை நொறுக்கவல்லது.

எம்.ஐ.ஏ.இஃஜாஸ்,
தரம் - 9 D
கமு/ அல்-அஸ்றக் தே.பா.,
நிந்தவூர் - 19.

### முழுமைப்படுத்துங்கள்

துண்டு துண்டாக உள்ள படங்களைச் சரியாக ஒட்டி முழுமைப்படுத்துங்கள்.



## இளஞ்சுடர்

தயாரிப்பு : தினா

### பாட்டுக் கச்சேரி!



பாட்டுப் பாடினாள்
பாலாமணி!
தாளம் போட்டான்
தங்கமணி!
மிருதங்கம் அடித்தான்
ரங்கமணி!
'சூள்' கொட்டினாள்
சூடாமணி!

'அச்சு'த் தும்மினான்
பிச்சுமணி!
கொட்டாவி விட்டான்
கண்ணாமணி!
ஏப்பம் விட்டான்
சுப்பிரமணி!
கையைத் தட்டினாள்
காந்தாமணி!

எஸ். சத்தியமூர்த்தி

## தகவல் மஞ்சரி

* உலகிலேயே மிகப்பெரிய அளவில் கம்பியூட்டர் மற்றும் இன்ரநெற் பயிற்சியளிப்பதில் மலேசியா உலகசாதனை படைத்துள்ளது. இந்நாட்டின் தொலைத்தொடர்புத் துறை கோலாலம்பூரில் 2000 பேர்களுக்கு ஒரே இடத்தில் பயிற்சியளிக்கிறது. கின்னஸ் நிறுவனமும் இதை உலக சாதனையாக ஏற்றுக்கொண்டுள்ளது.

* இங்கிலாந்து அரசியான முதலாம் எலிஸபெத் (1533 - 1603) தான் முள் கரண்டியால் சாப்பிட்ட முதல் மனிதர்.

* கருவுறாத முட்டைகளை இடும் பிராணி குளவி.

* ஒரு மனிதன் தன் வாழ்நாளில் சராசரியாகக் குடிக்கும் தண்ணீரின் அளவு 60 ஆயிரம் லீட்டர்கள்.

* ஸ்னூக்கர் விளையாட்டு தோன்றிய இந்திய நகரம் ஜபல்பூர்.

* இந்தியாவில் ஜனாதிபதிகளை அதிகம் தந்த மாநிலம் ஆந்திரா.

* பசுவுக்கு நான்கு இரைப்பைகள் உண்டு.

* கண்களைக் கிழிருந்து மூடும் பறவை கோழி.

* பூமிக்குள் அமுக்கத்துக்குள்ளாகிய தூய காபன் படிவுகள்தான் வைரமாக மாறுகின்றன.

* 550 இறாத்தல் பாரமுள்ள ஒரு பொருளை ஒரு விநாடி நேரத்தில் ஓர் அடி உயரம் தூக்கக்கூடிய சக்தி எவ்வளவோ, அதற்கு ஒரு குதிரைச் சக்தி (Horse Power) என்று பெயர்.

-ஸ்ரீமாரன்-



# முள்ளிவாய்க்காலும் முள்ளுக்கம்பி வேலியும் 8

**முள்ளிவாய்க்கால்வரை தாம் பட்ட துன்பங்களையும், அதனுடன் முடிவுறாது தொடர்கின்ற முள்ளுக்கம்பிக் கூண்டுச் சுமைகளையும் மனதில் சுமந்தபடி பல லட்சம் பேர் உள்ளனர். அவர்கள் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு கதைகள் பொதிந்துள்ளன. அதை வெளிக்கொண்டுவர எல்லோராலும் முடிவதில்லை. இதனால் அவர்களது துன்பங்கள் அவர்களுக்குள்ளேயே மீண்டும் உறங்கிப் போகின்றன. இவற்றை வெளிக்கொணர வேண்டும் என்பதற்காக எழுதப்பட்டதுதான் 'முள்ளிவாய்க்காலும் முள்ளுக்கம்பி வேலியும்'. ஈழத் தமிழரின் வரலாற்றில் வேதனைகள், சோகங்கள், மரணங்கள், பிரிவுகள் நிறைந்த வன்னி மக்களின் நெருப்பாற்றுப் பயணம் வரலாற்றுப் பதிவுகளில் கறைபடிந்த அத்தியாயமாகிவிட்டது.**

நாம் தங்கி உள்ள முகாமிலிருந்து அழைத்துச் செல்லப்பட்டவர்களில் சிலர் திரும்பி வரவே மாட்டார்கள். அவர்களது உறவினர்களுக்குக் கிடைப்பதெல்லாம் ஒரு கடிதம். முற்கூட்டியே சிங்களத்தில் அச்சிடப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்ட படிவத்தில், பிடிக்கப்பட்டவரது பெயர் உட்பட மேலதிக விடயங்களுடன் கூடாரத்தில் தங்கியிருக்கும் போது பிடித்துச் செல்லப்பட்டவர்களில் இவர் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர் இவரைக் குறித்த முகாமில் தடுத்து வைத்துள்ளோம் என்ற விவரத்தையும் சிங்களத்தில் எழுதிக் கொடுத்துவிடுவார்கள்.

உறவினர்கள் அந்தக் கடிதத்துடன் மீண்டும் தமது கூடாரத்துக்குள் வந்து அமைதியாக அழுதுகொண்டிருக்க வேண்டியது தான். இப்படி நாளாந்தம் பல கூடாரங்கள் அழுதுகொண்டே இருக்கின்றன. இதைவிட பொலிஸ் பதிவு 12 வயதிற்கு மேற்பட்ட சகலரதும் வாழ்க்கை வரலாறுகளைக் கேட்டுப் புத்தகமாக எழுதிக் கொண்டே இருக்கின்றார்கள்.

இடையிடையே சிலர் வருவார்கள். கூடாரத்தின் முன் குடும்பமாக நிற்கச்சொல்லிப் படம் எடுப்பார்கள். இன்னும் சிலர் வருவார்கள். அடையாள அட்டைக்கு என்று சொல்லி படம் எடுத்துச் செல்வார்கள். பெருவிரல் பதிவும் எடுப்பார்கள். காத்திருக்கின்றோம் 'யுத்தம் ஒன்று சப்பித் துப்பிய எச்சங்கள்' இவர்களென அடையாளப் படுத்தும் அந்த அடையாள அட்டைக்கு.

குடும்பம் குடும்பமாகவும் தனியாகவுமென காணாமற்போவதும் இடம்பெறுகிறது. இவர்கள் எங்கே சென்றார்கள் இவர்களுக்கு என்ன நடந்தது என அறிய முற்படும்போது சில செய்திகள் உலா வரும். அதாவது சில லட்சம் ரூபாய்களை வாங்கி அவர்களை முள்ளுக்கம்பிக்கு வெளியே கொண்டுபோய் விட்டார்கள் என்று.

இதுதான் போரின் பிடியிலிருந்து தப்பி வந்த எங்களுக்குக் கிடைத்த சுதந்திரம்.

**நான்கு கூடாரங்கள் சொல்லும் கதைகள்**

போரின் பிடியிலிருந்து மீண்டு வந்தவர்களில் எங்களுடைய உறவுகளைத் தேடி ஒவ்வொரு கூடாரமாக எங்கள் பார்வையைச் செலுத்துகிறோம்.

**முதலாவது கூடாரத்தின் கதை**

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த ஒரு குடும்பம் அதிலிருந்தது. போர்ச்சூழலிருந்ததைவிட இன்னும் சோகமாகக் காட்சியளித்தார்கள்.

ஆம் அவர்கள் மாத்தளனூடாக ஒரு மாதத்துக்கு முதல் வந்தவர்கள். அவர்கள் வந்த நேரம் எதுவித அடிப்படை வசதிகளும் முகாமில் இருக்கவில்லை. குடிப்பதற்கு போதுமான நீர் கிடைக்கவில்லை. எனவே குளிப்பதென்பது எட்டாக் கனிபோல் 15 நாட்களுக்கு மேலாக குளிப்பில்லை. உடற்சோர்வு, தூக்கமின்மை, புழுவாகத் துடித்து அவர்கள் கண்முன்னேயே தாய் இறந்து போனார். அதுதான் அவர்களின் சோகத்துக்கான காரணம் என்பதை அறிந்துகொண்டேன்.

அவர்கள் நல்ல வசதியாகத்தான் புதுக்குடியிருப்பில் வாழ்ந்து வந்தார்கள். அந்தத் தாயுடைய பிள்ளைகள் மூன்றுபேர் வெளிநாட்டில் பல வருடங்களாக வசிக்கின்றார்கள். எல்லோரும் போதியளவு பணம் அனுப்புவார்

**-டொமினிக்-**

கள். இதனால் கஷ்டம் என்பது இவர்களுக்கு என்னவென்று தெரியாது. ஆனால் பிறர் கஷ்டங்களில் பங்கு கொண்டனர். அவர்களுக்கு உதவினார்கள். இந்தத் தாயார் வீட்டை அழகுபடுத்துவதிலும் பேரப்பிள்ளைகளுடன் கொஞ்சி விளையாடுவதிலும் தனது வாழ்க்கையை மகிழ்ச்சியாக நடத்திவந்தார். வயது 60 தொட்டாலும் இளமையாகவும் ஆரோக்கியமாகவும் இருந்தார். இடப்பெயர்வு அவர்களையும் மாத்தளன் வரை கொண்டு சென்றது. பின்னர் மெனிக்பாம் வந்தார்.

வந்த சில நாட்களின் பின் அந்தத் தாயார் தனது வெளிநாட்டில் உள்ள பிள்ளைகளுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். இடம்பெயர்ந்து வள்ளிப்புலத்திலிருக்கும்போது முற்றத்தில் விழுந்து வெடித்த எறிகணையில் வயிற்றிலும் கையிலும் படுகாயமடைந்து புதுக்குடியிருப்பு வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று சுகமடைந்ததையும், மேலும் தான் பட்ட துன்பங்களையும் பிள்ளைகளுடன் தொலைபேசியில் தெரிவித்தார்.

பிள்ளைகள் கேட்டதெல்லாம் ''அம்மா என்ன வேண்டுமென்று சொல்லுங்கோ-எத்தனை இலட்சம் வேண்டும்? முகாமை விட்டு வெளிவருவதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும். உங்களைப் போன்ற பெற்றோர்களையும், சகோதரங்களையும் நல்லாய் வைத்திருப்பதற்குத் தானே நாங்களும் எங்களைப் போன்ற பலரும் இவ்வளவு தூரதேசம் கடல் கடந்து வந்து இயந்திர வாழ்க்கை வாழ்ந்து இரவு-பகலாக உழைத்து நன்மை-தீமைகளில் கலந்துகொள்ள முடியாமல் சோகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். சொல்லுங்கள் அம்மா சொல்லுங்கள் என்ன வேண்டும்''

இந்தத் தாய் கேட்டதெல்லாம் ''தம்பி நான் நல்லாய் அள்ளி முழுக வேண்டும். பதினைந்து நாட்களாகக் குளிப்பு-முழுக்கு இல்லாமல் இருக்கிறேன். குளிக்க உதவி செய்ய முடியுமா?'' தம்பியிடமிருந்து பதில் இல்லை. மௌனம். தம்பி என்ன செய்வான். ஆனால் அந்தப் பிள்ளைக்குத் தெரியாது அதுதான் அம்மாவின் இறுதிப் பேச்சும், ஆசையும் என்று. அம்மா அதற்குப் பிறகு எழும்பவே இல்லை. அம்மா இறந்துவிட்டா. அந்தத் தாயினதும் தூரதேசம் சென்று உழைத்த பிள்ளைகளதும் கனவுகள் சிதறுண்டு போயிற்று.

இப்படித்தான் எத்தனையோ முதிய தாய்- தந்தையர்கள் இறந்துகொண்டிருக்கிறார்கள். முள்ளுக்கம்பி வேலி இவர்களின் ஆயுளைக் குறைத்துவிடுகிறது. இவ்வாறு பல சாவுகளைக் கொடுத்தபின் முதியோர்கள் (60 வயதிற்கு மேற்பட்டோர்) முள்வேலி தாண்டிச் செல்ல அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இருந்தும் பலர் தமது பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுடனேயே வாழ விரும்புவதால் பலர் இன்னும் முகாமினுள் பல கஷ்டங்களை அனுபவிப்பதைக் காணமுடிகிறது.

**இரண்டாவது கூடாரத்தின் கதை**

5 வயது ஆண்குழந்தை-குழந்தையின் அப்பாவின் வயது 45ஐத் தாண்டியிருந்தது. தலைமுடியும் நரைத்து விட்டது. கால் ஒன்றை தொடையுடன் இழந்திருந்தார். அவருடைய மனைவியைக் காணவில்லை. எங்கு என்று கேட்டபொழுது அவர் சொன்னது "நாங்கள் இங்கு வருவதற்கு 2 நாளுக்கு முதல் முள்ளிவாய்க்கா லில் ஷெல் விழுந்து காயப்பட்டாள். வைத்திய சாலைக்குச் சிலர் கொண்டு செல்லும் போது மீண்டும் ஷெல் விழுந்து இறந்து விட்டாள் என்ற செய்தி மட்டும் வந்தது. என்னால் எதுவும் செய்யமுடியாத நிலைமை.

என் பிள்ளை கவனம், நான் நினைத்த மாதிரியே அவனைப் பாதுகாத்து வளர்த்திடுங்கள் என்று காயமடைந்த போது என் மனைவி சொன்ன வார்த்தைக்கு அமைய என் பிள்ளையைப் பாதுகாப்பாக இங்கு கூட்டிவந்துவிட்டேன்'' - என்றார்.

கால் ஏலாத தகப்பனதும் அந்தப் பிஞ்சு உள்ளத்தினதும் எதிர்காலம் எவ்வாறு நகரப் போகிறது? ஏன் இவர்களுக்கு இந்த நிலை? என்ன பாவம் செய்தார்கள்? தாய்ப் பாசம் இன்றியும், தாயின் அரவணைப்பின்றியும் எத்தனை குழந்தைகள்? இப்படி விடை காணமுடியாத கேள்வியுடன் நகர்கிறேன்.

**மூன்றாவது கூடாரத்தின் கதை**

பிள்ளையைப் பெற்றெடுக்கும் இறுதி நாட்களை எண்ணிக்கொண்டு இருக்கிறாள் என்பதை அவரது பெருத்த வயிறு காட்டிக் கொடுத்து விடுகிறது. பிறக்க விருக்கின்ற முதற்பிள்ளையுடன் விளையாட அப்பா இல்லை. அவரும் முள்ளிவாய்க்காலில் இறந்துவிட்டார் என்ற செய்தி எனது காதோரம் வருகிறது. இதைவிட அவரிடம் வேறு வார்த்தைகள் இல்லை.

அந்த இளம் குடும்பத்தை கிளிநொச்சியில் இருந்தபோதே எனக்குத் தெரியும். இவர் கிளிநொச்சி அரச வங்கி ஒன்றில் பணி புரிந்து வந்தார். ஒரு பட்டதாரியும் ஆவார். இவரது கணவன் கிளி-கரடிப்போக்கு சந்தியில் இலத்திரனியல் திருத்தகம் ஒன்றை நடத்தி வந்தார். இவர் எந்த வகையான இலத்திரனியல் பொருட்களையும் திறமையாகக் கையாளக் கூடியவர். பழுதுபார்க்கும் திறமையும் இருந்ததால் இவர் பலர் மத்தியில் பிரபல்யம் பெற்றிருந்தார். குறிப்பாக வன்னியில் முதற்தர இலத்திரனியல் தொழில் நுட்ப அறிவாளியாக இருந்தார் என்று சொன்னால் அது மிகையாகாது. இவ்வாறான ஒரு திறமைசாலியை அவரது வாடிக்கையாளர்களும் இழந்துவிட்டார்கள் என்று அவரது மௌனம் சொல்லும் செய்திகளில் இதுவும் ஒன்று.

இப்படி எத்தனை பெறுமதி மிக்க உயிர்களை எமது தேசம் இழந்து நிற்கிறது. தேசத்திற்கும் - அந்தத் தாய்க்கும்-பிறக்கின்ற குழந்தைக்கும் நாம் என்ன கூறமுடியும். வார்த்தைகளின்றி நகர்கிறேன்.

(அவலங்கள் தொடரும்)

## யுத்தம் ஒன்று சப்பித் துப்பிய எச்சங்களாய் மிகுதி வாழ்க்கை



# சீக்கியர்களுக்கு ஒரு நீதி; தமிழர்களுக்கு ஒரு நீதியா?

''இந்திராகாந்தியைக் கொன்ற . சீக்கியரை பஞ்சாபில் தியாகியாகக் கொண்டாடுகிறார்கள். அதை எதிர்க்கத் துணிவில்லாத தமிழக காங்கிரஸார், ராஜீவ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு, 19 ஆண்டுகளாகச் சிறையில் இருக்கும் நளினி போன்றோரை விடுதலை செய்யக் கூடாது என்று சொல்கிறார்கள்.இப்படிச் சொல்ல அவர்களுக்கு எந்த அருகதையும் இல்லை'' - என்று புதிய சூட்டைக் கிளப்பியிருக்கிறார்கள் தமிழ்நாடு இளந்தமிழர் இயக்கத்தினர்.

இதுகுறித்து இளந்தமிழர் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் அருண்பாரதி செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-



ஆயுள் தண்டனை என்றால் 14 ஆண்டுகள் என்று கிரிமினல் நடைமுறைச் சட்டம் வரையறை செய்துள்ளது. இந்த வரையறையை மீறி, தமிழக அரசு 10 ஆண்டு காலம் தண்டனை அனுபவித்த எத்தனையோ ஆயுள் தண்டனைக் கைதிகளை, தலைவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு விடுதலை செய்துள்ளது. ஆனால், 19 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்தும் கூட, ராஜீவ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நளினி உள்ளிட்டோருக்கு இன்னும் விடுதலை கிடைக்கவில்லை. இதற்கு அரசியலைத் தவிர வேறு முறையான சட்டக் காரணங்கள் இருப்பதாகத் தெரியவில்லை.

நளினியின் மனமாற்றம், தாயின்றி வளரும் அவரது குழந்தை ஆகிய மனிதநேயக் காரணிகளை முன்வைத்து, அவரை விடுதலை செய்ய வேண்டும். அவரை மட்டுமின்றி பத்தாண்டுகளுக்கு மேல் சிறைத்தண்டனை அனுபவிப்பவர்களையும் விடுதலை செய்ய வேண்டும். சிறை, மனிதர்களை மன மாற்றத்துக்கு உள்ளாக்கி திருத்த வேண்டுமே தவிர, தண்டிப்பதற்கான சித்திரவதைக் கூடமாகிவிடக் கூடாது என்பதே எங்கள் இயக்கம் உள்ளிட்ட மனித உரிமை அமைப்புகளின் வேண்டுகோள்.

நளினியை விடுதலை செய்யக் கூடாது என்று சொல்ல தமிழக காங்கிரஸ் தலைவர்கள் யாருக்குமே அருகதை கிடையாது. சிறையில் உள்ளவர்களை விடுதலை செய்யக்கூடாது என்று சொல்ல இவர்கள் என்ன நீதிபதிகளா? நளினி விடுதலை குறித்த வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும் நிலையில், நளினியை விடுவிக்கக் கூடாது என்று ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் போன்றவர்கள் கூறுவது, நீதிமன்ற அவமதிப்பாகும்.


ராஜீவ் கொலை வழக்கில் தொடர்புடையவராகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் நளினிக்கு, அந்தக் கொலை நிகழ்த்தப்பட இருப்பது குறித்து பின்புதான் தெரியும்; தெரிந்த நிலையிலும் கூட அவரால் அதிலிருந்து விடுபட முடியாத சூழ்நிலை இருந்தது என்று நீதிபதி தோமஸ் அவ்வழக்கின் தீர்ப்பில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். இந்தத் தீர்ப்பை ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் உள்ளிட்ட காங்கிரஸ் புத்திசாலிகள் யாராவது ஒருமுறையாவது படித்திருப்பார்களா என்பது சந்தேகம்தான். ஆனால், நீதிபதியின் தீர்ப்பை அப்படியே புறம் தள்ளிவிட்டு, அந்தத் தீர்ப்பை அவமதிக்கும் விதமாக, நளினிதான் ராஜீவ் காந்தியைக் கொலை செய்தார் என்பது போல் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் போன்ற தமிழக காங்கிரஸ் தலைவர்கள் சித்திரிக்கிறார்கள்.

நளினியை தீவிரவாதி என்று, ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் தொடர்ந்து பேசி வருகிறார். நளினியா தீவிரவாதி? இந்திராகாந்தி கொலை செய்யப்பட்ட போது சீக்கியர்களைப் படுகொலை செய்து, சீக்கியப் பெண்களைப் பாலியல் பலாத்காரம் செய்த காங்கிரஸ்காரர்கள் தான் தீவிரவாதிகள், பயங்கரவாதிகள்! அந்தச் சம்பவத்தை ஒருமுறை முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி நியாயப்படுத்திக் கூட பேசியிருக்கிறார். கட்சிக்குள்ளேயே ஒற்றுமையைக் கடைப்பிடிக்கத் தெரியாமல் பதவி, பணத்துக்காக கோஷ்டிகள் அமைத்துச் சண்டையிடும் காங்கிரஸ்காரர்கள், தேச ஒற்றுமையைப் பற்றிப் பேசுவது கேலிக்கூத்து!

பல்கலை மாணவிகள் மூவரை உயிருடன் எரித்துக் கொன்றவர்கள், ரிமோட் குண்டு மூலம் சிவகங்கை தி.மு.க. நகராட்சித் தலைவர் முருகனைக் கொன்றவர்கள், முன்னாள் அமைச்சர் ஆலடி அருணா, தா.கிருட்டிணன் போன்றவர்களைப் படுகொலை செய்தவர்கள், மதுரை தினகரன் அலுவலகத்தை எரித்து அங்கிருந்த மூன்று ஊழியர்களைக் கொன்றவர்கள் எல்லாம் இன்று கட்சி மற்றும் அரசுப் பதவிகளில் அமர்ந்திருக்கிறார்கள்.. சிலர் சமூக அந்தஸ்துடன் உலா வருகிறார்கள். அப்படியிருக்க யாரைப் பார்த்து தீவிரவாதி என்கிறார், இளங்கோவன்?

காங்கிரஸ்காரர்கள் அன்னை என்று தங்கள் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடும் முன்னாள் பிரதமர் இந்திராகாந்தியை, அவரது பாதுகாவலர் பயாந்த் சிங் சுட்டுக். கொன்றார். அந்த பியாந்த் சிங்கை வீரத்தியாகி என்று போற்றி எழுதி, பஞ்சாபில் உள்ள சீக்கிய மதப்பீடமான பொற்கோயிலில் அவரது உருவப்படம் வைக்கப்பட்டுள்ளது. 1984 ஆம் ஆண்டு பொற்கோயில் தாக்கப்பட்ட சம்பவத்திற்குப் பழிவாங்கும் விதமாக, இந்திராகாந்தியைக் கொல்லும்போது உயிரிழந்த சீக்கிய வீரத்தியாகி, பியாந்த் சிங் என்று அந்தப் புகைப்படத்தின் கீழ் எழுதி வைத்திருக்கிறார்கள். பியாந்த் சிங் புகைப்படம் இந்த வாசகங்களுடன் பொற்கோயிலில் வைக்கப்பட்டிருக்கும் தகவல் எங்களுக்குக் கிடைத்ததும், எங்கள் இயக்கத் தோழர் ஒருவர் நேரில் சென்று பல தடைகளைத் தாண்டி அதைப் புகைப்படம் எடுத்து வந்திருக்கிறார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலையில் தொடர்புடையவர் என்கிற குற்றச் சாட்டுக்காக நளினியை வாழ்நாள் முழுவதும் சிறையில் வைத்திருக்க வேண்டும் என்று கூறுகிற ஈ.வி.கே. எஸ்.இளங்கோவன் போன்ற காங்கிரஸ்



தலைவர்கள் துணிவிருந்தால், சீக்கிய மதப் பீடத்தின் இந்தச் செயலைக் கண்டித்து பியாந்த் சிங்கின் புகைப் படத்தை நீக்கக் கோரி ஓர் அறிக்கையாவது விட முடியுமா? அதற்கான துணிச்சல் அவர்களுக்கு இருக்கிறதா? சீக்கியர்களிடம் சப்பாத்தால் அடிவாங்கியும் கூட, அவர்களுக்கு எதிராகப் பொங்காத இவர்கள், தமிழர்களுக்கு எதிராக மட்டும் குமுறுவது ஏன்? தமிழர்கள் என்றால் இளிச்சவாயர்களா? தமிழர்களின் தந்தை பெரியாரையே அவமதித்துப் பேசிவிட்டு இவர்கள் தமிழகத்தில் நடமாட முடியும் என்கிற நிலை இருக்கும் போது வேறு என்ன சொல்ல? - இப்படிக் கூறினார் அருண்பாரதி. ✱

---

# புனே தாக்குதல்!

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியா முன்வைத்த பேச்சுவார்த்தைக்கான நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளத் தயங்கிக் கொண்டிருந்த பாகிஸ்தான் ஆட்சியாளர்களை, ஜேம்ஸ் ஜோன்ஸ்தான் சமாதானப்படுத்தி உடன்படச் செய்தார் என்று தற்போது தெரியவந்துள்ளது. இந்தியாவும் பாகிஸ்தானும் சுமுகமான உறவைப் பேண வேண்டியது அமெரிக்காவுக்கு தேவை. ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவின் தலைமையிலான நேட்டோ படைகள் மேற்கொண்டிருக்கும் யுத்தம் குறிப்பிடத்தக்க வெற்றியை ஈட்ட வேண்டுமெனில், பாகிஸ்தானின் ஆதரவு அதற்கு அவசியம் என்பதை அமெரிக்கா நன்றாக உணர்ந்தே உள்ளது. அதனால்தான் பாகிஸ்தான் அரசை சமாதானப்படுத்த வேண்டிய தேவை அதற்கு ஏற்பட்டுள்ளது.

பாகிஸ்தானும் இந்தியாவும் அமைதியான முறையில் நல்லுறவோடு இருக்கும்போதுதான் ஆப்கானிஸ்தான் மீதான யுத்தத்தை முழு வீச்சில் நடத்த முடியும் என்பது அமெரிக்க ஆட்சியாளர்களுக்கு தெளிவாகத் தெரியும். ஆப்கானிஸ்தானில் எவ்வளவு விரைவாக யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர முடியுமோ... அவ்வளவு விரைவாக அதைச் செய்துவிட்டு அந்த வெற்றியைத் தமது நாட்டில் தனது அரசின் சாதனையாக முன்வைக்க வேண்டும் என்பதுதான் ஒபாமாவின் ஆசை. அதற்காகவே இவ்வளவு தூரம் அவர் சிரத்தை எடுத்துக் கொள்கிறார். தற்போது, ஆப்கானிஸ்தானில் உச்சகட்டப் போர் நடந்து வருகின்ற மார்ஜா பிரதேசம் என்பது தலிபான்களின் கோட்டையாகக் கருதப்படுகிற ஒன்று. அதுமட்டுமல்லாமல் தலிபான்களின் போதைப்பொருள் வர்த்தகத்துக்கு மையமான கேந்திரமாகவும் அந்தப் பகுதிதான் விளங்குகிறது. அதனால்தான் அப்பகுதியை தலிபான்களின் பிடியிலிருந்து மீட்பதற்கு இறுதிக்கட்ட தாக்குதலை அமெரிக்கத் தலைமையிலான படைகள் தற்போது நடத்தி வருகின்றன. நேரடியாக நடத்தப்படும் இந்த யுத்தத்துக்கும் ஆப்கானிஸ்தானில் ஆளில்லாத விமானங்கள் மூலம் அமெரிக்க நடத்தி வரும் மறைமுகமான யுத்தத்துக்கும் பாகிஸ்தான் அரசின் ஆதரவு இருந்தாக வேண்டும் என்ற நிலையிலே ஜேம்ஸ் ஜோன்ஸ் பாகிஸ்தானுக்கு வந்திருக்கிறார்.

ஆப்கானைச் சுற்றியுள்ள பிராந்தி



யத்தை அமைதியாக வைத்துக்கொண்டு மொத்த கவனத்தையும் ஆப்கான் யுத்தத்தின்மீது குவிக்க வேண்டும் என்று அமெரிக்கா விரும்புகிறது என்றால், தீவிரவாதிகளோ அதற்கு நேரெதிராகத் திட்டமிடுகிறார்கள். தமது எதிரியின் கவனத்தை சிதறடித்துப் பல்வேறு யுத்த முனைகளைத் திறக்க அவர்கள் விரும்புகிறார்கள். இது அமெரிக்காவின் போர்த் தந்திரத்துக்கு எதிரான தீவிரவாதிகளின் யுக்தியாகும். இதற்காகவே இந்திய- பாகிஸ்தான் நாடுகளுக்கிடையில் பதற்றத்தை ஏற்படுத்த அவர்கள் விரும்புகின்றனர். அதன்மூலம் பாகிஸ்தான் ராணுவத்தின் கவனத்தை இந்தியாவை நோக்கித் திருப்பிவிட்டு தம் மீதான தாக்குதலின் கடுமையைக் குறைத்துக் கொள்ளத் திட்டமிடுகிறார்கள்.

பாகிஸ்தான் துருப்புகள் இந்திய எல்லையை கவனித்துக் கொண்டிருந்தால் அமெரிக்காவின் யுத்தத்துக்கு அவை முழு அளவில் பயன்பட வாய்ப்பிருக்காது என்பதை உணர்ந்துதான் தீவிரவாதிகள் தமது எதிர் நடவடிக்கைகளை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தத் தாக்குதல்களின் பின்னணியும், காரணமும் எதுவாக இருந்தபோதிலும், இது ஏற்படுத்துகின்ற பாதிப்பு என்ன என்பதையே நாம் முதன்மையாக கவனிக்க வேண்டும். முகமற்ற தீவிரவாதத் தாக்குதல்கள் உடனடியாக பொது மக்களிடையே அச்சத்தை உருவாக்குகின்றன. பயம் தான் மனிதனுக்கு தோன்றிய முதல் உணர்வு என பைபிள் வர்ணிக்கிறது. விலக்கப்பட்ட கனியைப் புசித்ததற்குப் பிறகு ஆதமுக்கு ஏற்பட்ட உணர்வு பயம்தான். தனி மனிதர்களுக்கு ஏற்படும் பயம் அவர்கள் அளவில் தான் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. ஆனால், அரசியல் ரீதியாக உருவாக்கப்படும் அச்சம் பல்வேறு கொள்கை சார்ந்த நடவடிக்கைகளுக்கு அடித்தளமாக அமைந்து விடுகிறது. அச்சம் என்பது சுதந்திரத்துக்கு எதிரான ஒன்று. பயத்தால் பீடிக்கப்பட்ட மனம், விடுதலை பெற்றதாக இருக்க முடியாது. இதை உணர்ந்ததால் தான் தமது குடிமக்களை அடக்கி ஆள பயம் என்ற உணர்வை ஆட்சியாளர்கள் ஒரு கருவியாக எப்போதும் பயன்படுத்தி வருகிறார்கள். இராணுவம், பொலீஸ் முதலான ஒடுக்குமுறை கருவிகளைக் கொண்டு இந்த அச்சத்தை அவர்கள் தமது குடிமக்களிடம் உருவாக்குகிறார்கள். எந்த அளவுக்கு குடிமக்கள் அச்சுறுத்தப்படுகிறார்களோ அந்த அளவுக்கு அவர்கள் சட்டத்தின் ஆட்சியை ஏற்றுக்கொள்பவர்களாக, அதற்கு அடங்கி நடப்பவர்களாக மாறுகிறார்கள். ஆனால், தீவிரவாதிகள் ஏற்படுத்த நினைக்கும் அச்சம் சட்டத்துக்கு அடங்கி நடக்கும் குடிமக்களை உருவாக்குவது அல்ல. மாறாக, அவர்கள் சட்டத்தின் ஆட்சியை சீர்குலைக்கவே அச்சத்தை விதைக்கிறார்கள். ஒருபுறம் அடங்கி நடக்கும் குடிமக்களை உருவாக்கப் பயன்படும் அச்சம். மறுபுறம் கட்டுப்பாடற்ற வெறி கொண்ட கூட்டத்தை உருவாக்கவும் பயன்படுகிறது. அதிகப்படியான அச்சம் மனிதர்களை நிலைகுலையச் செய்து தமது உயிரைக் காப்பாற்றிக் கொண்டால் போதும், அதற்காக எதையும் செய்யலாம் என்ற சூழலுக்கு அவர்களைத் தள்ளுகிறது. இப்படியான நிலையில் தனது பாதுகாப்புக்காக அதுவரை அரசாங்கத்தையே நம்பியிருந்த மக்கள், தான் நம்பியிருந்த அரசு தம்மைப் பாதுகாக்கத் திறனற்றது என உணரும்போது இனிமேலும் அதற்கு அடிபணிந்திருக்கத் தேவையில்லை என்ற நிலைக்கு வருகிறார்கள். அது ஒரு சமூகக் குழப்பத்தை உருவாக்குவதில்போய் முடிகிறது. இந்த நிலைதான் தீவிரவாதி கள் விரும்புகிற சூழ்நிலையாகும். அதற்காகத் தான் எவ்வித தர்க்கமும் இல்லாமல் அவர்கள் தாக்குதல் நடத்துகிறார்கள்.

புனேயில் நடத்தப்பட்டுள்ள தாக்குதல் தீவிரவாதிகள் விரும்பியது போன்ற சமூகக் குழப்பத்தை ஏற்படுத்தாமல் இருக்கவேண்டுமெனில், குடிமக்களிடையே அச்சத்தை அதிகரிக்கும் காரியத்தை அரசு செய்யாமல் இருக்க வேண்டும். சமூக அமைதியைப் பாதுகாத்து மக்களிடையே சுதந்திர உணர்வை அதிகரிக்க வேண்டும். ஆனால், இந்திய மத்திய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளோ இதற்கு நேரெதிரான திசையில் அது பயணம் செய்ய விரும்புகிறது என்பதையே சொல்வதாக இருக்கிறது.

இதுவே தொடர்ந்தால் இந்தியாவை யார்தான் காப்பாற்ற முடியும்?

நன்றி - விகடன்.



# மன்னிப்பு கேட்டார் ரம்பா

கலைஞர் டிவியின் 'மானாட மயிலாட' பாகம் 4 ற்கான இறுதிப் போட்டி சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் நடந்தது. இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட நடிகை ரம்பா மேடையேறி ரசிகர்களிடம் பகிரங்க மன்னிப்பு கோரினார். ரம்பாவுக்கு திருமணம் நிச்சயிக்கப் பட்டு விட்டதால் அவரை தங்கள் மனதில் கனவுக்கன்னியாக வைத்திருந்த ரசிகர்கள் அத்தனை பேரும் மனம் உடைந்து விட்டதாக குறிப்பிட்ட ரம்பா, ''என் திருமண அறிவிப்பின் மூலம் உங்கள் இதயங்களை சுக்குநூறாக உடைத்து விட்டதற்காக மன்னிப்பு கோருகிறேன்'' என்றார்.

நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கிய சிம்பு வெற்றிபெற்ற ஜோடிகளுக்கு பரிசுகளை வழங்கினார். முதல் பரிசு ரூ. 10 லட்சத்தை கோகுல் - நீபா ஜோடியும், இரண்டாம் பரிசு ரூ. 5 லட்சத்தை நிவாஸ் - கிருத்திகா ஜோடியும், மூன்றும் பரிசு ரூ. 3 லட்சத்தை லோகேஷ் - ஸ்வேதா ஜோடியும் தட்டிச்சென்றனர். ரகுமான் - நிகிஷா ஜோடிக்கு ஆறுதல் பரிசாக எல்.சி.டி. டிவி வழங்கப்பட்டது.

'மானாட மயிலாட' பாகம் - 4 முடிவடைந்ததைத் தொடர்ந்து பாகம் - 5 தொடக்கவிழாவுக்கான ஏற்பாடுகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.





# இன்னொரு அவதாரம்



சனிக்கிழமை தோறும் இரவு 10 மணிக்கு சன் டி.வியில் ஒளிபரப்பாகும் 'அசத்தப் போவது யாரு' நிகழ்ச்சியில் கடந்த வாரமும் டைரக்டர் கே.எஸ்.ரவிகுமாரே தலைமை விருந்தினராக வந்திருந்தார். இந்த நிகழ்ச்சியின்போது கலையில் அவருக்குள்ளான இன்னொரு முகமும் வெளிப்பட்டது. ஏற்கனவே பாடும் ஆற்றலை தனக்குள் கொண்டிருந்த இவர், பிரபல பாடகர் சி.எஸ்.ஜெயராமன் பாடிய 'வண்ணத் தமிழ்ப் பெண்ணொருத்தி என் எதிரில் வந்தாள்' பாடலைப் பாடினார். இதில் ஆச்சரியமான விஷயம், இந்தப் பாடலினூடே பெண் குரலில் வரும் ஹம்மிங்கையும் அவரே பெண் பாடகி குரலில் பாடுவது தான்.



# ஜோடி நம்பர் வன் - 4

விஜய் டிவியின் ஜோடி நம்பர் ஒன் சீசன் - 4 நிகழ்ச்சியில் வாரம் ஒரு சர்வதேச நடனக்கலை, உள்ளிட்ட பல புதிய நடனங்கள் இளம் ஜோடிகளால் அரங்கேற்றப்பட்டன. மேலும் வாரம் ஒரு எலிமினேஷன், வைல்ட் கார்ட் சுற்று, புதிய நடனவகை சுற்றுகள் இதில் இடம் பெற உள்ளன.

இந்த நான்காம் சீசனின் முக்கிய சுற்றுக்கள் மற்றும் இறுதிச் சுற்று தமிழகத்தின் முக்கிய நகரங்களில் மக்கள் முன்னிலையில் நடைபெற உள்ளன. நட்சத்திர நடனங்களைத் தொடர்ந்து மக்களின் நேரடி வாக்கெடுப்பு முறையில் இந்த ஜோடிகள் தேர்வு நடைபெறும்.

மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் மாசி மகோற்சவ உற்சவத்தை முன்னிட்டு இன்று 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அம்பாள் தேவஸ்தான கல்யாணமண்டபத்தில் சென்னை பேராசிரியர் சி.வி. சந்திரசேகரின் மாணவி கலாவித்தகர் செல்வி திவ்யா சிவநேசனின் 'ரஸப்பிரவாகம்' நடனநிகழ்வுஇடம்பெறவுள்ளது.







# நாட்டுப்புற இசையால் வளர்ச்சி பெற்ற இளையராஜா

'நாட்டுப்புற இசையின் அரசன்' என்று புகழ் பெற்ற இசைமேதை இளையராஜா இந்திய சினிமாவின் இசையமைப்பாளராகப் பல தசாப்தங்களாகப் பணியாற்றிவருகின்றார். கிராமிய இசையுடன் மேற்கத்திய செவ்வியல் இசையைக் கலந்து இளையராஜா உருவாக்கிய திரைப்படப்பாடல்கள் அவரைத் தமிழ்ச் சினிமா இசையின் முடிசூடா மன்னனாக்கியது. எழுபதுகளின் இறுதியிலிருந்து தொண்ணூறுகளின் தொடக்கம் வரை ஐம்பத்தாறு படங்களுக்கு இசையமைத்து வரலாறு படைத்தார்.

தமிழ்ச் சினிமாவில் மட்டுமல்ல மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஹிந்தி சினிமாப்படப் பாடல்களுக்கும் இசையமைத்துப் புகழ்பெற்றவர். திரைப்பாடல்களின் பின்னணி இசையை ஒரு மறுமலர்ச்சிக்கு உட்படுத்தி, அத்தகைய இசையின் வாயிலாக இசை ரசிகர்களை வசப்படுத்தி வெற்றியும் கண்டவர். அபாரமான படைப்பூக்கத்தால் புதிய சோதனை முயற்சிகளை மேற்கொண்டு தரமான பல பாடல்களை உருவாக்கி மக்கள் மனங்களில் இடம்பிடித்தார்.

தமிழ்நாடு-தேனி மாவட்டத்தின் ஒரு கிராமத்தில் மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் இளையராஜா பிறந்தார். பள்ளிப்படிப்பை எட்டாம் வகுப்புடன் நிறுத்திக்கொண்டு விவசாய நிலங்களில் தினக்கூலியாக வேலைசெய்தார். இக்காலப்பகுதியில் நாட்டுப்புற இசைமேல் ஆர்வம் கொண்டு அவற்றைக் கேட்டுக் கற்றுக்கொண்டார். அதேவேளை அவற்றின் நுட்பங்களையும் அவதானித்து அதன்பால் தமது ஈடுபாட்டைக் காட்டலானார். இவருடைய தாயாரும் நாட்டுப் புறபாடல்களின் பொக்கிஷமாக இருந்தமையும் இவரின் நோக்கத்திற்கு உறுதுணை அளித்தன. சிறுவயதிலிருந்தே கேட்டறிந்த கிராமியப் பாடல்களை வைத்துத்தான் நுட்பமான இசையுணர்வை ஏற்படுத்திக் கொண்டார். பல்வகைப்பட்ட நாட்டுப்புற இசைவடிவங்களையும், கிராமிய இசையின் உயிரோட்டமான உணர்ச்சிகளையும் மக்கள் மனங்களில் பதியவைத்த முதல் இந்திய திரையிசையமைப்பாளர் ராசையா என்ற இயற்பெயர் கொண்ட இளையாராஜாவேதான்.

நாட்டுப்புற இசைதான் மிகத்தூய்மையானதும் உணர்ச்சிகரமானதுமான வடிவம். அதுவே ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட ஏழை மக்களின் இசை. நாட்டுப்புற இசை மரபில் தமிழ்நாடு மிகச் செழுமையான இடத்தில் தான் இருக்கிறது. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளின் கலாசார வேற்றுமைகள் ஒவ்வொன்றும் பல்வேறு நாட்டுப்புற




இசைவடிவங்களைக் கொண்டிருக்கின்றன. அவ்வ கிராமிய வாழ்க்கையின் உணர்ச்சிகளையும், ஆசைகளையும் பிரதிபலிக்கும் இசையாகத் திகழ்கின்றன. அது மட்டுமன்றி வெவ்வேறு கிராமங்களின் சிறப்பியல்புகளையும் இனிமைகளையும் வெளிப்படுத்துகின்றன. இயல்பும், ஆற்றலும், ஊக்கமும் நிறைந்த மனித உணர்வெழுச்சிகள் இத்தகைய கிராமிய இசையின் தனித்துவமான வெளிப்பாட்டிலே எம்மால் கேட்கமுடியும்.

பிறப்பு, பூப்படைதல், நிச்சயதார்த்தம், திருமணம், இறப்பு என கிராம வாழ்வின் ஒவ்வொரு பருவத்துக்குமான நாட்டுப்புற இசைவெளிப்பாடுகள் காலாகாலமாக இருந்து வருகின்றன. விவசாயத்தைப் பொறுத்தளவில் உழுதல், விதைத்தல், நாற்று நடுதல், களை பிடுங்கல், மற்றும் அறுவடைக் காலங்களில் நாட்டார் பாடல்களை இசைத்துக் கொண்டே தமது தொழிலை மேற்கொள்ளுவார்கள். கோயில் திருவிழாக்கள், பண்டிகைகள் என்பவற்றில் எல்லாம் நாட்டார் இசைதான் ஓங்கி ஒலிக்கும். கிராமப்புற மக்கள் தங்களின் நம்பிக்கைகள், எதிர்பார்ப்புக்கள், அச்சங்கள், கொண்டாட்டங்கள் போன்றவற்றை எதிர்கொள்ளும் வேளைகளில் தத்தமது மனநிலைக்கேற்ப பாடல்களைப் பாடுவார்கள்.

கிராமங்களிலும், வனங்களிலும் பரவலாகக் கிடைக்கக்கூடிய மரம், மூங்கில், விலங்குத் தோல், சுரைக் குடுவை, மண்பானை போன்றவற்றின் மூலம் தத்தமது இசைக்கருவிகளை அவர்களே உருவாக்கிக் கொள்கின்றார்கள்.

கிராமங்களில் சுற்றித்திரிந்த காலங்களில் மூங்கிலில் சொந்தமாக புல்லாங்குழல்களைச் செய்து அதில் வாசித்துப் பழகியதாகவும், அதை வாசிப்பவராக தான் இருந்ததாகவும் இளையராஜாவே பதிவுசெய்து வைதிருந்தாராம் என அறிய முடிகிறது.



நாட்டுப்புற இசை கிராமங்களில் எவராலும் பயிற்றுவிக்கப்படுவதல்ல. கற்றுக்கொள்ள மாணவர்களோ கற்றுக்கொடுக்க ஆசிரியர்களோ அங்கில்லை. அவர்களின் ஏழ்மை இத்தகைய வசதிகளை வழங்( வதில்லை. செல்வந்தர்களின் விவசாய நிலங்களில் அன்றாடம் உழைத்தோ, தங்களின் சிறிய நிலத்தில் கஷ்டப்பட்டு விவசாயம் செய்தோ அல்லது வேறு சில கூலி வேலைகள் செய்தோ வாழ்வை ஓட்டவேண்டிய நிலையிலுள்ள ஏழைமக்கள் தான் நாட்டுப்புற இசைக் கலைஞர்களாக இருக்கிறார்கள். இத்தகைய பின்புலத்திலிருந்து தான் இளையராஜா முகிழ்ந்தெழுகின்றார்.

நாட்டுப்புற இசையைப் போலவே மேற்கத்திய இசையை நோக்கிய தேடலும் சிறுவ்யதிலிருந்தே இளையராஜாவிடம் முனைப்புப் பெற்றிருந்தது. மேற்கத்திய செவ்வியல் இசை அடிப்படையில் அமைந்த பல கிறிஸ்துவப் பாடல்களைக் கேட்டுவந்த அவருக்கு அதன் வடிவத்தைப் புரிந்துகொள்ள ஒரு வாய்ப்பாக அமைந்தது கிறிஸ்தவ தேவாலய நிகழ்ச்சிகள்.

சென்னையில் இசையாசிரியர் தன்ராஜ் மாஸ்டர் மேற்கத்திய இசையின் நுட்பமான வேறுபாடுகளையும், சிக்கலான விடயங்களையும் இளையராஜாவுக்குப் பயிற்றுவித்தார். கிற்றார் இசையிலும் பியானோ இசையிலும் சிறப்புத்தேர்ச்சி பெற்றவராக இளையராஜா விளங்கினார்.

தாம் இசையமைக்கும் பாடல்களில் பியானோ, கிற்றார் மற்றும் வயலின் குழுவினரை அவர் செயற்படுத்தும் விதம் மேற்கத்திய செவ்வியல் இசையிலும் அவருக்கிருந்த ஆழ்ந்த புரிதலுக்கும் புலமைக்கும் சான்றாக இருக்கின்றது. சலீல் சௌதுரி, ஜீ.கே.வெங்கடேஷ் ஆகிய இசையமைப்பாளர்களுடன் உதவியாளராகப் பணியாற்றிய அனுபவம், படைப்புச் சுதந்திரம் அவரை முக்கியமான இசையமைப்பாளராக உருவாக்க உதவியது. நாட்டுப்புற, மேற்கத்திய இசைக்கூட்டுடன் கர்நாடகச் செவ்வியல் ராகங்களையும் தமது பாடல்களில் பெருமளவு சேர்த்துக்கொண்டார்.

சாதாரண இசை ரசிகரும் விரும்பிக் கேட்கும் வண்ணம் கடினம் மிக்க ராகங்களையும் காதுக்கினிய வகையில் வழங்கி வந்துள்ளார்.


இசைஞானி இளையராஜா முதன் முதலாக இசையமைத்த திரைப்படம் 'அன்னக்கிளி'. இப்படத்தில் இடம்பெற்ற 'அன்னக்கிளி உன்னைத் தேடுதே', 'மச்சானைப் பார்த்தீங்களா', 'சொந்தம் இல்லை பந்தம் இல்லை' ஆகிய பாடல்கள் பெரும் வரவேற்பைப் பெற்றன. 'பத்ரகாளி' படத்தில் இடம்பெற்ற 'கண்ணன் ஒரு கைக்குழந்தை', 'ஒத்த ரூபா உனக்கு தாரேன்' என்னும் பாடல்கள் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளன. மற்றும் 'பாலூட்டி வளர்த்த கிளி' என்னும் படத்தில் வரும் 'நான் பேச வந்தேன்' என்னும் பாடலும், 'உறவாடும் நெஞ்சம்' என்னும் படத்தில் 'ஒரு நாள் உன்னோடு ஒருநாள்' என்னும் பாடலும்....... நாட்டுப்புற துள்ளிசை, மனதை வருடும் மெல்லிசை, தரத்திலும் வசூலிலும் மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளன.

சினிமாவுக்கு இசையமைக்கத் தொடங்கிய முதல் ஆண்டிலேயே அதாவது 1976 ஆம் ஆண்டு நான்கு படங்களுக்கு இசையமைத்தவர் இளையராஜா. தொடர்ந்து பதினைந்து ஆண்டுகளில் சராசரியாக ஒரு நாளைக்கு மூன்று புதிய பாடல்கள் என்ற கணக்கில் பாடல்களை உருவாக்கிக் கொண்டிருந்தார் இளையராஜா என்று சொல்லப்பட்டது.

''குறிப்பிட்ட அலை நீளத்தில் ஒலிக்கும் வெவ்வேறு சப்தங்களின் சேர்க்கை சிறந்த இசையாகிவிடவும் முடியாது. இசையென்பது உள்ளத்தால் உணர்ந்து கொள்ளப்படும் ஒரு உணர்வுதான். அந்த மகத்தான கலையை ஒருவன் பணிவோடும், நேசத்தோடும், திறந்த மனதோடுமே அணுகவேண்டும்'' என்று கூறியுள்ள இசைஞானி இளையராஜா சுமார் 4500க்கு மேற்பட்ட பாடல்களுக்கு இசையமைத்துள்ளார்.

தென்னிந்திய திரையிசையில் இயன்றளவும் தாக்கம் செலுத்தும் இசையமைப்பாளரில் ஒருவராக இருக்கின்றார். சில படங்களில் சொந்தக் குரலில் பாடல்களைத் தந்தவர் இளையராஜா. அவ்வப்போது சில படங்கள் மூலம் தமிழிலும் மலையாளத்திலும் அவரது இசைப்பயணம் இன்றும் தொடர்கிறது. ★

# பெண்களின் அழுகைக்கு காரணம் யார்?



பெண்களின் ஆயுதமே அழுகை. ஆனால், அந்த அழுகைக்குக் காரணம் யார்? பெண்களை அடித்தாலோ அல்லது கடினமான வார்த்தைகளால் அவர் களைத் திட்டினாலோ அவர்களின் ஒரே ஆயுதம் அழுகை என்பது தான் நம் எல்லோரின் நினைப்பு. ஆனால் அந்த அழுகைக்குக் காரணம் யார் என அலசி ஆராய்ந்து பார்த்ததில் முதலிடம் வகிப்பது ஆண்களே.

லண்டனில் கண் பாதுகாப்பு நிறுவனம் ஒன்றின் சார்பல் சுமார் இரண்டாயிரம் ஆண், பெண்களிடம் (அழுகை வரும் அளவுக்கு) ஆய்வு நடத்தப்பட்டது. அதில் தங்களை அழ விடுவதில் ஆண்கள் முதலிடம் வகிப்பதாக 4 இல் 1 பெண் தெரிவித்தார். அதிலும், ஒருவர்கூட தனது அப்பா, அம்மாவை காரணமாக கூறவில்லை!

ஆய்வில் பங்கேற்ற அனைத்துப் பெண்களின் ஏகோபித்த குற்றச் சாட்டு.... கணவன் அல்லது காதலன் மீதுதான். மனைவியையோ, காதலியையோ.... அழ விட்டுப் பார்ப்பதில் ஆணுக்கு தனி ஆர்வம் இருப்பதாக வெடித்தனர் பெண்கள்.

ஆய்வின்படி, தமது மனைவி, காதலியை மட்டுமின்றி தாயைக் கூட அழவிடும் ஆண்கள் 63 சதவிகிதம் என்று தெரிய வந்தது. இப்படிச் செய்யும் ஆண்கள் தப்பி விட முடியுமா என்ன...? அவர்கள் ஆபீசில் பாஸ் கடிக்கும் போதும், வேலை சுமை ஏறும் போதும் மனம் உடைந்து போய் அழுகின்றனர்.

அழுவது சோகமானதுதான் என்றா லும், கண்ணீர் விடுவது கண்களுக்கு நல்லது என்கிறார் ஆய்வு நடத்திய டாக்டர் சாரா ப்ரூவர். நவீன உலகில் பெரும்பாலான நேரத்தை கம்ப்யூட்டர் முன் கழிக்கிறோம். அதனால், கண்கள் காய்ந்து ஈரத்தன்மையை இழக்கின்றன. கண்ணீர் வெளியானால் கண்கள் சுத்த மாகும் என்றும் கூறுகிறார் அவர்.

★★★

## சாதி இரண்டொ....

(27ஆம் பக்க தொடர்ச்சி...)

நாட்கள் நகரவும் அவர்களின் நட்பில் இறுக்கம் கூடியது. அந்த இறுக்கம் தான் பலருக்கும் அவர்கள் மீது சந்தேகத்தை ஏற்படுத்தி விட்டது. சக மாணவர்களின் மனம் பொறாமை யில் வெந்தது. ஆதவனிடம் மட்டும் அவள் பேசுவது அவர்கள் ஒருக்கும் பிடிக்கவில்லை. இது அவளுக்கும் தெரி யும். அனால், அதை எப்படி ஆதவனிடம் சொல்ல முடியும். அதற்காகத் தங்களிருவரையும் இப்படித் தவறாக இணைத்துப் பேசுவார்களென்று அவள் சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

எவ்வளவு இரக்கமில்லாத நெஞ்சங்கள்? அவனோட இவள் கதைக்கிறதால ஆருக்கென்ன வந்தது? நட்போட பழகிறதுக்கும் சாதி பார்க்கிற சனங்கள் ''சாதி இரண்டொழிய வேறில்லை'' எண்டு பாடின ஔவையார் சாகேக்க அவற்ற பாட்டும் சேர்ந்து செத்திட்டுதோ என்னவோ? விஞ்ஞானம் தான் வளர்ந்துதே ஒழிய மனிசன்ர மூளை மட்டும் வளரேல்ல. நவநாகரிகம் முத்திப் போன பிறகும் குலம் கோத்திரம் சாதி சம்பிரதாயமென்று அலையுதுகள் மனிச மிருகங்கள். நினைக்க நினைக்க மனம் பற்றி எரிந்தது அவளுக்கு.

மறுநாள் தமிழ் விரிவுரை முடிந்ததும் உணவு இடைவேளைக் காக எல்லோரும் வெளியில் சென்றுவிட இவள் மட்டும் விரிவுரை மண்டபத்திலேயே இருந்தாள் பின்னால் யாரோ இருப்பதைப் போலுணர்ந்து சட்டென்று திரும்பினாள்- அங்கே அமைதியாய் உட்கார்ந்திருந்தான் ஆதவன். முதல் நாள் காலையில் அண்ணன் சொன்னது நினைவுக்கு வரவும், அவசரமாய் வெளியேறப் போனவளை இடைமறித் தான் ஆதவன். ''இங்க பார் தமிழ், நீ எனக்கு ஒரு பிரச்சினையும் சொல்லாட்டியும் எனக்கு எல்லாம் தெரியும். என்னால உனக்கு ஒரு பிரச்சினையும் வேண்டாம். நான் உன்னோட கதைக்கிறது ஒருத்தருக்கும் பிடிக்கேல்ல. எங்கட நட்பு ஒருத்தருக்கும் இடைஞ்சலா இருக்கக் கூடாது. நீ இனி பழைய தமிழரசியாவே இருக்கலாம். என்னால இனி ஒரு தொந்தரவும் வராது. நீயும் நானும் இனிக் கதைக்க முடியாமல் போனாலும் எங்கட நட்பின்ர பசுமை யான ஞாபகங்கள் எங்களோட இருக் கிற வரைக்கும் எங்கட நட்பு எண் டைக்கும் சாகாது'' சொல்லி முடித்து விட்டு ஆயாசமாய் நடந்து சென்று கொண்டிருந்த ஆதவன் ஜாதிகளின் எல்லை கடந்த கடவுளாய்த் தெரிந்தான் தமிழரசியின் கண்களில்.

சாதி, மதம் என்று எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும் அனைத்தை யும் கடந்து உணர்வுகளில் ஊற்றெடுப் பது காதல் மட்டுமல்ல புனிதமான நட்பும் தான். அந்த நட்பெனும் அழகிய ஊற்று காலத்தால் அழியாத, வற்றாத நதியாக ஓடிக் கொண்டேயி ருக்கும்; நட்புள்ளங்கள் வாழும் வரை இந்த பூமியே அழகாகும்; சாதிப் பிரிவினை எனும் சாக்கடை எண்ணங்களின் அழிவில்.

*





வரையறை எல்லைகளுக்கப்பால் முயற்சிகளை மேற்கொள்ள நாம் விரும்புகின்றோம். எமது வெற்றிகரமான பயணத்திற்கு வழிகோலிய எமது 44 வருட சாதனைகளைக் கொண்டாட விரும்புகின்றோம். அது தைரியமும் துணிச்சலும் மிக்கதோர் பயணமாகும். மனித சக்தியின் கொண்டாட்டமாக வாழ்க்கையை அமைத்துவிட நாம் விரும்புகின்றோம்.

***Branch Manager***
கிளை முகாமையாளர்

***Assistant Manager (Credit & Collections)***
உதவி முகாமையாளர் (கடன் மற்றும் சேகரிப்புகள்)

***Marketing Executives (Fixed Deposits, Leasing & Hire Purchase)***
சந்தைப்படுத்தல்- நிறைவேற்றுநர்கள் (நிலையான வைப்புக்கள், குத்தகை மற்றும் வாடகைக் கொள்முதல்)

***Accounts Assistants***
கணக்கியல் உதவியாளர்கள்

***Trainee Documentation Assistants***
பயிலுநர் ஆவணவியல் உதவியாளர்கள்

விண்ணப்பிக்கும் பொருத்தமான விண்ணப்பதாரிக்கு தகுதி அனுபவங்கள் மற்றும் விண்ணப்பிக்கும் பதவிக்கு ஏற்ற ஆரோக்கியமான கல்விப் பின்னணி இருக்கவேண்டும். அவ்வாறான நிதித்துறை அனுபவமிருக்குமாயின் மேலதிக தகுதியாகக் கருதப்படும். 19-35 வயதுக்குட்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம். தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் சரளமான அறிவு அவசியம்.

**ஊதியம்**

*சரியான விண்ணப்பதாரிக்கு கவர்ச்சிகரமான தொழில் தரத்திற்கு சமமான ஊதியப் பொதியொன்று காத்திருக்கின்றது. சிறப்பான தொழில் முன்னேற்றங்களும் உண்டு.*


*இந்த விளம்பரம் வெளியான 7 நாள்களுக்குள் முழு சுயவிவரக் கோவை மற்றும் உறவினர் அல்லாத இரு நடுவர்களின் விவரங்களுடன் விண்ணப்பிக்குக. கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினை விவரமாகக் குறிப்பிட்டு கீழ்வரும் முகவரிக்கு விண்ணப்பம் செய்க.*

CIFL
Strength & Integrity

MANAGER-HUMAN RESOURCES
CENTRAL INVESTMENTS & FINANCE LTD
No.181, Dharmapala Mawatha, Colombo 07.
(A Finance Company registered with the Central Bank of Sri Lanka)

பொழுது சாய்ந்து நாலாபக்கமும் இருள் படர்ந்துவிட்ட பின்பும் வீட்டின் பின்பக்கம், அமைக்கப்பட்டிருந்த வைக்கோல் பட்டடையின் அருகிலே பாறை போலமைந்திருந்த பெரிய கல்லின் மேல் நாடியில் கைகளை வைத்து ஆழமாய்ச் சிந்தித்தபடி அசைவற்று அமர்ந்திருந்தாள் தமிழரசி.

கந்தசாமி-புஷ்பம் தம்பதியினரின் இல்லற நற்பயன், அண்ணன் சுதாவின் பாசத்திற்குரிய ஒரே தங்கை தமிழரசி. ஆனாலும், வீட்டிற்கு ஒரு பெண்பிள்ளை. என்றோ கடைக்குட்டி



# சாதி இரண்டொழிய....

சிறுகதை

**தீபா**

என்றோ செல்லமாய் வளரவில்லை அவள். வீட்டில் பொறுப்பான பெண்பிள்ளை நகை, நட்டு, மாளிகையென்று ஆடம்பரமில்லாத, அரைவயிறு, கால்வயிறென்று ஏழ்மையுமில்லாத எளிமையான வாழ்க்கைத் தரம் கொண்ட விவசாயக் குடும்பம் அவளுடையது.

தந்தையார் கந்தசாமி, சிறு துண்டு நிலமாயினும் சொந்த நிலத்திலேயே விவசாயம் செய்து வாழ்க்கையை ஓட்டுகின்ற விவசாயி உயர்தரப் பரீட்சையிலே சிறந்த சித்தி பெற்றிருந்தும் தொழில் தேடிக் களைத்து விட்டுத் தன்னை வெளிநாட்டுக்கு அனுப்பும்படி பெற்றோருடன் மல்லுக்கு நிற்பவன் அண்ணன் சுதா. சர்க்கரை நோயினால் அவதிப்படும் தாயாரைப் பாசத்தோடும் பொறுப்போடும் கவனித்துக் கொள்வாள் தமிழரசி. கூடுமானவரை தாயாரின் வேலைகளைத் தானே செய்வாள். தோட்டம் துரவு என்று காலையில் சென்றால் பொழுது சாய்ந்த பின்பு தான் வீடு திரும்புவார் கந்தசாமி. பல்கலைக் கழகத்தில் இரண்டாம் வருடத்தில் படித்து கொண்டிருக்கின்ற தமிழரசிக்குத் தான் ஓர் ஆசிரியராக வந்து மாணவர்களுக்குச் சேவை செய்வதோடு தன் குடும்பத்தைக் காலம் முழுவதும் பொறுப்போடு கவனித்துக் கொள்ள வேண்டும். தோட்டத்தில் ஓயாமல் பாடுபடும் தந்தைக்கு ஓய்வு கொடுக்க வேண்டும். தாயாரின் நோயைக் குணப்படுத்த வேண்டும். அண்ணன் சுதாவை நல்ல வேலையிலமர்த்தி அவனுக்குத் திருமணம் செய்து பார்க்கவேண்டும் என்றெல்லாம் ஏராளமான கனவுகள் உண்டு. தன்னுடைய வாழ்க்கையைப் பற்றிய கற்பனைகள் எதுவுமின்றி இலட்சியத்துக்காய் வாழ்கிறாள் அவள்.

இரவு மணி ஏழைத் தாண்டிவிட்டது. தோட்டத்திலிருந்து தந்தை கந்தசாமியும் வந்து விட்டார். ''என்னம்மா தமிழரசி மணியும் ஏழாய்ப் போச்சு, ஏனம்மா இன்னும் விளக்குக் கொளுத்தேல்ல'' முன்பக்கமிருந்து வந்த புஷ்பத்தின் குரல் அவளது சிந்தனைகளைக் கலைக்க, பல மணி நேரமாய்க் கல்மேல் அமர்ந்திருந்தவள் ஒருவாறு எழுந்தாள்.

முகம், கை,கால் கழுவிவிட்டு வந்து பூஜை அறைக்குச் சென்று விளக்கேற்றி விட்டு மௌனமாய் அவள் சாமிப்படங்களைப் பார்த்த அந்தப் பார்வையில் விரக்தி தெறித்தது. 'உனக்கு ஒவ்வொரு நாளும் இப்படி விளக்கேற்றிக் கும்பிட்டு என்னத்தைக் கண்டன்?' அவள் மனம் மௌனமாய்ப் புலம்பியது. அதற்கு மேலும் அங்கு நிற்க மனமின்றி அவசரமாய் சென்று ஒவ்வொரு விளக்கையும் எண்ணெய் விட்டுஏற்றி முன் விறாந்தை, கூடமென்று அவள் கொண்டு சென்று வைத்த போது மின்சாரமில்லாத அந்த வீடு புதிதாய் ஒளி பெற்றது.

தினமும் தோட்டத்திலிருந்து வந்ததும் கந்தசாமி இவளிடம் தான் தேநீர் கேட்பார். அன்றைக்கென்று அவரும் இன்னும் அவளை அழைக்கவில்லை என்றதும் அவளது துன்பம் பல மடங்காகிற்று. சுதா அண்ணன் தானறிந்ததை அப்பாவிடமும் கூறிவிட்டானோ? பூப்போன்ற உள்ளம் புழுவாய்த் துடித்தது.

எல்லோர் மீதும் வெறுப்புற்றவளாய்த் தன் அறைக்குள் சென்றாள். மேசை மீதிருந்த குப்பிவிளக்கை ஏற்றி வைத்து விட்டு மறுநாள் சமர்ப்பிக்க வேண்டிய இலக்கிய ஆய்வுக் கட்டுரையை எடுத்து எழுதத் தொடங்கிய போதும் அதை எழுதுகிற மனநிலையில் அப்போது அவள் இருக்கவில்லை. காலையில் அண்ணன் பேசிய வார்த்தைகள் மனதோரமாய் இன்னும் வலித்தன.

அப்படி என்னதான் நடந்துவிட்டது காலையில்? அதிகாலையில் எழுந்து அரக்கப் பரக்க வேலைகளை முடித்து விட்டு பல்கலைக் கழகம் செல்வதற்கு ஆறேகால் பஸ்ஸைப் பிடிப்பதற்காக அவசரமாய் ஆயத்தமாகிக் கொண்டிருந்தாள் தமிழரசி.

அங்கு வந்த அண்ணனைப் பார்த்ததும் ஆச்சரியமாய்ப் போயிற்று தமிழரசிக்கு. வழக்கமாக ஏழு மணியானால் கூட எழுந்திராத அண்ணன் இன்று இவ்வளவு வேளைக்கு எழுந்துவிட்டதை எண்ணி மனதுக்குள் மகிழ்ந்து கொண்டே, கொப்பிகளைக் கையில் தூக்கிய தமிழரசியை, ''என்னவாம் கம்பஸில் என்னென்னவோ நடக்குதாமே'' என்ற சுதாவின் குரல் இடைமறித்தது. அவனது முகத்தைப் பார்க்காது கொடியில் கிடந்த உடைகளில் எதையோ தேடுவது போல பாசாங்கு செய்தபடியே சற்றே வித்தியாசமான தோரணையில் கேட்டதும் எதுவும் புரியாதவளாய் '' என்னண்ணா சொல்லுறீங்கள்?'' அப்பாவியாய்க் கேட்டாள் தமிழரசி. ''என்ன தெரியாத மாதிரி நடிக்கிறாய்? எல்லாம் கேள்விப் பட்டனா் நீ இன்னும் அந்த ஆதவனோட கதைக்கிறியாம். நானுனக்கு அப்பவே சொன்னானெல்லே? அவன்ர சாதி வேற, இதெல்லாம் எங்களுக்குச் சரிப்பட்டு வராது, அவனோட கதை, பேச்சு வச்சுக் கொள்ளாதையெண்டு. அதுக்குப் பிறகும் கதைக்கிறாய் நீ இது தான் கடைசி முறை. இனி ஏதாவது கேள்விப்பட்டன் என்றால் வெட்டுவன் என்று அவனுக்குச் சொல்லி வை. பொரிந்து தள்ளிவிட்டுப் போய்விட்டான் சுதா.

சின்னஞ் சிறிய வயதில் நினைவு தெரிந்த நாளிலிருந்து நேற்று வரைக்கும் அண்ணனுடைய முகத்திலே கோபம் என்பதையே காணாமல் வளர்ந்த அவள் இத்தனை நாளும் பார்க்காத கோபத்தை எல்லாம் ஒன்று சேரப் பார்த்ததும் கலங்கித் தான் போய்விட்டாள். என்ன தான் அவன் கோபக்காரனாயிருந்தாலும் இவளிடம் மட்டும் கோபப்பட்டதேயில்லை. அம்மா, அப்பா இருந்தாலும் இவளிடம் அதிகமாய் அன்பு வைத்திருந்தவன் அவன் தான் செல்லமாய்த் ''தமிழ்'' என்று தான் அழைப்பான். அப்படிப்பட்ட அண்ணன் காலையில் இப்படி பேசி விட்டான்? நினைக்க நினைக்கக் கண்ணீர் பொங்கிப் பிரவாகித்தது அவளுக்கு.

அன்றைக்குப் பல்கலைக் கழகத்தில் யாருடனும் வாய்திறந்து கதைக்கவில்லை. வணக்கம் சொன்ன மதனிடம் பதிலுக்குப் புன்னகைக்கக் கூட முடியவில்லை. தானழுவதை யாரும் பார்த்துவிடக் கூடாதென்று நூலகம் சென்று தனியாய் ஓர் மூலையில் உட்கார்ந்து கண்ணீர் வற்றும் வரை அழுதாள்.

பொதுவாக ஓர் அமைதியான மாணவி தமிழரசி, சக மாணவிகளுடன் கூடத் தேவையிருந்தாலன்றி வாய்திறந்து கதைக்கமாட்டாள். அவர்களெல்லாம் மற்ற மாணவர்களுடன் சேர்ந்து சிரித்துக் கதைத்தாலும் இவள் மட்டும் அமைதியாய் அதையெல்லாம் ரசித்துக் கொண்டிருப்பாள். அவள் அப்படி இருந்தது தான் அவளுக்கும் சகமாணவன் ஆதவனுக்கும் இடையில் நட்பு மலரக் காரணமாயிற்று.

(26 ஆம் பக்கம் பார்க்க)

# ராசி பலன்

22-02-2010 முதல் 28-02-2010 வரை

## மேஷம்



அஸ்வினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம்

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவி செய்வர். மன அமைதி இருக்காது.

## இடபம்



கார்த்திகை 2, 3, 4-ம் பாதங்கள், ரோகிணி, மிருகசிரிடம் 1,2

காரியத்தடை இருக்கும், பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம், பணம் இருக்கும். உறவினர் அயலவர் உதவி செய்வர். தாய் நலம் தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமணவாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறை வேறாது. மன அமைதி இருக்காது.

## மிதுனம்



மிருக சீரிஷம் 3, 4-ம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர் அயலவர் விலகி இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறை வேறாது. மன அமைதி இருக்காது.

## கடகம்



புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயில்யம்

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய்நலம் தந்தை நலமில்லை. நல்ல வீடு வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

## சிம்மம்



மகம், பூரம், உத்திரம் 1-ம் பாதம்

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக் குறை நிலவும். உறவினர் அயலவர் பகை கொள்ளக் கூடும். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஸ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர் பார்ப்புகள் நிறை வேறாது. மன அமைதி இருக்காது.

## கன்னி



உத்திரம் 2,3,4-ம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1, 2-ம் பாதங்கள்

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

## துலாம்



சித்திரை 3, 4-ம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3-ம் பாதங்கள்

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர் பார்ப்புகள் நிறைவேறாது. நண்பர்களால் பிரச்சினை ஏற்படலாம். மன அமைதி இருக்கும்.

## விருட்சிகம்



விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமணவாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். எதிர்பார்ப்புகள் நிறை வேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மன அமைதி இருக்காது.

## தனுசு



மூலம், பூராடம், உத்திராடம் 1-ம் பாதம்

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு தாமதமாகலாம். பணம் பற்றாக்குறை நிலவும். உறவினர் அயலவர் பகை கொள்ள கூடும். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் உண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில் துறை முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறை வேறும். மன அமைதி இருக்காது.

## மகரம்



உத்திராடம் 2,3,4-ம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2-ம் பாதங்கள்

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமணவாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறை வேறும். மன அமைதி இருக்காது.


## கும்பம்



அவிட்டம் 3,4-ம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3-ம் பாதங்கள்

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாகுறை நிலவும். உறவினர் அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர் பார்ப்புகள் நிறை வேறாது. மன அமைதி இருக்காது.

## மீனம்



பூரட்டாதி 4-ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர் அயலவர் உதவுவர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது. எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.



கடந்த சனிக்கிழமை புலி ஆண்டைக் கொண்டாட ஆயத்தமான இலட்சக்கணக்கான சீனர்களால் பஸ் நிலையங்கள், ரயில் நிலையங்கள், விமான நிலையங்கள் ஆகியன நிரம்பி வழிந்தன. சந்திரப் புதுவருடத்தின் போது தமது குடும்பத்தாருடனும் உறவினர்களோடும் இருக்க வேண்டுமென்ற ஆவலில் மக்கள் வெள்ளம் அலைமோதியதைக் காணக் கூடியதாகவிருந்தது. சீனாவில் வருட இறுதி விடுமுறைகள் சீனர்களுக்கு மிக முக்கிய உற்சவ தினங்களாகும். சனிக்கிழமை புதுவருடத்தை தத்தமது உறவினர்கள் நண்பர்களுடன் வாணவேடிக்கைகளுடன் கோலாகலமாகக் கொண்டாட சீன மக்கள் பெரிதும் விரும்புவதுடன் இந்த கொண்டாட்டங்கள் மணிக்கணக்காக நீடிப்பது உண்டு.



சீனாவிலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்று தொழில் புரிபவர்களும், புற நகரப் பகுதியில் கட்டட நிர்மாணப் பணிகளில் ஈடுபடுவோரும் தமது குடும்பத்தினருடன் உல்லாசமாகக் கழிப்பதற்கு இந்தக் காலப் பகுதியே வாய்ப்பாக அமைகின்றது.

# சீனாவில் புலி ஆண்டு




புலி ஆண்டு (Year of the Tiger) பாரம்பரிய எல்லையற்ற சக்தியைக் கொண்டு வரும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை சீனர்கள் மத்தி யில் நிலவிவருகின்றது. எனினும் இக்காலப் பகுதி திருமணத்துக்கு உகந்ததல்ல எனும் நம்பிக்கையும் உள்ளது. இந்த வருடம் நாட்டின் பொருளாதாரத்துக்கு மிகவும் உகந்ததாக நோக்கப்படுகின்றது.

பீஜிங் நகரமும் வர்த்தகத் தலை நகரமான ஷாங்ஹாய் நகரும் பிரமாண்டமான பட்டாஸ் வெடிகளாலும், வாணவேடிக்கைகளாலும் அதிர்ந்தன. நகர் முழுவதும் புகை மண்டலமானது. புது வருடத்தினத்தன்று பட்டாஸுகளை வெடிக்க வைத்து, வானவேடிக்கைகளை நடத்துவதன் மூலம் துர்வேதங்களை விரட்டி வீட்டுக்கு வீடு செல்வமும் செல்வாக்கும் தெய்வத்தால் அனுக்கிரகிக்கப்படும் என சீனமக்கள் நம்புகிறார்கள்.

ஞாயிற்றுக்கிழமை காலை வரை இந்த அமர்க்களங்கள் உச்ச ஸ்தானியில் நடைபெற்றன. சீனமக்கள் புலி புதுவருடத்தை எதிர் கொள்ளுமாறும் நாட்டின் முன் விஸ்வருபம் எடுத்து நிற்கும் சவால்களை எதிர்கொள்ள திடசங்கற்பம் கொள்ள வேண்டுமெனவும் சீனப் பிரதமர் வென் ஜியாபாவோ நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

2010 ஆம்ஆண்டில் சீனா உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் சிக்கலான பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிவருமென பிரதமர் ஊகம் தெரிவித்தார் என்று அரச செய்தி நிறுவனமான ஹினஹூவா செய்தி வெளியிட்டுள்ளது.

மக்கள் அமைதி மனப்பாங்குடன் செயற்பட்டு எதிர்வரும் சவால்களை உறுதியாகவும் தைரியமாகவும் எதிர்கொள்ள வேண்டுமென சீனப் பிரதமர் நாட்டு மக்களைக் கேட்டுள்ளார் என்று அச்செய்தி நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

கடந்த புதுவருட காலங்களை எய்ட்ஸ் நோயாளிகளுடனும், பூகம்பத்தில் தப்பிப் பிழைத்தோருடனும் சீனப் பிரதமர் கழித்துள்ளார்.

இம்முறை குவான்சியின் தென்பகுதியில் உள்ள வரட்சியால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் பிரதமர் தனது புதுவருடத்தைக் கொண்டாடினார் என அச்செய்தி நிறுவனம் மேலும் தெரிவித்தது.

தமிழில் - சுப்பர்



# கல்லீரல் வீக்கத்தைக் குறைக்கும் பப்பாளி!



கல்லீரல் நோய்க்கு பப்பாளி, அமுக்கிராங்கிக் கிழங்கு ஆகியவை முக்கிய நிவாரணிகளாக கருதப்படுகின்றன. அமுக்கிராங்கிழங்கு சூரணம் அரை ஸ்பூன் எடுத்து, தேனில் கலந்து காலை நேரத்தில் சாப்பிட்டு வந்தால் இந்தக் கோளாறெல்லாம் காணாமல் போய்விடும்.

கீழாநெல்லி, கரிசலாங்கண்ணி இரண்டையும் சம அளவு எடுத்து அரைத்து, அதில் நெல்லிக்காய் அளவு எடுத்து, பசும்பாலில் கலந்து சாப்பிட்டு வந்தால் கல்லடைப்பு, கல்லீரல் வீக்கமெல்லாம் சரியாகி விடும். கொவ்வை இலை 100 கிராம், சீரகம் 20 கிராம், சின்ன வெங்காயம் 3... இவை மூன்றையும் ஒன்றாக சேர்த்து இடித்து, சாறு பிழியுங்கள். இதை காலையிலும், மாலையிலும் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வந்தாலும் கல்லடைப்பு நோய் எல்லாம் சரியாகிவிடும். இதைச் சாப்பிடும் போது பேதியாகும். அதுக்காக பயப்படத் தேவையில்ல. இதை மூன்று நாள் குடித்து விட்டு,3 நாள் இடை வெளிவிட்டு திரும்ப 3 நாள் குடிக்க வேண்டும். குணமடையும் வரை இதேமாதிரி இடை வெளிவிட்டு விட்டுக் குடிக்க வேண்டும். கொடிகள்ளியை எடுத்து தீயில் வதக்கி சாறு பிழிந்து ஒரு ஸ்பூன் எடுங்க வேண்டும். அதில் விளக்கெண்ணெய் ஒரு ஸ்பூன் சேர்த்து காலை வெறும் வயிற்றில் சாப்பிட வேண்டும். இதைச் சாப்பிடும் போதும் பேதியாகும். கவலைப்படக் கூடாது. மூன்று நாள் சாப்பிட்டு,3 நாள் இடைவெளிவிட்டு நோய் தீரும் வரை குடிக்க வேண்டும்.

இந்த விஷயத்தைக் கேட்கவே கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கும். ஆனால், வைத்தியம் என்று வந்துவிட்டால் அருவருப்பெல்லாம் படக்கூடாது... ஆமா! அதாவது, பசுமாட்டு சிறுநீர் ஒரு பாலாடை அளவு, நொச்சிச்சாறு ஒரு பாலாடை அளவு எடுத்து இரண்டையும் கலந்து தினமும் காலையில் சாப்பிட்டு வந்தால் கல்லடைப்பாவது, கல்லீரல் வீக்கமாவது... எல்லாம் மறைந்துவிடும். இதைச் சாப்பிடும்போது புளி, காரம், மாமிசம் சேர்க்கக் கூடாது.

கடைசியாக ஒரு சாதாரண வைத்தியம். தினமும் பப்பாளிப்பழம் சாப்பிட்டு வந்தால் இந்த கல்லீரல் வீக்கம், மண்ணீரல் வீக்கம், கல்லடைப்பு எல்லாம் நீங்கிவிடும்.









இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிரைசஸ் ஸ்தாபனத்தினால் 2010, பெப்ரவரி 21 ஆம் திகதி வெளியிடப்பட்டது.